www.padippakam.com

டிசம்பர் – 99
ம.க.இ.க. மாத இதழ்
ரூ. 5.00

# புதிய கலாச்சாரம்

## காவல் துறையினர்



## குற்றவாளிகளா? மன நோயாளிகளா?



ஆர்.எஸ்.எஸ். முகாமும் ஈரோட்டுப் பாசறையும்

ரசியா: மீண்டும் சோசலிசம்?

படிப்பகம்

www.padippakam.com

# ‘கற்பு’ இழந்த பெண்ணுக்கு மானம் உண்டா?

ஒரு சினிமா காட்சியில் கதாநாயகியை வில்லன் மானபங்கப்படுத்த நெருங்கும் போது பார்ப்பவர்களின் உள்ளம் படபடக்கிறது. காப்பாற்ற கதாநாயகன் வரமாட்டானா என்று ரசிகர்கள் ஏங்கித் தவிக்கிறார்கள். கண்ணாடியைப் பொத்துக் கொண்டு கதாநாயகன் குதித்து வில்லனைப் புரட்டி எடுக்கையில் அரங்கமே மகிழ்ச்சி வெள்ளத்தில் மூழ்குகிறது. விசில் சத்தம் பறக்கிறது.

ஆனால் நிஜ வாழ்க்கையில் ஒரு துணை நடிகை பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்படும்போது ‘‘இதெல்லாம் சகஜம், பணத்த வாங்கிட்டு ஏமாத்தி இருப்பா’’ என்று திரைக்கு வெளியே வசனம் எழுதுகிறார்கள் ரசிகர்கள். என்ன இது வினோதமான முடிவு என்று யோசிக்கிறீர்களா? திரைப்படத்தில் மட்டுமல்ல வாழ்க்கையிலும் துணை நடிகைகளுக்கு ‘‘சுபமான முடிவு’’ கைகூடுவது இல்லை.

வெள்ளித் திரையுலகில் ரசிகர்களின் அஞ்சலியும் வருத்தமும் கதாநாயகிகளுக்கு சாத்தியம். பிரியா போன்ற துணை நடிகைகளுக்கு விபச்சாரி பட்டங்களே நிரந்தரம்.

சமீபத்தில் பிரியா என்ற துணை நடிகையை வடபழனியில் 4 பேர் கொண்ட ரவுடி கும்பல் கத்தியைக் காட்டி மிரட்டி ‘‘துணை நடிகைதானே படுடி’’ என்று பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கியுள்ளது. சத்தியராஜ் பாணியில் வசனம் எழுதிய ‘படிப்பாளிகளை’ விஞ்சி விட்டனர் சமூக விரோதிகள்.

இயக்குனர் இமயத்தையும் இயக்குனர் சிகரத்தையும் அதே சினிமா துறையைச் சேர்ந்த தொழிலாளர்கள் கேள்வி கேட்டதாலேயே கவுரவம் போச்சு, மானம் போச்சு என்று கதறிப் பொங்கியெழுந்த கனவான்கள் அதே துறையைச் சேர்ந்த ஒரு துணை நடிகையின் கவுரவம் சிதைக்கப்பட்டதைக் கண்டு கொள்ளக் கூட இல்லை. ஒரு வேளை சினிமாவுக்குள்ளே நாம் செய்வதை வெளியே சிலர் செய்திருக்கிறார்கள் என்ற பங்காளி பாசம் பொங்கி இருக்கலாம்.

இதுதான் உண்மையும் கூட. ஏனெனில் இந்த மாபெரும் படைப்பாளிகள் தான் நடிகைகளை குறிப்பாக துணை நடிகைகளை திரைப்படத்தில் கவர்ச்சிப் பண்டங்களாக முந்தானையை விலக்கி விட்டு பாயா கடையில் உட்கார்ந்து பாட்டுப்பாடும் கடைக்காரியாக, கதாநாயகிகளுக்குப் பின்னே டூபீஸ் உடையில் ரசிகர்களைக் காட்சிக்குள் இழுத்து வைக்கும் கவர்ச்சி மிருகங்களாகக் காட்டுகின்றனர்.

மணிரத்தினத்தின் வீட்டில் குண்டு வெடித்ததற்காகக் குரைத்த சூப்பர் ஸ்டார், சுப்ரீம் ஸ்டார்கள் ஒரு துணை நடிகையின் வாழ்க்கை சிதைக்கப்படும் போது மவுனமாய் இருப்பதற்குக் காரணம் ரவுடிகள் செய்த வேலையை இவர்கள் முன்னரே செய்த மூத்த குடிகள் என்பதுதான்.

இத்தகைய பாலியல் வன்முறைக்கு ஆளாக்கப்பட்ட பின்னரும் பிரியா என்ற அந்தத் துணை நடிகை காவல் நிலையத்தில் புகார் கொடுத்து, ரவுடிகளை அடையாளம் காட்டி, வழக்குப் பதிவு செய்து தனக்கு நேரிட்ட அநீதியை வெளியே கொண்டு வந்திருக்கிறார். இதுதான் புதுமை.

பாலியல் வன்முறையில் ஈடுபட்ட ரவுடிகள், ரவுடிகள் மீது வழக்குப் பதிவு செய்த காவல்துறை, இதையெல்லாம் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த திரையுலகத்தினர் - இவர்கள் அனைவருக்குமே இது புரியாத புதிராகவும் புதுமையாகவும் தான் இருந்திருக்கும்.

‘கற்பை’ இழக்கத் தயங்கக்கூடாது என்பது திரையுலக வாழ்வின் முதல் விதியாக இருக்கும் போது இந்தப் பெண் ‘மானத்துக்காக’ப் போராட்டம் நடத்தியிருப்பது அவர்களுக்கு விநோதமாகத் தான் இருந்திருக்கும்.

‘‘கற்பிழந்தவர்களுக்கு மானம் ஏது? ஒரு மனைவியைக் கணவனோ, விலைமாதுவை ஒரு வழிப்போக்கனோ கற்பழிக்க முடியுமா?’’ என்பதுதான் திரையுலகத்தினர் கேட்க நினைத்தும் கேட்காத கேள்வி. எனவேதான் அந்தப் பெண் அவமானப்படுத்தப்பட்டு விட்டதாக அவர்களால் கருதமுடியவில்லை.

‘‘பாலியல் ஒழுக்கம் சார்ந்த கற்புதான் மானம்’’ என்ற தமிழ்த் திரைக்கதைக்கும், நடிப்புக்கும் தனது போராட்டத்தின் மூலம் முற்றுப்புள்ளி வைத்திருக்கிறார் பிரியா.

ஏனென்றால் பிரியா போன்ற துணை நடிகைகளுக்கு சினிமா, வாழ்க்கை இரண்டுமே நடிப்பதற்கான வாய்ப்பை வழங்குவதில்லை.

● சித்தன்

## தஞ்சையில் சீனப்புரட்சியின் 50-ஆம் ஆண்டு விழா

தோழர். மா.சே.துங்கின் தலைமையில் சீனக் கம்யூனிஸ்டு கட்சி 1949 அக்டோபர் முதல் நாளன்று மக்கள் சீனத்தைத் தோற்றுவித்தது. நீண்ட மக்கள் யுத்தப் பாதையின் மூலம் மக்கள் ஜனநாயக சர்வாதிகாரத்தை நிறுவிய சீனப் புரட்சி, பின்தங்கிய நாடுகளின் தொழிலாளி வர்க்கத்திற்கும், விவசாயிகளுக்கும் வழிகாட்டும் ஒளி விளக்காயிற்று.

அம்மாபெரும் சீனப்புரட்சியின் 50-ஆவது ஆண்டு விழாவை மக்கள் கலை இலக்கியக் கழகம் 17.11.99 அன்று தஞ்சை பெசன்ட் அரங்கத்தில் நடத்தியது.

கம்யூனிசமே விடுதலைக்கான தத்துவம் எனும் உண்மையைப் பல கோணங்களிலிருந்தும் வாழ்க்கை அனுபவங்களிலிருந்தும் எடுத்தியம்பும் கவியரங்கில் தோழர்கள் துரை சண்முகம், தீபன், கோமேதகம், மணிகோபன்னீர் செல்வம், அரசு ஆகியோர் கவிதை வாசித்தனர்.

கம்யூனிசத்தின் தோல்வி குறித்த முதலாளித்துவப் பிரச்சாரங்களை முறியடிக்கும் விதத்தில் தோழர். காளியப்பன், கதிரவன் ஆகியோர் உரையாற்றினர். மையக் கலைக் குழுவின் இசை நிகழ்ச்சியுடன் விழா நிறைவுற்றது. தோழர்கள், ஆர்வலர்கள் குறிப்பாக இளைஞர்கள் அரங்கில் நிறைந்திருந்தனர். ●


*வெளி வருகிறது!*

**வசந்தத்தின் இடிமுழக்கம்**

ம.க.இ.க.வின்
ஒன்பதாவது பாடல் ஒலிப்பேழை.

ஒலிப்பேழைகள் தேவைப்படுவோர்,
ம.க.இ.க. கிளைகள் மற்றும்
புதிய கலாச்சாரம் முகவரியுடன்
தொடர்பு கொள்ளவும்.




படிப்பகம்

www.padippakam.com

கலை இலக்கியம்
யாவும் மக்களுக்கே

• போர்: 17
• குரல்: 6, 7
• டிசம்பர் 99

உள்நாடு:
தனி இதழ்: ரூ. 5.00
ஆண்டு சந்தா: ரூ. 60.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 9

படைப்புகள் அனுப்பவும்
தகவல்களுக்கும்

இரா. சீனிவாசன்,
3, நான்காவது தெரு,
செகந்நாதபுரம்,
சேத்துப்பட்டு,
சென்னை - 600 031.

# கருணையினால் அல்ல!

இராஜீவ் கொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள நளினி, முருகன். சாந்தன், பேரறிவாளன் ஆகிய நால்வரின் கருணை மனுவை, தமிழக அமைச்சரவையின் ஆலோசனையைக் கேட்காமலேயே ஆளுநர் நிராகரித்தது தவறு என்று சென்னை உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. இராஜீவ் கொலையை யொட்டிக் 'குற்றம்' இழைக்காமலேயே தண்டனை பெற்ற - தமிழகம் முழுவதும் தாக்கப்பட்ட - தி.மு.க. தொண்டர்களின் தலைவர் கருணாநிதி இக்கருணை மனு வின் மீது கருத்துச் சொல்லியாக வேண்டும்.

இந்நால்வரின் தண்டனையும் ரத்து செய்யப்பட வேண்டுமென்று நாம் கோருகி றோம். இராஜீவ் கொலை என்பது அடிப்படையில் ஓர் அரசியல் நடவடிக்கை. இந்திய ஆளும் வர்க்கத்தின் தெற்காசிய விரிவாக்க நோக்கத்திற்கு ஈழத்தமிழ் மக்களின் தன்னுரிமைப் போராட்டத்தைப் பயன்படுத்திக் கொண்டு அதைச் சீர்கு லைத்தது இந்திய அரசு. 'இந்திய இலங்கை ஒப்பந்தம்' என்றொரு அரசியல் சதித்திட் டத்தை உருவாக்கி ஈழத்தமிழ் மக்கள் மீது திணித்தது. தன்னுரிமையை மறுக்கும் அந்த ஒப்பந்தத்தைப் புலிகளும் ஈழத்தமிழ் மக்களும் ஏற்க மறுத்தனர். இதையே ஒரு முகாந்திரமாகக் கொண்டு இந்திய இராணுவம் ஈழத்தின் மீது ஓர் ஆக்கிரமிப்பு யுத்தம் நடத்தியது. ஆயிரக் கணக்கான தமிழ் மக்களும், புலிகளும் கொல்லப்பட்ட னர்; பாலியல் வன்முறை உள்ளிட்ட அனைத்து வெறியாட்டங்களையும் இந்திய இராணுவம் நடத்தியது; இறுதியில் தோல்வியுற்றுத் திரும்பியது.

இந்த ஆக்கிரமிப்புப் போரின் எதிர் விளைவுதான் இராஜீவ் கொலை. எனவே அது போர்க் குற்றவாளிக்கெதிரானதொரு நடவடிக்கை. இந்திய இலங்கை ஒப்பந்தத் தால் புனிதப்படுத்தப்பட்ட தமது ஆக்கிரமிப்பை ஓர் அரசியல் நடவடிக்கையாகச் சித்தரித்துக் கொள்ளும் இந்திய ஆளும் வர்க்கம், இந்த பதில் நடவடிக்கையை மட்டும் அரசியல் வகைப்படாத கிரிமினல் நடவடிக்கையாகச் சித்தரிப்பதும் அதன் அடிப்படையில் தண்டிப்பதும் மோசடியாகும். இராஜீவ் கொலையுண்டபோதும் நாம் இந்தக் கருத்தைத்தான் முன்வைத்தோம். இன்று இந்நால்வரின் தண்டனை ரத்து செய்யப்பட வேண்டும் என்பதையும் அதே அடிப்படையில்தான் கோருகிறோம்.

அடுத்து இந்தத் தீர்ப்பும் தண்டனையும் சட்டவிரோதமானது என்கிறோம். ஏற்கனவே 26 பேருக்கு மரண தண்டனை விதித்த சிறப்பு நீதிமன்றத்தின் தீர்ப்பும் தற்போது நான்கு பேருக்கு மரண தண்டனையை உறுதி செய்திருக்கும் உச்ச நீதிமன் றத்தின் தீர்ப்பும் அரசியல் நோக்கத்தின் அடிப்படையிலேயே வழங்கப்பட்டுள்ளன. இந்தக் கொலை பயங்கரவாத நடவடிக்கை அல்ல என்றும், எனவே அச்சட்டத்தின் கீழ் வழக்கு தொடர முடியாது என்றும் உச்ச நீதிமன்றம் ஏற்கனவே கூறியுள்ளது; தடா சட்டமும் காலாவதியாகிவிட்டது. தற்போது இந்திய தண்டனைச் சட்டத்தின் கீழ் இத்தீர்ப்பு வழங்கப்பட்டிருந்தாலும், தீர்ப்புக்கு ஆதாரமாகக் கொள்ளப்பட்ட சாட்சியங்களும் வாக்குமூலங்களும் தடா சட்டத்தின் கீழ் பெறப்பட்டவைதான்.

மேலும், குற்றம் சாட்டப்பட்டோருக்காக வாதாடிய வழக்கறிஞர்கள் முன் வைத்த வாதங்களுக்கு விடை கூறாமலேயே கட்டைப் பஞ்சாயத்து தீர்ப்பை அளித் திருக்கிறது உச்ச நீதிமன்றம். தீர்ப்பை மீளாய்வு செய்யக் கோரும் மனுவை பரிசீல னைக்கே எடுத்துக் கொள்ளாமல் மரண தண்டனையை மீண்டும் உறுதி செய்திருக்கி றது. தாங்களே புனிதம் என்று கூறும் சட்ட நடைமுறைகளை உச்ச நீதிமன்றம் அலட்சியப்படுத்தியுள்ளது. எனவே சட்ட ரீதியாகச் செல்லத் தக்கதல்ல என்ற அடிப்படையிலும் இத்தண்டனை ரத்து செய்யப்பட வேண்டுமெனக் கோருகிறோம்.

மரண தண்டனை விதிக்கப்பட்ட நால்வரும் இந்நடவடிக்கையில் நேரடியாகப் பங்கேற்றவர்களல்ல என்ற போதிலும், சட்ட ரீதியாகவே கூட இது செல்லத்தக்க தல்ல என்ற போதிலும் உச்ச நீதிமன்றம் இவ்வாறு தீர்ப்பு வழங்குவதற்கும், ஆளுநர் பாத்திமா பீவி உச்ச நீதிமன்ற நீதிபதியாக இருந்தபோது ஆளுநரின் அதிகாரம் குறித்துத் தானே வழங்கிய தீர்ப்புக்கு எதிராக, இப்போது கருணை மனுவை தன்னிச் சையாக நிராகரிப்பதற்கும் காரணம் இருக்கிறது.

''ஈழ விடுதலைக்கு இந்திய அரசு எவ்வளவோ உதவிய போதிலும், அவர்க ளது நன்மைக்காகவே ஒரு ஒப்பந்தத்தை அரும்பாடுபட்டு இராஜீவ் உருவாக்கித் தந்த போதிலும் நன்றிகெட்டத் தனமாகப் புலிகள் அமைதிப்படைச் சிப்பாய்களைக் கொன்றனர்; தேர்தலில் வெற்றி பெற்றிருக்கக் கூடிய ஒப்பற்ற இளம் தலைவர்

படிப்பகம்

www.padippakam.com

இராஜீவையும் கொன்றுவிட்டனர்'' - என்ற பொய்ப் பிரச்சாரம் அன்று முதல் இன்றுவரை தொடர்ந்து இங்கே நடத்தப் படுகிறது. ஈழத்தில் இந்திய அரசு நடத்திய சதிகள், ஒப்பந்தத்தின் மோசடித் தன்மை, 'அமைதி'ப் படையின் அட்டூழியங்கள் என்பன முதல் அத்தேர்தலில் தோல்வியடையும் நிலையில்தான் இராஜீவ் இருந்தார் என்பது வரையிலான பல உண்மைகள் திட்டமிட்டே இருட்டடிப்பு செய்யப்படுகின்றன. மரண தண்டனையை ஆதரிக்கும் சோ முதல் வாழப்பாடி ஈறான அனைவரும் இப்பொய்களையே தம் தரப்பு வாதங்களாக முன் வைக்கின்றனர். எனவே, இப்பொய்ப் பிரச்சாரம் தோற்றுவித்த உணர்ச்சியின் அடிப்படையில்தான் உச்ச நீதிமன்றத் தீர்ப்பும், ஆளுநரின் நடவடிக்கையும் அமைந்திருக்கின்றன.

இந்நிலையில் இந்த மரண தண்டனையை ரத்து செய்யக் கோருவோரின் அணுகுமுறை எவ்வாறிருக்க வேண்டும் என்பதைப் பரிசீலிப்பதும் அவசியமாகிறது.

இன்று நால்வரின் மரண தண்டனையை ரத்து செய்வதற்குப் பெரிதும் முனைந்து வருபவர்கள் (அநேகமாக) அனைவருமே, அன்று இராஜீவ் கொலை செய்யப்பட்டபோது 'கொலையாளி'களை வன்மையாகக் கண்டித்தார்கள்; இராஜீவுக்கு இரங்கல் தெரிவித்தார்கள்; இந்தக் கொலை சி.ஐ.ஏ.வின் சதி என்றார்கள்; இதற்கும் புலிகளுக்கும் தொடர்பில்லை என்றும் நீதிமன்றம் விசாரித்து யாரைக் குற்றவாளி என முடிவு செய்தாலும், அவர்களுக்குக் கடும் தண்டனை வழங்கட்டுமென்றும் முன்மொழிந்தார்கள்.

இத்தகைய போக்குகளை விமரிசித்து இராஜீவ் கொலைக்கான நியாயங்களை நாம் எழுதினோம். அதன் விளைவாக நாம் 'மல்லிகை'யின் மணத்தை நுகர நேர்ந்ததுடன், ஏராளமான தோழர்கள் தடா, தே.பா. சட்டம், ராஜத் துரோகம் உள்ளிட்ட வழக்குகளில் சிறை செல்லவும் நேர்ந்தது. எனினும் 'ஈழத்தமிழன்' என்று சொன்னாலே வேட்டையாடப்பட்ட ஒரு காலத்தில், ஈழ ஆதரவு எனப் பேசினாலே கைது செய்யப்பட்ட காலத்தில் 'புத்திசாலித்தனமாக' மவுனம் சாதிப்பதைவிட வெளிப்படையாகப் பேசுவது நம் அரசியல் கடமை என்ற அடிப்படையில் நாம் அவ்வாறு செய்தோம்.

அன்று அரசியல் பேசாமல் ''நீதிமன்றம் தீர்ப்பளிக்கட்டும்'' என்று சட்ட வாதத்தில் நுழைந்து தப்ப முயன்றவர்களது அணுகுமுறை தவறு என்று மீண்டும் இப்போது நிரூபிக்கப்பட்டுள்ளது. அரசியல் முன்முயற்சியை இழக்காமல் சட்ட வாய்ப்புகளைப் பயன்படுத்துவது என்பது வேறு, சட்ட வாதத்தையே அரசியலாக்கிக் கொள்வதென்பது வேறு.

சட்ட வாதத்தையே அரசியலாக்கிக் கொள்பவர்கள் இந்திய ஆளும் வர்க்கத்தின் அரசியல், அதன் சட்டம், நிறுவனங்கள் இவற்றின் எல்லைக்குள் நின்று பேச முடியுமேயொழிய இவற்றைக் கேள்விக்குள்ளாக்க முடியாது. எனவே தான் ''ஒரு ஆக்கிரமிப்பு போர் குற்றவாளியைக் கொன்றதற்குத் தூக்கு தண்டனையா'' என்ற கேள்வியை இன்றைக்கும் அவர்களால் முதன்மைப்படுத்த இயலவில்லை. நீதிமன்றத்தின் மீது தங்களது விசுவாசத்தைப் பிரகடனம் செய்தவர்கள் தீர்ப்பின் மோசடியை முதன்மைப்படுத்தியும் இயக்கம் எடுக்க முடியவில்லை. அதன்மீது அதிருப்தி தெரிவிக்க மட்டுமே முடிகிறது.

நான்கு பேரைத் தூக்கிலிடுவது அரசியல் ரீதியான அநீதி, சட்டரீதியாகவும் அநீதி என்று போராடுவதற்குப் பதிலாக, ''இந்த நால்வருக்காகக் கேட்கவில்லை; மரண தண்டனையே ஒழிக்கப்பட வேண்டும் எனக் கோருகிறோம்'' - என்று முதலாளித்துவ மனிதாபிமானத்தின் அடிப்படையில் கோரிக்கை எழுப்பப்படுகிறது. அப்படியானால் ''ஆட்டோ சங்கருக்கு ஏன் கேட்கவில்லை?'' என்று பார்ப்பனத் திமிருடன் சோ கேட்டால் ''அப்போதே கேட்காதது தவறுதான்'' என்று பதிலளிக்கிறார் இராமதாஸ். அதுமட்டுமல்ல, குறிப்பாக இந்த நால்வருக்காகப் பேசாமல் பொதுவாக மரண தண்டனை ஒழிப்பு பற்றிப் பேசும் கலைஞர், வை.கோ. போன்றோரை அரசியல் ரீதியாக அம்பலப்படுத்தி நிர்ப்பந்தம் கொடுப்பதற்குப் பதில் அவர்களது புகழ் பாடப்படுகிறது. மரண தண்டனை விதிக்கப்பட வேண்டிய மத வெறிக் கொலைகாரன் தாக்கரே போன்றோரிடமும் ஆதரவு திரட்டப்படுகிறது.

இறுதியாக சோனியாவே 'குற்றத்தை' மன்னித்துவிட்டார். யாரையும் தூக்கிலிட வேண்டுமெனத் தானோ, தன் பிள்ளைகளோ விரும்பவில்லை எனக் கூறிவிட்டார். 'மிகக் கொடிய கொலையைச் செய்த குற்றவாளிகளுக்கும்' இரக்கம் காட்டிய தாயுள்ளத்துக்கு நன்றி தெரிவிக்க வார்த்தையில்லாமல் தடுமாறுவதாகக் கூறியுள்ளார் ராமதாஸ். மரண தண்டனை ரத்தாவதற்கு முன்னால், இராஜீவ் கொலையின் அரசியல் ரீதியான நியாயத்தையும், நால்வரும் நிரபராதிகள் என்ற சட்டபூர்வமான உண்மையையும் ஒரே வாக்கியத்தில் ரத்து செய்துவிட்டார் ராமதாஸ்.

ஜெயின் கமிசன் அறிக்கையில் பொய்க்குற்றம் சாட்டப்பட்ட தி.மு.க.வை அமைச்சரவையிலிருந்து நீக்க வேண்டும் என்று கோரி அதற்காக ஐக்கிய முன்னணி ஆட்சியைக் கவிழ்த்த காங்கிரசு - சோனியாவின் திடீர்க் கருணைக்குப் பல காரணங்கள் இருக்கலாம்.

புலிகளின் விரோதம் தேவையில்லை என்பதில் தொடங்கி, இந்த அறிவிப்பு அளிக்கக்கூடிய 'அனுதாப அரசியல்' ஆதாயம் வரை, காரணம் எதுவாயுமிருக்கலாம். எனினும் சோனியாவின் மனிதாபிமானம் நால்வரையும் மரண தண்டனையிலிருந்து விடுவிக்கு முன்னால், அவரது கணவரை ஈழ ஆக்கிரமிப்புப் போர்க் குற்றத்திலிருந்து - வெகுசனக் கருத்திலும் - விடுதலை செய்துவிடும். ''மரண தண்டனை ஒழிப்பு - மனிதாபிமான'' முழக்கத்தின் சாதனை இது.

என்னதானிருந்தாலும் நான்கு பேரைத் தூக்கு மேடையில் நிறுத்தி வைத்துக் கொண்டு அரசியல் பேசிக் கொண்டிருக்க முடியுமா என்று சிலர் கேட்கலாம். நான்கு பேரின் உருவத்தில் தூக்கு மேடையில் நின்று கொண்டிருப்பது ஒரு அரசியல் நியாயம். மரண தண்டனை ஒழிப்பு எனும் பொதுவான முழக்கம் அவர்களைக் காப்பாற்றக் கூடும்; ஆனால் அந்த அரசியல் நியாயத்தை அது தூக்கிலிட்டுவிடும்.

மரண தண்டனை என்பது குற்றவியல் சட்டம் சார்ந்த பிரச்சினை மட்டுமல்ல; வர்க்க, சாதி, இன ஒடுக்குமுறை நிலவும் சமுதாயத்தில், அந்த ஒடுக்குமுறைகளின் விளைவாக எந்த நீதிமன்ற விசாரணையுமின்றி அன்றாடம் ஆயிரக்கணக்கான மக்களின் உயிர் பல வடிவங்களில் பறிக்கப்படுகின்ற சமுதாயத்தில், அவற்றுக்கெதிராகப் போராடும் மக்கள் 'எதிர் வன்முறையைப் பயன்படுத்தும் உரிமை'யுடனும் நேரடியாகச் சம்பந்தப்பட்டது இந்தப் பிரச்சினை. இந்த உரிமையின் அடிப்படையில் நால்வரின் மரண தண்டனையும் ரத்து செய்யப்பட வேண்டும் என்று கோருகிறோம் - கருணையினால் அல்ல.

அட்டை ஓவியம்:
**கோபு**



படிப்பகம்

www.padippakam.com

## போப் வருகை:

# ஆர்.எஸ்.எஸ். முகாமும் ஈரோட்டுப் பாசறையும்

இரட்டை அர்த்தப் பாடல் என்று எதுவும் கிடையாது; மறைபொருளாக அந்தப் பாடல் எதைச் சொல்ல வருகிறதோ அதுமட்டும்தான் அந்தப் பாடலின் பொருள் என்று ஒருமுறை கண்ணதாசன் சொன்னதாக நினைவு. அது போல, பாரதீய ஜனதாவின் இரட்டை வேடம் என்று நாம் சொல்வதிலும் இனி மேல் பொருள் இல்லை எனத் தோன்றுகிறது.

அக்டோபர் - 14: வாஜ்பாயியின் மந்திரிசபை பதவி ஏற்ற செய்தி தினசரிகளில் வெளிவந்தது. கலைஞர், வை.கோ, ராமதாசு, பஸ்வான், மம்தா, பெர்னாண்டஸ் உள்ளிட்ட சிறுபான்மையினரின் காவலர்கள் முதல் பக்கத்தில் பல்லிளித்துக் கொண்டிருந்தனர்.

மூன்றாவது பக்கத்தில் விசுவ இந்து பரிசத் தன் கோரப் பற்களைக் காட்டியிருந்தது. போப் வருகையை எதிர்த்து மூன்று கோரிக்கைகளை அது முன்வைத்திருந்தது.

"மதமாற்றத்தைக் கண்டிக்க வேண்டும், இந்துக்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளுக்கு மன்னிப்புக் கேட்க வேண்டும், ஏசுவே ரட்சகர் என்று சொல்லக் கூடாது. கடவுளை அடையப் பலவழிகள் உள்ளன என்று ஒப்புக் கொள்ள வேண்டும்" - இக்கோரிக்கைகளை ஏற்றால் மட்டுமே போப் இந்தியாவில் காலடி வைக்கலாம் என்று அறிவித்திருந்தது விசுவ இந்து பரிசத்.

அதாவது, "கத்தோலிக்கத் திருச்சபையைக் கலைத்துவிட்டதாக போப் அறிவிக்க வேண்டும்" என்ற ஒரே கோரிக்கையை சுக்குமி - ளகுதி - ப்பிலி என்று மூன்றாகப் பிரித்துச் சொல்லியிருந்தது விசுவ இந்து பரிசத்.

ஈரோட்டுப் பாசறையில் பயிற்சி எடுத்து, காஞ்சித் திண்ணையில் சீட்டாடி வளர்ந்த தலைவர்களுக்கு இதைச் சுக்கு - மிளகு - திப்பிலி எனப் பிரித்துப் படித்தும் புரிந்து கொள்ள முடியவில்லை போலும்!

புரியாதவர்களுக்கெல்லாம் புரிய வைப்பதற்காக 'சம்ஸ்கிரிதிக் ரட்சா மஞ்ச்' (கலாச்சாரப் பாதுகாப்பு அமைப்பு) என்ற பெயரில் இதே கோரிக்கைகளுக்காக கோவாவிலிருந்து டெல்லிக்கு ஒரு ரதயாத்திரையையும் துவக்கியது ஆர்.எஸ்.எஸ். கும்பல்.

அக் - 24: "ரதயாத்திரையா, யார் நடத்துகிறார்கள் தெரியவில்லையே" என்று பத்திரிகையாளர்களிடம் புளுகி விட்டு, கூடவே "போப் வருகையை எதிர்ப்பதெல்லாம் தவறு" என்றும் சொல்லி நாடகத்தைத் துவக்கி வைத்தார் ரதயாத்திரை நாயகன் அத்வானி.

அக் - 26: "போப் அரசுத்தலைவராக வந்தால் மதவிழாவில் கலந்து கொள்ளக் கூடாது; மதத்தலைவராக வந்தால் அரசு வரவேற்கக் கூடாது. அவர் அரசுத் தலைவரா, மதத்தலைவரா - எந்த அடிப்படையில் வருகிறார்?" என்று கேள்வி எழுப்பினார் மதச்சார்பின்மையின் காவலர் இராம. கோபாலன்.

அக் - 28: "தவறுக்கு மன்னிப்பு கேட்பது கிறித்தவ மத ஒழுக்கம்தானே, போப் மன்னிப்புக் கேட்டாலென்ன" என்றவாறு பாராளுமன்றத்தில் பேசினார் ஜஸ்வந்த் சிங்.

அக் - 29: "மதமாற்றம் பிரச்சினை பற்றி ஒரு தேசிய விவாதம் நடத்தியாக வேண்டும்" என்றார் வெங்கையா நாயுடு.



'இருவருக்குமே வெற்றிதான்'
குஷபாவ் தாக்கரே

அக் - 29: "மதமாற்றத்தைத் தடை செய்யாமல் சும்மா மன்னிப்பெல்லாம் கேட்டுப் பயனில்லை" என்றார் பூரி சங்கராச்சாரி.

அக் - 30: மதச் சார்பற்ற நாடான இந்தியாவின் குடியரசுத் துணைத் தலைவர், போப் நடத்தும் அனைத்து மத மாநாட்டில் கலந்து கொள்ளக் கூடாது என்று உத்தரவிட்டது மத்திய அமைச்சரவை.

அக் - 30: "மதமாற்றத்தை நிறுத்த வேண்டும். போப் வருகையினால் இந்து கலாச்சாரத்திற்கு குந்தகம் வராதபடி பார்த்துக் கொள்ள வேண்டும்" என்றார் விஜயேந்திர சரஸ்வதி என்கிற சின்ன-பெரிய-வாள்.

அக் - 31: "சென்னை பீச்சின் எதிரே இந்த சின்னச்சின்ன கோயில்களெல்லாம் சர்ச்களாக மாறியிருப்பதைப் பார்க்கிறேன். சங் பரிவார் இப்படி ஏதாவது மாற்றியிருக்கிறதா?" என்று ஜூ.வி.யில் வேதனைப் பேட்டி கொடுத்தார் ஜெயேந்திர சரஸ்வதி என்கிற பெரிய-பெரிய-வாள்.

நவ - 1: "பா.ஜ.க. அரசு இப்படி வளைந்து கொடுக்கும் என்று எதிர்பார்க்கவில்லை" என்று கூறி போப் வருகைக்கு எதிர்ப்பு தெரிவித்தது பஜ்ரங்தள்.

நவ - 2: "போப் கலந்து கொள்ளும் 'ஆசிய கத்தோலிக்க மதத்தலைவர்கள் மாநாடு' மதநிகழ்ச்சி என்பதால் மதச்சார்பற்ற அரசின் தொலைக்காட்சி அதை நேரடி ஒளிபரப்பு செய்ய இயலாது" என்று டெல்லி ஆர்ச் பிஷப்பின் கோரிக்கையை மறுத்தது தூரதர்சன்.

நவ - 3: "இப்படியே போனால் முஸ்லீமைப் போல கிறித்தவனும் தனி நாடு கேட்பான்" என்றார் விசுவ இந்து பரிசத் தலைவர் கிரிராஜ் கிஷோர்.

நவ - 3: கிறித்தவ மதமாற்றத்தால் நமது புராதனக் கலாச்சாரம் அழிந்து வருவது பற்றிக் கவலை தெரிவித்து நாட்டியப் பேரொளி பத்மா சுப்பிரமணியம், முன்னாள் சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி கிருஷ்ணசாமி ரெட்டியார் போன்ற சென்னையைச் சேர்ந்த 'அக்கறையுள்ள குடிமக்கள்' சிலர் பிரதமரை நேரில் சந்தித்து மனுக் கொடுத்தனர். போப் வருகை தரும் நாளன்று டெல்லி தினசரிகளில் தங்களது கவலையையும் கண்டனத்தையும் பெரிய விளம்பரங்களாகவும் வெளியிட்டனர்.

நவ - 4: கோவாவிலிருந்து புறப்பட்ட கிறித்தவ எதிர்ப்பு ரதயாத்திரை டெல்லி வந்து மதமாற்றத்துக்கு (போப்புக்கு) கொடும்பாவி கொளுத்தி,



படிப்பகம்

www.padippakam.com



பொதுக் கூட்டம் நடத்தி வெற்றிகரமாகத் தன் பிரச்சாரத்தை முடித்துக் கொண்டது.

நவ - 5: சங்க பரிவாரத்தின் கிறித்தவ எதிர்ப்பு போப் எதிர்ப்பு நடவடிக்கைகள் எதுவுமே மைய அரசால் தடுக்கப்படவில்லையே என பத்திரிகையாளர்கள் கேட்டபோது, ''எதைப் பற்றியும் விமரிசனம் செய்வது ஒரு ஜனநாயக உரிமை; இது எதிர்ப்பல்ல விமரிசனம்'' என்று பதிலளித்தது மைய அரசு. ''இது எதிர்ப்புதான்'' என்று ஆர்.எஸ்.எஸ். தெளிவுபடுத்தியது.

நவ - 7: போப்பின் நிகழ்ச்சிகள் முடிந்தபின் பா.ஜ.க. தலைவர் குஷாபாவ் தாக்கரேயைப் பேட்டி கண்ட ஒரு பத்திரிகையாளர் ''போப் விஜயம் அரசுக்கு வெற்றியா, விசுவ இந்து பரிசத்துக்கு வெற்றியா'' என்று கேட்டார். ''இருவருக்குமே வெற்றிதான்'' என்று கூறிச் சிரித்தார் தாக்கரே.

●○●

இவை சில எடுத்துக்காட்டுகள் மட்டுமே. தேசிய ஜனநாயக முன்னணி அரசு பதவியேற்ற நாள் முதல் போப் விமானமேறும் நாள்வரை மதமாற்ற எதிர்ப்பு என்ற பெயரில் சங்க பரிவரத்தினர் நாடெங்கும் நடத்திய நிகழ்ச்சிகள், பத்திரிகைகளில் வெளிவந்த கட்டுரைகள், தலையங்கங்கள், விவாதங்கள் ஆகியவற்றைத் தொகுத்தால் இது மேலும் நீளும்.

மதமாற்றம் குறித்த ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. கும்பலின் பொய்களுக்கும் அவதூறுகளுக்கும் நாம் ஏற்கனவே பதிலளித்திருக்கிறோம். அவற்றையே மீண்டும் இப்போது எழுதத் தேவையில்லை. அவர்களுடன் கூட்டணி வைத்திருக்கும் சிறுபான்மை மக்களின் காவலர்களைத் திரைகிழிப்பது தான் இப்போதைய தேவை. ஏனென்றால், நண்பனைப் போல் நடிப்பவர்கள், எதிரிகளைக் காட்டிலும் ஆபத்தான வர்கள்.

''கலைஞர் எச்சரிக்கையாக இருக்க வேண்டும், வை.கோ புரிந்து கொள்ள வேண்டும், ராமதாஸ் கைவிட்டுவிட மாட்டார், பஸ்வான் நினைத்தால் செய்யலாம்'' என்று இந்தக் கட் அவுட்டுகளுக்கு சாம்பிராணி போடும் ரசிகர் மன்றக் கூட்டமோ இன்னமும் ஆபத்தானது.

பாரதீய ஜனதாவுடன் இவர்கள் கூட்டணி அமைத்ததென்பது ஏதோ எதிர்பாராமல் நேர்ந்துவிட்ட விபத்து போலவும், மற்றபடி இவர்களெல்லலாம் பிறவியிலேயே பாசிச எதிர்ப்பாளர்கள் போலவும் சித்தரிக்கிறது இந்த ரசிகர் மன்றக் கூட்டம்.

ஆனால் என்ன விந்தை! தேசிய ஜனநாயக முன்னணியை அமைப்பதற்காக அயோத்தி, காஷ்மீர், பொது சிவில் சட்டம் போன்ற தங்களது அடிப்படைக் கோரிக்கைகளை விட்டுக் கொடுத்த பாரதீய ஜனதா கும்பல் பதவியேற்ற நாளன்றே தனது சிறுபான்மை எதிர்ப்புப் பிரச்சாரத்தைத் துவங்கிவிட்டது. ஆனால் 'அடிப்படைக் கொள்கைகள்' எதையும் விட்டுக் கொடுக்காத பாசறைக்காரர்கள் வாயே திறக்கவில்லை.



போப்பை எதிர்த்து விஸ்வ ஹிந்து பரிஷத்தின் ரதயாத்திரை

இந்து மதத்தின் சாதிக் கொடுமைதான் மத மாற்றத்துக்குக் காரணம் என்று பக்கம் பக்கமாக அம்பேத்கர் எழுதியிருப்பதைப் பஸ்வான் படித்ததில்லையா? பாதிரியார்களின் அருட்கொடையில் ஊருக்கு ஊர் அம்பேத்கர் சிலைவைத்த பஸ்வானின் தளபதிகள் வாங்கிய காசுக்கு விசுவாசமாகவாவது பஸ்வானை ஒரு அறிக்கை விடச் சொல்லியிருக்கலாமே! அம்பேத்கர் கொள்கைகளுக்கும் சேர்த்து ரகசியக் காப்புப் பிரமாணம் எடுத்து விட்டாரா அமைச்சர் பஸ்வான்?

''சாதிக் கொடுமை ஒழிய முஸ்லீமாக வேண்டுமானாலும் மாறிக் கொள் என்று எங்கள் அய்யாவே சொல்லியிருக்கிறார் - வாயை மூடடா பையா'' என்று சின்ன-பெரிய-வாளுக்கு டாக்டரய்யா ஒரு சூடு கொடுத்திருக்கலாமே! திருமாவளவன் மீது வரும் கோபம் பெரியவாள் மீது வர மறுக்கும் மர்மம் என்ன?

''ஆர்.எஸ்.எஸ்.ஸின் கோவா - டெல்லி ரதயாத்திரைக்கு எதிராக கன்னியாகுமரி - சென்னை நெடும் பயணமொன்றை நடத்துவோம்'' என்று சும்மா ஒரு பேச்சுக்கு வை.கோ எச்சரிக்கை விடுத்திருக்கலாமே!

பார்ப்பனக் கொடுங்கோன்மை பற்றி உணர்ச்சி பொங்க திராவிட இயக்க வரலாறு எழுதிய மாறன், ஜஸ்வந்த் சிங் பாராளுமன்றத்தில் பேசும்போது எதை ஆய்ந்து கொண்டிருந்தார்? மன்னிப்புக் கேட்பது கிறித்தவ மரபென்றால், கேட்க மறுப்பதுதான் பார்ப்பன மரபா என்று பதிலடி கொடுத்திருக்கலாமே!

''கடவுளை அடையப் பல வழிகள் உள்ளன என்று போப் ஒத்துக் கொள்வது இருக்கட்டும்; கோயில் கருவறையில் இருக்கும் கடவுளை அடைய சூத்திரனுக்கும் பஞ்சமனுக்கும் எது வழி?'' என்று கருணாநிதிக்குக் கேட்கத் தெரியாதா?

அனைத்து மதத் தலைவர் மாநாட்டில் குடியரசுத் துணைத் தலைவர் கலந்து



படிப்பகம்

www.padippakam.com

கொள்வது மதச்சார்பின்மைக்கு விரோதம் என்றால், குடியரசுத் தலைவர்களும், தேர்தல் ஆணையர்களும், அமைச்சர்களும் சங்கர மடத்தில் சட்டை, பனியனைக் கழற்றி ஐ.ஜி. கையில் கொடுத்துவிட்டு அரை அம்மணமாக நின்றதும், திருப்பதியில் கமாண்டோ பாதுகாப்புடன் அங்கப் பிரதட்சிணம் செய்வதும், சாயிபாபாவிடம் லட்டு வாங்கித் தின்னத் தனி விமானத்தில் வருவதும் என்ன சார்பின்மை?

போப்பின் மதநிகழ்ச்சியை நேரடி ஒளிபரப்பு செய்ய முடியாதென்றால் கோயில் குடமுழுக்கு, தியாகய்யர் உற்சவம், சங்கராச்சாரி கனகாபிசேகம், இன்னும் இழவு - கருமாதி எல்லாம் நேரடி ஒளிபரப்புவது என்ன கணக்கு?

போப் அரசு விருந்தினராக வரத் தேவையில்லை என்று அழைப்பு விடாமலேயே இருந்திருக்கலாம் - *சீன அரசு* செய்ததைப் போல. மதச்சார்பின்மை வேடம் போடுவதற்காக அழைத்து விட்டு, கூடவே நரித்தனமான மதவெறிப் பிரச்சாரம் செய்வது நாணயமற்ற மோசடியல்லவா?

இன்னும் ஆயிரம் கேள்விகளை நாம் கேட்கலாம்; தங்கள் ''அடிப்படைக் கொள்கைகளில் எவ்விதச் சமரசமும் செய்து கொள்ளாத'' அந்த யோக்கியர்கள் கேட்கவில்லையே.

பல்வேறு அமைப்புகளின் பெயர்களில் அவர்கள் மதவெறிப் பிரச்சாரம் செய்வதைப் போல இவர்களும் எதிர்ப் பிரச்சாரம் செய்திருக்கலாம்; செய்யவில்லையே.

மதவெறியை இவர்கள் எதிர்க்காதது மட்டுமல்ல, இந்துமதவெறி என்பதே இல்லை என்று நிரூபிப்பதற்காக, தங்கள் செயலின்மையை நியாயப்படுத்துவதற்காகச் செயல்படுபவர்களையும் இவர்கள் ஒடுக்குகிறார்கள்.

போப் எதிர்ப்பு நடவடிக்கைகளையெல்லாம் ''மாற்றுக் கருத்து கூறும் உரிமை'' என்கிறது பாரதீய ஜனதா. ஆனால் பாரதீய ஜனதாவிற்கு எதிராக மாற்றுக் கருத்து கூறும் இந்த ஜனநாயக உரிமையைக் கோவை நகரில் ம.க.இ.க.விற்கு இந்தக் கணம் வரை தி.மு.க. அரசு அனுமதிக்கவில்லை.

வாஜ்பாயியோ, அத்வானியோ தமிழகத்திற்கு வந்தால் மாற்றுக் கருத்து கூறுவதற்கு முன்பே ம.க.இ.க. தோழர்களைத் தடுப்புக் காவலில் கைது செய்கிறது இந்த அரசு.

போப் மன்னிப்பு கேட்க வேண்டும் என ரதயாத்திரை நடக்கிறது; ஆனால் டிசம்பர் 6 கறுப்புநாள் நெருங்கு முன்பே முஸ்லீம் இளைஞர்கள் சிறையிலடைக்கப்படுகின்றனர்.

ஸ்டேன்ஸ் பாதிரியார் கொலை, கன்னியா ஸ்திரீகள் மீது பாலியல் வன்முறை, தேவாலயங்கள் எரிப்பு - என எல்லாக் கொடுமைகளையும் இழைத்துவிட்டு போர்த்துக்கீசியர் காலக் கொடுமைக்கு போப் மன்னிப்புக் கேட்க வேண்டும் என தட்டைத் திருப்பிவிட்டது ஆர்.எஸ்.எஸ்.

கலைஞர் என்ன சளைத்தவரா? போப் வருகைக்கு முன் தமிழகத்தில் ஆங்காங்கே தேவாலயக் கூரைகள் தீப்பிடித்து எரிந்தன. பிரச்சினை வராமலிருக்க இனி தீப்பிடிக்காத கூரைகளை அமைத்துக் கொள்ளச் சொன்னார் கருணாநிதி. நல்ல யோசனை. பிரச்சினை வராமலிருக்க கன்னியாஸ்திரீகள் என்ன செய்யலாம்?

இது ஒரு துவக்கம். அவ்வளவுதான். இனி சங்க பரிவாரத்தின் மதவெறி நடவடிக்கைகளை மறைக்கவும், மறுக்கவும் வெங்கையா நாயுடு தேவையில்லை. 'பெரியார் அம்பேத்கரின் வாரிசுகள்' அதைச் செய்வார்கள். 'அவர்கள்' தங்களை நியாயப்படுத்திக் கொள்வதற்கே ஆர்.எஸ்.எஸ். கும்பலை நியாயப்படுத்தியாக வேண்டும்.

## போப் - ஹிட்லரின் விசிறி!

கிறித்தவர் எதிர்ப்பு, தாழ்த்தப்பட்ட, பழங்குடி மக்கள் மீதான வன்மம் ஆகியவற்றை வெளியிட போப் வருகையை ஒரு சாக்காகப் பயன்படுத்திக் கொள்கிறது ஆர்.எஸ்.எஸ். மற்றப்படி கம்யூனிச எதிர்ப்பிலும், பாசிசத்தை ஆதரிப்பதிலும் இருவரும் கொள்கை ரீதியிலான நண்பர்கள்.

வாடிகன் என்பது வாஷிங்டனின் ஆன்மீக ஆயுதக் கிடங்கு. கிழக்கு ஐரோப்பாவிலும் ரசியாவிலும் கம்யூனிசம் என்ற பெயரே இருக்கக் கூடாது என்பதற்காகவும், அமெரிக்க எதிர்ப்பு தேசிய விடுதலைப் போராட்டங்களை ஒடுக்குவதற்காகவும் திருச்சபை ஆற்றிய திருத்தொண்டு மகத்தானது.

கோல்வால்கரைப் போலவே, இதற்கு முந்தைய போப்பும் ஹிட்லரின் அபிமானி. இடமின்மை காரணமாக இவற்றை அடுத்த இதழில் வெளியிடுவோம்.

கடந்த 13 மாத வாஜ்பாயி ஆட்சி
யில் சிறுபான்மையினர்க்கெதிராக எது
வும் நடக்கவில்லை என்று கருணாநிதி
கூறியதும்,

பாபர் மசூதி இடிக்கப்பட்டதில் பிர
தான குற்றவாளி காங்கிரசுதான் என்றும்,
தடுக்கத் தவறியதுதான் அத்வானியின்
தவறு என்றும் வை.கோ பேசியதும்,

கொள்கை அரசியல் வேண்டாம்,
காரியம் நடக்க வேண்டுமென மக்கள்
நினைக்கிறார்கள் என்று பஸ்வான் பேசி
யதும்...

எல்லாம் ஒரு துவக்கம்தான். இவர்
களை ஆர்.எஸ்.எஸ். கும்பல் சரியா
கவே மதிப்பிட்டிருக்கிறது. மதவெறியை
மீண்டும் கிளப்புவதன் மூலம் ஆட்சியை
இழந்துவிடுவோம் என்ற அச்சம்
பா.ஜ.க.வுக்கு இல்லை. எதிர்த்தால் ஆட்
சியை இழந்து விடுவோம் என்ற அச்சம்
இவர்களுக்குத்தானிருக்கிறது.

இவர்கள் சாராய மாமூல் வாங்கிய
போலீஸ்காரர்கள். அவனை நியாயப்ப
டுத்த வேண்டிய கட்டாயம் இவர்களுக்
குத்தானிருக்கிறது. இன்று இவர்கள்
அளிக்கின்ற சான்றிதழ் ஒவ்வொன்றை
யும் அவர்கள் பத்திரப்படுத்திக் கொள்
வார்கள். தேவைப்படும்போது இவர்க
ளின் முகத்திலெறிவார்கள்.

தேசிய ஜனநாயக முன்னணியின்
ஆட்சி தொடர்ந்து நீடித்தால் ''கொள்கை
யைக் கூட விட்டுக் கொடுத்த ஜனநாய
வாதிகள்'' என பா.ஜ.க.வினர் போற்ற
படுவார்கள். ஆட்சி கவிழ்ந்தால்
''அவர்கள் கொள்கைக்காக ஆட்சி
யையே இழக்கத் துணிந்த இலட்சியவ
திகள்'' என்று வழிபடப்படுவார்கள்.

ஆர்.எஸ்.எஸ். முகாமும் ஈரோ
டுப் பாசறையும் சேர்ந்து அமைத்திரு
கும் இந்த 'இராணுவ' ஆட்சியில் முகா
காரர்கள் தங்களுக்கேயுரிய காக்
அரைக்கால் சட்டையுடன்தான் நிற்கிறா
கள். துண்டையும் வேட்டியையும் இழ
தவர்கள் பாசறைக்காரர்கள்தான்.

இந்த மானக்கேட்டை நாம் சொல்
வில்லை. போப் வருகையையொட்
கிறித்தவர் எதிர்ப்புப் பிரச்சாரத்தை ஆ
எஸ்.எஸ். தீவிரப்படுத்திய பின்னரு
அமைதி காத்த பா.ஜ.க.வின் மதச்ச
பற்ற கூட்டாளிகளை ''அய்யா ஏதாவ
பேசுங்கள்'' என்று கேட்டுக் கொண்ட
ஒரு பத்திரிகையின் தலையங்கம். அ
தத் தினசரியின் பெயர் 'தி இந்து.' ப
றையின் மொழியில் சொன்னா
''மவுண்ட் ரோடு மகா விஷ்ணு.''

● புதூர். இராசவே



படிப்பகம்

www.padippakam.com

## காவல்துறையினர்

# குற்றவாளிகளா? மன நோயாளிகளா?

அரிதாஸ் ஒரு பைத்தியமா? ஆம் என்கிறது போலீசு. ''அப்படின்னா அவ ரோட சேர்ந்து போராடின எங்களுக்கும் பைத்தியமா?'' என்று திருப்பிக் கேட்கி றார்கள், அவருக்காகப் போராடிய மக் கள்.

ஆனால் ஒரு சாதாரணக் காவலரை வேண்டுமானாலும் நீங்கள் கேட்டுப் பாருங்கள். சிவப்புச் சாயம் பூசி வெள் ளைக் கட்டம் போட்ட தங்களது கொட் டடி மட்டும் இல்லையென்றால்,

ஊர்-உலகம் அனைத்துமே வெறி பிடித்து, பைத்தியக்காரத்தனமாக, ஒழுங்கின்றிப் போய்விடும் என்றும்,

தாங்கள் அல்லும் பகலும் கண்வி ழித்து லா அண்டு ஆர்டரைப் (சட்டம்-ஒழுங்கை) பாதுகாப்பதால்தான் ஏதோ இந்த அளவுக்காவது அவனவன் வேலையை அவனவன் செய்கிறானென் றும் அவர் உங்களுக்கு விளக்குவார்.

அரிதாசுக்காகச் சாலை மறியல் செய்த பெண்களிடம் போலீசார் இப்ப டிக் கத்தினார்களாம்:

''ஊட்ல சோறாக்குறவளுக்கு ரோட்ல என்னடி வேலை? நாங்கள்ளாம் பைத்தியக்காரன்னு நெனச்சீங்களா?''

எனவே தாங்கள் பைத்தியமில்லை என்று நிரூபிப்பதற்காக மக்கள் மீது துப் பாக்கிச் சூடு நடத்திவிட்டு, அரிதாசுக்குப் பைத்தியம்தான் என்று நிரூபிப்பதற்காக அவரை மனநோய் மருத்துவமனையில் தள்ளியிருக்கிறது போலீசு.

இந்த இரண்டு நடவடிக்கைகள் மூலமாகவும் ''நாங்கள் அறிவோடும், தெளிவோடும், நிதானத்தோடும்தான் இருக்கிறோம்'' என்பதைக் காவல்துறை நிரூபித்திருக்கிறது என்று கொள்ளலாம்.

அரிதாசின் கிறுக்குத்தனம் என்ன? லஞ்சம் வாங்கவில்லை, சாராய ஒழிப் பில் நேர்மையாக நடந்து கொண்டார் என்பதெல்லாம் ''பிழைக்கத் தெரியாத பைத்தியம்'' என்ற வகையைச் சேர்ந்தது.

''உனக்குப் பிடிக்கலேன்னா வாங் காதே. ஆனால் அடுத்த வன் பிழைப்பதையும் கெடுத்தால்?'' தங்கள் குறைந்த பட்ச ஜனநாயக உரிமையும் பறிக்கப்பட்ட தைப் போலவும், தங்கள் சொந்த மனைவியின் கையைப் பிடித்து இழுத்த தைப் போலவும், உடுப்பு அணிந்திருந்தும் தாங்கள் அம்மணமாக்கப் பட்டு விட்டது போலவும் ஒரு மனநிலை மற்ற போலீ




சாருக்கு ஏற்பட்டிருக்கிறது. கிட்டத்தட்ட பைத்தியம் பிடிக்கும் நிலைக்கு மற்றவர் களும் வந்துவிட்டனர்.

இது வேடிக்கையல்ல; மாதம் 5 லட் சம் ரூபாய்க்கு மேல் கல்லா கட்டும் ஒரு காவல்நிலையம் சுமார் ஓராண்டாகப் பாலைவனமாகிவிட்டது; துணை ஆய் வாளர் அரிதாஸின் கீழே பணியாற்றும் காவலர்களை விடுங்கள். அவரது மேல திகாரிகளான ஆய்வாளர், துணை கண் காணிப்பாளர் ஆகியோரது மனநிலை கொதிநிலையில் அல்லவா இருந்திருக் கும்?

ஒருவேளை அவர்களுக்குப் 'பைத் தியம்' பிடித்திருந்தால் அரிதாஸைக் கொன்றிருப்பார்கள். அவர்களுக்குப் பைத்தியம் பிடிக்க வில்லை - எனவே தான் அரிதாஸைப் பைத்தியமாக்கி விட் டார்கள்.

மக்களுடன் சேர்ந்து அவர் சாலை யில் அமர்ந்ததும் அரிதாஸைப் பைத்தி யம்தான் என்று நிரூபிப்பது போலீசுக்கு ரொம்பவும் சுலபமாகிவிட்டது.

சங்கராச்சாரி காலனியில் குடியேற முடியுமா? மறியலை அடித்துக் கலைக்க வேண்டிய போலீஸ்காரன் மறியலுக்குத் தலைமை தாங்க முடியுமா?

இளம் போலீஸ் அதிகாரி ஒருவ ருடன் பேசிக் கொண்டிருந்தபோது அவர் தன் சொந்த அனுபவமொன்றைச் சொன்னார்.

ஐ.பி.எஸ் பயிற்சியில் அவர் இருந் தபோது, ஒருநாள் மாலை பேருந்தில் சென்று திரைப்படம் பார்த்துவிட்டு வந் தாராம். திரும்பி வந்தவுடன் அவரை அழைத்து உயர் போலீஸ் அதிகாரி ''ஜீப்பை எடுத்துக் கொண்டு போக வேண்டியதுதானே. நீ ஒரு போலீஸ் அதி காரி என்பது நினைவிருக்கட்டும். ஜனக் கும்பலோடு கும்பலாக பஸ்ஸில் போகி றாயே, உனக்கென்ன பைத்தியமா?'' என்று எச்சரித்தாராம்.

எனவே அரிதாஸ் பைத்தியமாக்கப் பட்டதில் வியப்பில்லை.

''அரிதாஸ் நேர்மையானவராக இருக்கலாம்; சாராயத்தை ஒழித்திருக்க லாம்; அதற்காக ஒரு போலீசு அதிகாரி மக்களோடு சேர்ந்து தெருவில் இறங்கிக் கலகம் செய்யலாமா?'' என்று கேட்கி றார் முதல்வர் கருணாநிதி.

செய்யவில்லையா? அவருடைய ஆருயிர் நண்பர் சந்திரபாபு நாயுடுவின் ஆட்சியில் சமீபத்தில்தான் நடந்தது அந்த போலீசு கலகம்.

சென்ற ஆண்டு ஏப்ரல் மாதம், கரீம் நகர் மாவட்ட போலீஸ் கண்காணிப்பா ளர் உமேஷ் சந்திராவை சுழற்சி முறைப் படி இடமாற்றம் செய்தது ஆந்திர அரசு. நக்சல்பாரிப் புரட்சியாளர்களை வேட் டையாடுவதிலும், கீழ்நிலைப் போலீசா ரின் அயோக்கியத்தனங்களை நியாயப் படுத்துவதிலும் நம்மூர்த் தேவாரத்தைப் போல பிரபலமானவர் உமேஷ் சந்திரா.

இந்த மாற்றல் உத்தரவை எதிர்த்து கரீம் நகர் போலீசார் தெருவிலிறங்கி ரவு டித்தனம் செய்தனர். கடைகள், பேருந்து கள், திரையரங்குகள், மாவட்ட ஆட்சி யர் அலுவலகம், தெலுங்கு தேச கட்சி அலுவலகம் அனைத்தையும் நொறுக்கி னர். உமேஷ்சந்திரா கரீம் நகரிலேயே பதவியில் இருந்து கொண்டு கலவரத் தைத் தூண்டி விட்டார்.

என்ன செய்தார் நாயுடு? அவர்தான் மக்க ளிடம் மன்னிப்புக் கேட் டார். உமேஷ்சந்திரா வுக்கோ, கரீம் நகர் போலீ சாருக்கோ பைத்தியம் பிடித்துவிட்டதாக அவர் கருதவில்லை.

அந்தப் பைத்தியம் பிடித்த வெறி நாய் உமேஷ்சந்திராவை மக் கள் யுத்தக் குழுவினர் சென்ற மாதம் ஐதராபாத்



படிப்பகம்

www.padippakam.com

# 'பைத்தியம்' திரைக்கதை எழுதும் கருணாநிதி

அரிதாஸ் பைத்தியம்தான் என்று 'ஆதாரபூர்வமாக' சட்டசபையில் பேசியிருக்கிறார் முதல்வர். ''தூக்கமின்மை, மூர்க்கத்தனமாகத் தாக்குவது, தனக்கு அதிக சக்தி இருப்பதாகக் கூறிக்கொள்வது'' போன்ற மன நோய்களுக்காக ஏற்கனவே அரிதாஸ் சிகிச்சை பெற்றுள்ளார் என்பதுதான் முதல்வர் தரும் முக்கியமான ஆதாரம்.

மேற்கூறிய 'நோய்'களுக்காக அரிதாசை மனநோயாளி என்று கூறலாமெனில் தமிழகத்தின் எல்லாக் காவல் நிலையங்களையும் மனநோய் மருத்துவமனைகளாக மாற்ற வேண்டி வரும்.

இது ஒருபுறமிருக்க, குறிப்பிட்ட மறியல் போராட்டத்துக்கு முன்னால் போளூர், தூசி காவல் நிலையங்களில் பணியாற்றியபோது அவர் மன நோயாளியாக நடந்து கொண்டதற்கு எவ்வித ஆதாரமும் தரப்படவில்லை.

மறியல் செய்த மக்களிடம் ''என் தம்பி பைத்தியம்'' என்று சொல்லுமாறு அரிதாசின் அண்ணனை போலீசு அதிகாரிகள் நிர்ப்பந்தித்திருக்கிறார்கள். அவர் மறுத்திருக்கிறார்.

அவருடைய அண்ணனிடம் பல வெள்ளைத் தாள்களில் போலீசு அதிகாரிகள் கையெழுத்து வாங்கியிருக்கிறார்கள். இவையெல்லாம் நாம் அவரிடம் நேரில் திரட்டிய தகவல்கள். மருத்துவமனையில் அவருடன் இருப்பதற்கு ஒரு குடும்ப உறுப்பினரைக் கூட அனுமதிக்கவில்லை. உயர் நீதிமன்றத்தில் ரிட்மனு தாக்கல் செய்தவுடனே அரிதாசை மருத்துவமனையிலிருந்து அனுப்பி விட்டனர்.

முதல்வர் தரும் 'ஆதாரங்களை' இந்தப் பின்புலத்தில் வைத்துப் பார்க்க வேண்டும்.

மொத்தப் பிரச்சினையையும் திசை திருப்பிவிட்டார் கருணாநிதி. ''யாரோ ஒரு எஸ்.ஐ. மனநோயாளி அல்ல'' என்று நிரூபிப்பதற்காக மக்கள் போராடவில்லை. சாராயத்தை ஒழித்த ஒரு அதிகாரியை ஆதரித்துத் தான் அவர்கள் போராடினார்கள்.

மருத்துவ அறிக்கையினைக் காட்டி அரிதாசை வேலை நீக்கம் செய்தாகிவிட்டது. தூசி காவல் நிலையத்தின் காக்கிச் சட்டை ரவுடிகள் மீது மக்கள் வைக்கும் குற்றப் பத்திரிகைக்கு என்ன பதில்?

அரிதாசின் குடும்பத்தினரிடம் பேசியபோது ''நாங்கள் கலைஞரைத் தான் நம்பியிருக்கிறோம்'' என்றார்கள். கலைஞரோ போலீசை நம்பித்தான் ஆட்சி நடத்துகிறார்; போலீசோ சாராய வியாபாரிகளை நம்பியிருக்கிறது!

---

நகரில் வைத்துச் சுட்டுக் கொன்றனர்.

மக்களுக்கு நாயகன் அரிதாஸ் என்றால் போலீசின் நாயகன் உமேஷ்சந்திரா.

ரவுடித்தனம் செய்யும்போதும், மக்களை அடித்துச் சித்திரவதை செய்யும் போதும், ஏசும்போதும் போலீசார் தமது இயல்பான மனநிலையில்தான் இருக்கின்றனர். ஆனால் அவர்களது ரவுடித்தனம் கேள்விக்குள்ளாக்கப்படும்போது தான் அவர்களது மனநிலை பாதிக்கப் பட்டு விடுகிறது.

சென்ற மாதம் திருச்சியில் நடைபெற்ற சம்பவம் இது. ம.க.இ.க - வின் வழக்கறிஞரைக் காவல்நிலையத்தில் வைத்துத் தரக்குறைவாகப் பேசினார் ஒரு உதவி ஆய்வாளர். வழக்கறிஞர்களின் போராட்டத்தின் விளைவாக அன்றே அவர் இடமாற்றம் செய்யப்பட்டார். அத்துடன் வழக்கறிஞர்கள் அனைவரின் முன்னிலையில் பகிரங்கமாக மன்னிப்பும் கேட்க வேண்டியதாயிற்று.

மன்னிப்புக் கேட்டதன் விளைவாக அவருக்கு மட்டுமல்ல, திருச்சி நகரக் காவல்துறையின் கடைசிக் காவலர் வரை அனைவருக்குமே 'மனநிலை' பாதிக்கப் பட்டு விட்டது. தற்கொலை செய்து கொள்ளப் போவதாகத் தனது உயரதிகாரிகளிடம் அழுதிருக்கிறார் அந்த உதவி ஆய்வாளர்.

தற்கொலையே செய்துகொண்டிருக்கிறார் ஒரு பஞ்சாப் போலீசு அதிகாரி. சீக்கிய தீவிரவாதத்தை ஒழித்ததற்காக இரண்டு முறை குடியரசுத் தலைவரின் பதக்கம் பெற்ற அஜித்சிங் சந்து, பஞ்சாப் தரண்தரண் மாவட்டத்தின் போலீசு கண்காணிப்பாளர்.

தீவிரவாத ஒழிப்பு என்ற பெயரில் நூற்றுக்கணக்கான அப்பாவி மக்களைக் கொன்றது மட்டுமின்றி, அதனை அம்பலப்படுத்திய மனித உரிமைக் கழக செயல் வீரரையும் கொலை செய்தார் அஜித்சிங். மனித உரிமை அமைப்புகள் இவர்மீது 40-க்கும் மேற்பட்ட வழக்குகளைத் தொடுத்தன. குற்றங்கள் நிரூபிக்கப்படும் நிலைமை ஏற்பட்டதும் இந்தக் 'கவரிமான்' தற்கொலை செய்து கொண்டது.

ஆத்திரத்தில் அறிவிழந்து நண்பனையோ உறவினர்களையோ கொலை செய்து விட்டு அதற்காக வருந்திக் கண்ணீர் விடும் ஆயுட்கைதிகள் பலர் சிறையிலிருக்கிறார்கள். மனைவியைக் கொன்றதனால் பைத்தியம் பிடித்துப்போன கணவன்மார் இருக்கிறார்கள்.

ஆனால் எத்தனை ஆயிரம் லாக்கப் கொலைகள் நடந்திருக்கின்றன; எத்தனைப் பெண்கள் போலீசின் வன்புணர்ச்சிக்குப் பலியாகித் தற்கொலை செய்து கொண்டிருக்கிறார்கள்; எத்தனை நிரபராதிகள் பொய்க் குற்றம் சாட்டப்பட்டு சிறையில் வாடுகிறார்கள் - இந்தக் குற்றங்களை இழைத்த ஒரே ஒரு போலீசுக்காரனாவது குற்ற உணர்வினால் தற்கொலை செய்து கொண்டதாகக் கேள்விப் பட்டிருக்கிறீர்களா? ஒரே ஒரு போலீசுக்காரனுக்காவது பைத்தியம் பிடித்துவிட்டதாகக் கேள்விப் பட்டிருக்கிறீர்களா?

> ரவுடித்தனம் செய்யும்போதும், மக்களை அடித்துச் சித்திரவதை செய்யும்போதும், ஏசும்போதும் போலீசார் தமது இயல்பான மனநிலையில்தான் இருக்கின்றனர். ஆனால் அவர்களது ரவுடித்தனம் கேள்விக்குள்ளாக்கப்படும்போதுதான் அவர்களது மன நிலை பாதிக்கப்பட்டு விடுகிறது.

எந்தப் போலீசு அதிகாரிக்கும் குற்ற உணர்வினால் பைத்தியம் பிடிப்பதில்லை; ஏனென்றால் குற்றம்தான் அவர்களது உணர்வு.

கொலை, கொள்ளை, கற்பழிப்பு, லஞ்சம், ஊழல், வழிப்பறி, மோசடி, நம்பிக்கைத் துரோகம்... என்று குற்றவியல் சட்டம் எதையெல்லாம் குற்றம் என்று பட்டியலிடுகிறதோ அந்தக் குற்றங்கள்தான் அவர்களது அன்றாட நடைமுறை.

ஒரு சாதாரணக் கு



படிப்பகம்

www.padippakam.com

# தூசி போராட்டம்: நேரடி செய்தித் தொகுப்பு

அரிதாஸின் குடும்பம் வசதியானதுதான். 'ரியல் எஸ்டேட்' வியாபாரம் செய்து வரும் தந்தைக்கு குடிப்பழக்கம் உண்டு. தி.மு.க.வைச் சார்ந்த தாய் ஊர்ப் பஞ்சாயத்தின் தலைவியாக இருக்கிறார். தந்தையின் குடி, குடியால் கெட்ட நாவலூர் குடும்பங்கள் ஆகியவற்றை நேரில் கண்டு வளர்ந்த அரிதாசுக்கு அதன்மேல் ஒரு வெறுப்பு இயல்பாகவே வளர்ந்தது.

அரிதாஸ் ஒரு சராசரி இளைஞர் தான். சென்னை ஜெயின் கல்லூரியில் படித்து முடித்தவருக்கு, காவல்துறை உதவி ஆய்வாளர் வேலை கிடைத்தது. காஞ்சிபுரம் அருகிலிருக்கும் தூசி காவல் நிலையத்தில் தனிப்பொறுப்பு (சட்டம் ஒழுங்கு) உதவி ஆய்வாளராக பணி ஏற்றார். ஒரு நேர்மையான, கண்டிப்பான போலீஸ் அதிகாரி என மேலதிகாரிகளிடம் பெயரெடுக்க வேண்டும், தனது பணிக்காலத்தில் கருப்புப் புள்ளிகள் எதுவும் இடம்பெறக் கூடாது என்பதைத்தவிர பெரிய கனவுகளெல்லாம் அரிதாசிடம் கிடையாது.

தூசி காவல் நிலையத்தின் அதிகார எல்லைக்குள் 64 பஞ்சாயத்துக்கள் வருகின்றன. அருகிலுள்ள பிரம்மபுரத்தில் காய்ச்சப்படும் சாராயம் எல்லாக் கிராமங்களிலும் விற்கப்படுகிறது. ஹரிதாஸ், பழனி, மாணிக்கம் என்ற மூன்று சகோதரர்கள் அடங்கிய சாராய வியாபாரிகள் குடும்பம் வட்டாரத்தில் ஆதிக்கம் செய்கிறது. தூசி காவல் நிலையத்தின் ஒரு மாத சாராய மாமூல் சுமார் 5 லட்சம். கைவீசிக் கொண்டு வரும் போலீஸ்காரர்கள் தூசியிலிருந்து மாறிச்செல்லும் போது லாரி நிறைய பொருள் கொண்டு செல்வார்கள் என்கிறார்கள் மக்கள்.

அரிதாஸ் வந்து சேர்ந்த ஒரு வருடத்திற்குள்ளேயே சாராய விற்பனைக்கு பெரும் தடைக்கல்லாக மாறினார். சாராயத்தை எதிர்த்து மட்டுமல்ல, புகார்களுக்கு உடனுக்குடன் நடவடிக்கை, இரவில் மக்கள் யாரும் சுற்றக் கூடாது, சாலையோர ஆக்கிரமிப்புகளை அகற்றுதல் என்று சட்டம் ஒழுங்கின் அனைத்து விதிகளையும் அமல்படுத்தினார். இலட்சியப் போலீஸ் அதிகாரி என்ற கனவிற்காக, அவரது மோட்டார் பைக் அல்லும் பகலும் அதிவேகத்துடன் சுற்றி வந்தது. அதில் சாராயக் கடைக்கு அவர்காட்டும் வேகத்தை மட்டும் ஏனைய போலீசார் ஏற்கவில்லை.

இடையில் தேர்தலுக்குப் பிந்தைய பதட்டம் காரணமாக கடலூரில் சிறப்புப் பணிக்காக அவர் அனுப்பப்பட்டார். இனி அவரை ஒரேயடியாக மாற்றிவிடுவோம் என வியாபாரிகளிடம் போலீஸ் வாக்குறுதி கொடுக்க மீண்டும் சாராயமும் மாமூலும் தொடர ஆரம்பித்தது. கடலூர் பணி முடிந்து, தூசி திரும்பிய அரிதாஸை ஒரு அவதூறான மொட்டைக் கடிதம் வரவேற்றது. அதனாலும், 10 நாட்களுக்குள் நிலைமை தலைகீழானதைக் கண்டும் சினமுற்றவர் உடனே சாராய வேட்டைக்குக் கிளம்பினார். பிடித்தவர்களை ஸ்டேசனில் அடைத்து விட்டு மீண்டும் அண்டைக் கிராமங்களுக்கு சென்று வேறு சிலரையும் தூக்கி வந்தார். திரும்பி வந்து பார்த்தபோது தான் ஏற்கனவே பிடித்து வைத்திருந்த சாராய வியாபாரிகள் எவரும் இல்லாதது கண்டு அதிர்ச்சியடைந்தார்.

மேலிடத்து உத்திரவினால் அவர்களை விடுவித்தேன் என்றார் இன்ஸ்பெக்டர் கோவர்தனன். வாய்த்தகராறு ஆரம்பித்தது. செய்யாறிலிருந்து டி.எஸ்.பி. பாஸ்கரன் வந்தார். அவரது 'புத்திமதிக்கும்' கட்டுப்படாத



அரிதாஸை அனைவரும் சேர்ந்து அடித்தனர். மனநிலை சரியில்லாதவர் என்ற முத்திரையுடன், காஞ்சிபுரம் அரசு மருத்துவமனையில் சேர்த்து இரண்டு போலீஸை காவலுக்குப் போட்டனர்.

அரிதாசுக்கு அது ஒரு நெடிய இரவு. தனது நேர்மைக்குக் கிடைத்த அதிர்ச்சியை தாங்க முடியாமல் நினைவலைகளில் சுழன்றார். காலையில் மருத்துவமனையை விட்டு வெளியேறி பாலாற்றிலிருந்து தூசி கிராமத்திற்குச் செல்லும் ஒரு மணல் வண்டியில் அரிதாஸ் ஏறிக் கொண்டார். வண்டியிலேயே தூசி வந்து இறங்கினார். பார்த்துப் பதறிய மக்கள் அதிலும் பெண்கள் விசாரித்தனர். உணர்ச்சிப் பெருக்கில் வார்த்தைகள் வராமல் செய்கையால் தன் நிலையை விளக்கினார். அடித்ததனால் வீங்கிய தனது உடலைக் காட்டினார். தங்களுக்குப் பிடித்தமான போலீஸ் அதிகாரியின் நிலையும், அவரது கண்ணீரும் மக்களை ஆத்திரமடைய வைத்தன.

மறியலுக்குப் பெண்கள் ஏராளமாக வந்தனர். செய்தி பரவியதும் சுற்றுக் கிராம மக்களும் வந்தனர். அரிதாஸ் அப்போதும் தனது கடமையுணர்வை மறக்கவில்லை. போக்குவரத்திற்கு இடையூறில்லாமல் மறியல் செய்யுமாறு செய்கையால் மன்றாடினார். மக்களின் ஒரே கோரிக்கை மாவட்ட ஆட்சித் தலைவர் வரவேண்டும், விசாரிக்க வேண்டும் என்பதுதான். 130 கி.மீட்டர் தொலைவிலிருந்து அவர் வரமுடியாது, என்று அதிகாரிகள் 8 கி.மீட்டர் தொலைவிலுள்ள காஞ்சியிலிருந்து அதிரடிப்படையை வரவழைத்தனர். மறியலை தொலைவிலிருந்தபடியே பார்த்துக் கொண்டிருந்த தூசியின் ஏனைய போலீசைப் பார்த்து 'உங்களாலதானடா இவ்வளவும்' என்று அரிதாஸ் கத்த, அவர்கள் லத்தியை ஓங்க மிச்சத்தை மக்கள் கவ்னித்தனர்.

500 தறிகள் கொண்ட தூசியில் தறியடிக்கும் ஒலியே நின்றுவிட்டது. விவசாயமும், நெசவும் தொழிலாகக் கொண்ட அந்த வட்டாரம் முதன்முறையாக போலீசின் பயங்கரவாதத்தைச் சந்தித்திருக்கிறது.

இத்தனைக்குப் பிறகும் ''எங்க ஆம்பளைங்களை சிறையில் வச்சுக்கங்க, அந்த இன்ஸ்பெக்டரை மட்டும் விட்டுருங்க'' என்கிறார்கள் பெண்கள்.

அரிதாஸ் மனநிலை சரியில்லாதவர், பைத்தியக்காரர் என்ற செய்தி முழுப்பொய். ஜட்டியுடன் நடமாடினார், மரத்திலேறிக் கத்தினார் என்பதெல்லாம் போலீசின் சரடு. தூசியிலும், தாழம்பூரிலும் நாம் நேரில் சென்று விசாரித்த பல்வேறு தகவல்கள் அதை மறுக்கின்றன. செய்யாறில் இருக்கும் தாசில்தார் அலுவலக அதிகாரிகளும் இதை உறுதி செய்தனர்.

அடுத்து, 'அரிதாஸ் ஒரு தலித் என்பதால் மக்களை திரட்டி ஒரு ஹீரோவாகப் பார்த்தார்' என்ற பிரச்சாரமும் போலீசின் கட்டுக்கதைதான். மறியலுக்குத் திரண்டவர்களில் பெரும்பான்மையினர் தலித் அல்லாத பிற சாதி மக்கள் தான். சாதிவேறுபாடு கடந்து கள்ளச் சாராயம் தோற்றுவித்த அவலங்களே அதற்கு அடிப்படை.

— செய்தியாளர்கள்: கோமேதகம்
வாசுதேவன்.



படிப்பகம்

www.padippakam.com

மகன் இந்தக் குற்றங்களை இழைக்கும் போது "நாம் குற்றமிழைக்கிறோம்" என்ற உணர்வு அவனுக்கு ஏற்படக்கூடும். ஆனால் போலீசைப் பொறுத்த வரை குற்றமிழைக்கும்போதுதான் அவர்கள் இயல்பான மனநிலையில் இருக்கின்றனர்.

நண்பர்களுடன் மகிழ்ச்சியாகத் தேநீர் சுவைப்பதைப் போன்ற மனநிலையில் கும்பலாகச் சேர்ந்து ஒரு பெண்ணைச் சுவைக்க வேண்டும்.

கைதியை அடித்து எலும்பை நொறுக்கி லாக் - அப்பில் தள்ளிவிட்டு, அவன் வலி பொறுக்காமல் கதறும்போது அதைப் பார்த்தபடியே உட்கார்ந்து பிரியாணி தின்ன வேண்டும்.

சாலையோரம் நான்கு கிலோ கத்தரிக்காயை வைத்துக்கொண்டு வாங்குவாரின்றி ஏக்கத்துடன் உட்கார்ந்திருக்கும் கிழவியை, சாலையில் கிடக்கும் கல்லை எத்துவது போல அலட்சியமாகக் காலால் எத்தித் தள்ள வேண்டும்.

கைதியை அடித்துக் கொன்று பிணத்தைத் தூக்கில் மாட்டிவிட்டு, அன்றிரவே மனைவியுடன் உல்லாசமாக இருக்க வேண்டும்.

இப்படி நடந்து கொள்ள முடியாத ஒருவன் போலீஸ்காரனாக ஆகிவிட்டால்? கேரள காவல் துறையைச் சேர்ந்த ராமச்சந்திரன் நாயரின் அனுபவம் இதற்கு விடை சொல்கிறது.

கேரளத்தைச் சேர்ந்த நக்சல்பாரிப் புரட்சியாளர் வர்கீஸ் 1970-ஆம் ஆண்டு பிப்ரவரி-18-ம் தேதி கொலை செய்யப்பட்டார். போலீசுடன் நடந்த ஆயுத மோதலில் அவர் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

அன்று நக்சல்பாரி ஒழிப்பு அதிரடிப் படையில் பணியாற்றி ஓய்வுபெற்ற ராமச்சந்திரன் நாயர் சென்ற ஆண்டு உண்மையை வெளியிட்டார்.

"வர்கீஸைக் கைது செய்து கொண்டு வந்தோம். "இவனைச் சுட்டுத் தள்ளப் போகிறோம். யார் சுடுகிறீர்கள்?" என்று எங்களைக் கேட்டார் மேலதிகாரி லட்சுமணா. என் உடனிருந்த போலீசார் கை உயர்த்தினர். நான் தலைகுனிந்து மவுனமாக இருந்தேன். "நீதான் சுட வேண்டும்" என்று எனக்கு உத்தரவிட்டார் லட்சுமணா. எனக்கு வேறு வழி தெரியவில்லை. நான்தான் வர்கீஸை சுட்டுக் கொன்றேன்" என்று வாக்குமூலம் அளித்துள்ளார் ராமச்சந்திரன் நாயர்.

ஒருவேளை ராமச்சந்திரன் நாயர் சுட மறுத்திருந்தால்? அவரும் சுட்டுக் கொல்லப்பட்டிருப்பார். அல்லது அரிதாஸைப் போல மனநோய் மருத்துவமனையில் தள்ளப்பட்டிருப்பார்.

"உத்தரவுக்குக் கீழ்ப்படிவதைத் தவிர நாங்கள் வேறென்ன செய்ய முடியும்?" என்று கீழ்நிலைப் போலீசார் இத்தகைய குற்றங்களை நியாயப்படுத்துவார்கள். உத்தரவுக்குக் கீழ்ப்படிந்து எந்தப் போலீஸ்காரனும் தற்கொலை செய்து கொண்டதில்லை; கொலைதான் செய்திருக்கிறான்.

இது இராமச்சந்திரன் நாயருக்கு அவரது உயரதிகாரி நடத்திய போலீசு தகுதிக்கான செய்முறைத் தேர்வு. இந்தப் படுகொலையைச் செய்ததன் விளைவாக ஒருவேளை அவரது மனநிலை பாதிக்கப்பட்டிருந்தால் அவர் 'பைத்தியம்' என்று போலீசிலிருந்து நீக்கப்பட்டிருப்பார். இந்தக் குற்றத்துக்குப் பின்னும் அவர் சகஜ நிலையில் இருந்து காட்ட வேண்டும். குற்றமே அவரது உணர்வாக இருக்க வேண்டும். அதுதான் போலீசின் தகுதி.

**லாக்கப் கொலை, கற்பழிப்பு போன்ற குற்றங்களை இழைத்த எந்த போலீஸ்காரனும் குற்றவுணர்வினால் தற்கொலை செய்து கொண்டதில்லை. குற்றவுணர்வினால் யாருக்கும் பைத்தியம் பிடித்ததில்லை. ஏனெனில் குற்றம்தான் அவர்களது உணர்வு.**

வாச்சாத்தியில் ஒரு பெண்கள் கூட்டத்தையே நாசமாக்கிய போலீசார் முதல், அண்ணாமலை நகரில் ஒரு பெண்ணை கூட்டமாகச் சேர்ந்து நாசமாக்கிய போலீசார் வரை, கரூரில் ஒரு வியாபாரியை அடித்தே கொன்ற போலீசார் முதல் இரண்டு வயதுக் குழந்தையைத் தாமிரவருணியில் அமிழ்த்திக் கொன்ற போலீசார் வரை...

யாருமே சிறைச் சாலையில் கைதியாக இல்லை என்பது அரசியல்; அவர்களில் ஒருவர்கூட மனநோய் மருத்துவமனையில் பைத்தியமாகவும் இல்லை என்பதுதான் போலீசின் உளவியல்.

நேர்மை, சுயமரியாதை, உரிமை என்ற வார்த்தைகளை உச்சரிக்கும் நபர்கள் காக்கி உடைக்குள் காலம் தள்ள முடியாது. அவர்கள் வெள்ளை அரைக்கால் சட்டையுடன் சிறையில் இருக்கலாம், அல்லது அதேபோன்ற உடையில் மனநோய் மருத்துவமனையில் இருக்கலாம்.

போலீசில் 'பைத்தியங்கள்' தோன்றுவது இது முதன்முறையல்ல. "போலீசுக்குச் சங்கம் வைக்கும் உரிமை வேண்டும்" என்று கோரிய ஜான் பிரிட்டோ எனும் போலீஸ்காரரைப் பைத்தியக் காரனாக்கியது புரட்சித் தலைவரின் அரசு. இப்போது அரிதாஸைப் பைத்தியமாக்கியிருக்கிறது தானைத்தலைவரின் அரசு.

"உன்னைப் போன்ற கருங்காலிகளால்தான் இந்தக் காக்கிச்சட்டை போட்ட அத்தனை பேருக்கும் அவமானம்" என்று கிளைமாக்ஸ் காட்சியில் வசனம் பேசி, தனது உயரதிகாரியைப் புரட்டி எடுத்து, நீதிமன்றத்தில் நிறுத்தி, சிறைத் தண்டனை வாங்கிக் கொடுத்து, முதல்வர் கையால் அண்ணா பதக்கம் வாங்குவதெல்லாம் விஜயகாந்த், சரத்குமார், அர்ஜுன் போன்ற தேசபக்த திலகங்களால்தான் முடியும்.

அரிதாஸ் உயர்நீதி மன்றத்தில் மனுப்போட்டு 5000 ரூபாய் சொந்த ஜாமீனில் சென்னை மத்திய சிறையிலிருந்து இப்போது தான் வெளியே வந்திருக்கிறார்.

அரிதாசுக்குப் பைத்தியம் பிடித்திருந்ததா இல்லையா என்பதை இனி நீதிமன்றம் தீர்மானிக்கும்.

அவருக்குப் பைத்தியம் பிடித்தது உண்மை என்றால் மறியல் செய்த குற்றத்திலிருந்து அவர் தப்பிக்கலாம்; ஆனால் மனநோய் மருத்துவமனைக்குச் செல்ல வேண்டும்.

அவருக்குப் பைத்தியம் பிடித்தது பொய் என்று நிரூபிக்கப்பட்டால் புத்திசுவாதீனத்துடன் மறியல் செய்த குற்றத்துக்காக அவர் சிறைச்சாலைக்குச் செல்ல வேண்டும்.

பைத்தியம் அல்லது குற்றவாளி இவையிரண்டில் ஒன்றைத் தெரி செய்து கொள் என்று அரிதாஸை மிரட்டு கிறது காவல்துறை.

மேலும் பல அரிதாஸ்கள் 'பைத் யம்' ஆகாமல் தடுக்க வேண்டுமானால் காவல்துறைக்கே பைத்தியம் பிடிக்கு மாறு செய்ய வேண்டும். அதைச் செய்ய வேண்டுமென்றால், போலீசைத் திருத் முடியும் என்று நம்புகிறோமே அந்த 'பைத்தியம்' நமக்குத் தெளிய வேண்டும்.

மேலும் பல அரிதாஸ்கள் 'குற்றவா ளி' ஆகாமல் தடுக்கவேண்டுமானா காவல்துறை தான் குற்றவாளி என்ப நடைமுறையில் நிரூபிக்கப்பட வேண் டும். அதைச் செய்ய வேண்டுமென்றா குற்றவாளிகள் யாரெனத் தீர்மானிக்கு அதிகாரம் மக்களின் கைக்கு வரவே டும்.

● சூரிய



படிப்பகம்

www.padippakam.com

சிறுகதை:

# தோல் செருப்பு

● துரை. சண்முகம்

"என்ன இன்னைக்காவது காசு வந்துச்சா உனக்கு?" சாரதா ஆவலுடன் பதிலை எதிர்பார்த்தாள். வேலன் சலிப்போடு சட்டைப் பொத்தானைக் கழட்டும் விதத்திலேயே நிலைமையைப் புரிந்து கொண்டாள் அவள்.

"வீட்டுக்காரம்மா வேற ஒண்ணாந் தேதியே வாடக வாடகன்னு நச்சரிக்க ஆரம்பிச்சிரிச்சி. நமக்கெல்லாம் ஊடு வாசல்னு ஒண்ணு இருக்கும்னு உன் முதலாளிக்கு நெனப்பே வராது போல. கையெழுத்துப் போட்டு சம்பளம் வாங்கறவங்களுக்கே ஆறு ஏழு தேதிலதான் பணம் தர்றாங்க, வாட்ச்மேனுக்கு எங்க மாசம் பொறந்தோன்ன வாரி வழங்கப் போறாங்க; தினமும் நாய்க்கு பிஸ்கெட்டு போட்டியானு கேக்குது அந்த பெரியம்மா, நமக்கு வயிறுன்னு ஒண்ணு இருக்கறதே அவங்களுக்கு மறந்து போயிடுது. நானும் அந்த அம்மாகிட்ட தினந்தான் ஐயாகிட்ட சொல்லச் சொல்லி ஒதிகிட்டு இருக்கிறேன் அது எங்கே காதுல வாங்குது?" என்றான் வேலன்

"தேதி பத்தாயிடுச்சி இன்னைக்கும் வாடகய தரலேன்னா ஊட்டுக்காரம்மா உண்டு இல்லேன்னு பேசிடும், எனக்கு என்ன பண்றதுன்னே புரியல, தண்ணி மொண்டு வக்கிற கடைகளிலும் அஞ்சு பத்துன்னு ஊட்டு செலவுக்கு வாங்கியாச்சு, மேக்கொண்டு தரமாட்டாங்க. அவ சம்பளமும் பத்து தேதியாயி வரல, நீயாவது தேதியாவுதேன்னு எங்காவது ஒரு முன்னூருவா பொரட்டக் கூடாது."

"ஆமா, வாட்ச்மேனுக்கு கடன்தர வரிசையில நிக்குறாங்க. நான் வாங்காம வந்துட்டேன். நீ போறியா? நாப்பது வருசமா குடும்பம் பண்ற நெலம தெரியாம பேசுற. கொடுக்க வேண்டிய பணத்துக்கே அவங்க மேலயும் கீழயும் பாக்குறாங்க, இதுல எங்க போயி பொறட்டறது பங்களான்னு பேருதான் பழய பேப்பர் மொதக் கொண்டு கச்சிதமா கடையில போட்டுக் காசாக்குது. நமக்கு எந்த வழியும் இல்லை." மேக்கொண்டு பேசவிடாமல் இருமல் வந்து தடுத்தது சாராதாவுக்கு.

சாரதா கொடுத்த தண்ணீரை தலையில் வழிய ஊத்தியவன், "சுடு தண்ணி தரக்கூடாதா?" என்றான் எரிச்சலோடு.

ஆமா நீ காஸ் வாங்கி கொடுத்திருக்க, நான் சுடு தண்ணி தரமாட்டறேன், ஸ்டவ்வுக்கே கிருஷ்ணாயில் இல்லேன்னு இரவு வாங்கி ஊத்துனேன், இதுல அப்பப்ப சுடு தண்ணிக்கு எங்க போறது? ஊட்டுக்காரம்மா வந்தா இப்ப என்ன பண்றது?"

"ஏண்டி பொலம்புற, பேசாம மலர் சேத்து வைச்சிருக்கிற உண்டியல் பணத்த பாரு."

"வேற வெனயே வேணாம். அவ ஏதோ தோலு செருப்பு ஒன்னு வாங்கனு முன்னு வர சம்பளம், ஓ.டி.-ன்னு சேர்த்து வைச்சு பாக்குறா, நமக்கு இருக்குற தரித்திரத்தில அது எங்க தங்குது. இந்த மாசமும் எடுத்தோமுன்னா கத்தி தீத்துடுவா."

"பொண்ணுகிட்ட திட்டு வாங்க பயந்தா, ஊட்டுகாரம்மா வுட்டுகெடாசும் வாங்கிக்க. வேற வழியிலேலேன்னு சொன்னா வியாக்கியானம் படிக்கிற நீ. எடுத்துகிட்டு என் பணம் வந்தோன்ன போட்டா போச்சு."

"நீ வாங்குற ஆறு நூறுல காருகாரனுக்கும், பீடி துண்டுக்கும் போவ எவ்ளோ தரப்போறியோ, அவ சொல்ற மாதிரி ஒழிச்சி வாங்கின பணத்த ஒரு நாள் கூட முழுசா வச்சு பாக்க முடியல, என்ன பொழப்போ போ. அவ வந்தா சமாளிக்க வேண்டியதுதான்."

●○●

காலைக் கவ்விக் கொண்டிருந்த பிளாஸ்டிக் செருப்பை வேகமாக உதறி எறிந்தபடி உள்ளே வந்த மலர், கூட வந்த லதாவை "உக்காரு, உடனே போயிடலாம்" என்று அவசரமாய் உண்டியல் பக்கம் போனாள்.

"அப்பா எங்க உண்டியல காணோம்?" பதைபதைத்தாள் மலர். தலையைச் சொறிந்த வேலனுக்கு வார்த்தைக்குப் பதிலாக இருமல் வந்தது. கொஞ்சம் வசதியாய்ப் போனது.

"இந்தா தண்ணி, உண்டியல் எங்கப்பான்னு கேக்கறன் இல்லை."

"அது... அது வந்தும்மா உங்க அம்மா வாடக பணம் தர எடுத்துச்சி நீ..." அவர் முடிப்பதற்குள் வெடித்துக் கிளம்பினாள் மலர்.

"நெனச்சேன், இந்த கையில இவ்ளோ நாளு அதவுட்டு வைச்சதே பெரிசு தான். எம் புத்திய செருப்பாலடிக்கணும். வக்கத்தவளுக்கு உண்டியல் எதுக்கு?"

"இல்லம்மா... என் பணம் வந்தவுடனே நீ எடுத்துக்க."

"ஆமாம் நீ பெருசா வாங்கி வரப் போற, நாமளா சேத்து வைச்சாலும் இந்த ஊட்ல விடியாது."

பார்த்துக் கொண்டிருந்த லதாவுக்கு எப்படி மலரை சகஜ நிலைமைக்குக் கொண்டு வருவது என்று குழப்பமாய்ப் போனது.

"சரி வுடு மலரு, அடுத்த வாரம் வாங்கிக்கலாம்" ஆறுதல்படுத்தினாள்.

"இல்ல லதா, ஒவ்வொரு மாசமும் இவங்களுக்கு இதே வேலதான். நான் அந்த கெமிக்கல்ல எவ்ளோ கஸ்டப்பட்டு ஓ.டி. எல்லாம் பாத்து தனியா வர்ற காச சேத்து ஒரு லெதர் செருப்பு எடுக்கலாம்னு எத்தன ஆசப்பட்டு சேத்தேன் தெரியுமா? சே! நமக்கு இதுக்குகூட அதிர்ஷ்டம் இல்ல."

"நீயே சொல்லு லதா, வீட்டு வாடக தொந்தரவு தாங்காமதான் எடுத்துட்டேன், இந்த மனுசனும் பணத்துக்கு ஏற்பாடு பண்ணாம குத்துக்கல்லு மாதிரி வந்து குந்திக்கிட்டாரு. நான் என்ன பண்ணுவேன்னு நீயே சொல்லு, அடுத்த வாரம் வரைக்கும் பொறுத்துக்க கண்டிப்பா வாங்கிடலாம்" சாரதா இரைஞ்சி கேட்டுக் கொண்டே அரிசி கழுவ ஆரம்பித்தாள்.

"பாவம்டி, இதோட வுட்ரு. அடுத்த வாரம் நாம போயி வாங்கிக்கலாம்."

"இல்ல லதா எப்ப நான் ஆசயா சேத்து வைச்சாலும் சத்தம் போடாம இப்படி பண்ணிடறாங்க. அதான் கடுப்பா வருது."

●○●

"இன்னைக்காவது கண்டிப்பா வாங்கலான்டி."

லதாவின் பார்வை சந்தேகமாய் விழுந்தது.

"வழக்கம் போல காசு இருக்காதுன்னு பாக்குறியா இந்த தடவை உண்டியல்ல போடாம பர்ஸ்லேயே சேத்து வைச்சிருக்கேன், ஒரு நூறு ரூபாய்க்குள்ள எடுக்கலாம்ல?"

"சாதாரண லெதர் செருப்பு எடுக்கலாம்."

பேசிக் கொண்டே அவர்கள் வீட்டை நெருங்குகையில் கதவு சாத்திக் கிடந்தது. மலரைப் பார்த்தவுடன் பக்கத்து வீட்டு முத்தம்மா அவசரமாக வந்தாள்.

"மலரு உங்க அப்பாவுக்கு எரப்பு அதிகமாயி அந்த மார்க்கெட்ல இருக்கிற



படிப்பகம்

www.padippakam.com

டாக்டர்கிட்ட தூக்கிட்டு போயி இருக்க றாங்க. உங்க ஆயி பாவம் தனியா கிடந்து தவிக்குது சீக்கிரம் போ.''

''அப்படியா! மலர், வாடி போக லாம்'' தன்னை மறந்தவளாய் அதிர்ச்சி யில் உறைந்து போயிருந்த மலர் கலக்கத் துடன் புறப்பட்டாள்.

மலரைப் பார்த்த வேகத்தில் சாரதா வுக்கு அழுகை பீறிட்டது.

''வாந்தி வர்ற மாதிரி இருக்கு துன்னு மத்யானம் வூட்ல வந்து படுத்த வரு தான். இரப்பு கூடி இப்படி ஆயி போச்சு. குளுக்கோஸ் ஏறுது. இன்னும் ஒரு ஊசி போடணுமாம். அது நூத்து இருவத்தஞ்சு ஆகுமாம்.''

''நல்ல வேளடீ லதா சீக்கிரம் வந் தோம். இந்தாம்மா பணம் டாக்டர்கிட் குடு. நெஞ்சு ஏறி ஏறி இறங்கறத பாத்தா பயம்மா இருக்கும்மா'' மலர் விசும்ப ஆரம்பித்தாள்.

''ஒன்னும் ஆகாது மலரு. தைரி யமா இரு. ஊசி போட்டா சரியா போயி டும். நீயும் அழுதா உங்கம்மா என்ன பண்ணும் பாவம்'' மலரின் கைகளை ஆறுதலாகப் பிடித்தாள் லதா.

''நல்ல வேளை. நேரா செருப்பு கடைக்குப் போவாம வீட்டுக்கு வந் தோம். இல்லேன்னா ரொம்ப கஸ்டமாயி ருக்கும்'' தழுதழுத்த குரலில் மலர் தனக் குத் தானே தேற்றிக் கொண்டாள்.

●○●

''மலரு, வா கட வரைக்கும் போயிட்டு வந்துடுவோம்'' சாரதா ஆர் வத்துடன் மகளைக் கூப்பிட்டாள்.

''வேலய வுட்டு வந்ததும் வராம எதுக்கு என்ன கூப்புடற நீயே போயிட்டு வா.''

''அட அதான் நீ கேட்டியே அந்த லெதரு செருப்பு வாங்கதான் கூப்பிட றேன் வா கிடக்கு.''

''ஆமாம், வாங்கறதுக்குன்னு வைச்சிருந்த காசுதான் வைத்தியத்துக்கு போயிடுச்சு இப்ப எங்க போறது.''

''அட காசு இல்லாமலா கூப்புட றேன். உங்க அப்பாதான் பணம் குடுத் துச்சு, சாயங்காலம் வந்தா மவ கால்ல செருப்பு இருக்கனுமுன்னு சொல்லிட்டு வேற போயிருக்கு.''

''அட! எல்லாம் ஆச்சரியமா இருக்கு. அப்ப சரி போகலாம் வா.''

விலைகளைக் கேட்ட மாத்திரத்தில் அவளுக்கு தோல் செருப்பின் மீதிருந்த காதலே அறுபட்டுப் போனது. ''வேணாம்மா, வா போகலாம் தெருக் கடையிலேயே வாங்கிக்கலாம்.''

''சரியான பைத்தி யம்டி, நீ சும்மா கிட. தம்பி அது என்ன வெல?''

''நூத்து பத்து ரூவாம்மா, அத விட்டா கம்மி இல்ல, இன்னும் கம் மியில போனா லெதர் இருக்காது, பரவாயில் லயா?''

மலர் கையைப் பிடித்து நெருட சாரதா கேட்பதாய் இல்லை. ''அதயே கொடுப்பா'' என்றாள்.

''பழச பேப்பர்ல சுத் திக்க, புதுச மாட்டிகிட்டு வாடி.''

மகள் நடக்க நடக்க மனதில் வலி குறைந்தவள் மாதிரி நிம்மதிப் பெரு மூச்சு விட்டாள் சாரதா.



●○●

''என்னடி ரெண்டு நாளா கால இந்த சொறி சொறிஞ்சிக்கற, எங்க கால காட்டு'' மலரின் காலைப் பார்த்த சாரதாவுக்கு திடுக்கிட் டுப் போனது.

''என்ன புள்ளையோ நீ கால பாத் தியா புண்ணு புண்ணா ஆயிருக்கு. காலு பூரா செதிள் செதிளா தோலு உரிஞ்சும் பாக்கலயாடி.''

''இந்த கெமிக்கல் மருந்துல வேல செய்யறதால சமயத்துல இப்படி வரும் அப்புறம் தானா சரியா போயிடும். அது மாதிரின்னு நெனச்சேன். இன்னைக்கு தான் அதிகமாயிடுச்சு.''

''அய்யோ இவ்ளோ தூரம் விட்டி ருக்கியே, நான் கூட பாக்கல. சரி வா வா கையோட டாக்டர்கிட்ட போகலாம். விட்டா வென கொன்னுடும்.'' தயக்கம் காட்டியவளை சாரதா கட்டாயப்படுத்த, அந்த அவசரத்திலும் புதுச் செருப்புக் குள் பதமாய் காலை நுழைத்துக் கொண் டாள் மலர்.

●○●

''டாக்டர் நல்லா இருந்த புள்ளக்கி திடீர்னு இப்படி காலு கொத கொதன்னு புண்ணாயிடுச்சு.''

''காலுல ஏதும் புதுசா பூசுனீங் களா? எங்க வேல செய்யறீங்க.''

''ராமராஜ் கெமிக்கல் இண்டஸ்ட்ரீ சுல சார்.''

சாரதா மனப்பாடம் போல் ஆரம் பித்தாள், ''தோல் செருப்பு வேணு மின்னு ஆசையா ரொம்ப நாளா கேட்டு கிட்டு இருந்தா அதான் சார் புதுசா வாங்கி குடுத்தேன். வேற எதுவும் இல்லை, புது செருப்பு கடிச்சிருக்கு முன்னு நெனச்சா இப்படி ஆயி போச்சு.''

''காலை மேல வைமா'', பல கோணங்களில் விரல் இடுக்கு பாதங் களை நோட்டமிட்டவர், ஒரு பீங்கான் பாத்திரத்தில் கால்களை வைக்க சொல்லி ஏதோ மருந்து கலவையை ஊற்றி ஆராய்ந்தவர் சட்டென மருந்து சீட்டில் எழுத ஆரம்பித்தார்.

''டாக்டர், பயம் ஒன்னும் இல்லை யே'' சாரதா நடுங்கிக் கொண்டே கே டாள்.

''பயப்படறதுக்கு ஒன்னுமில்லம கெமிக்கல்ல வேலை செய்யறாங்கல் அதான். கிளவுஸ் எதுவும் போடா வெறும் கால்ல அது ஊறி ஊறி உங் பொண்ணு காலுக்கும் தோல் செருப் கும் ஒத்துக்காம அலர்ஜியாயிடுச் இனிமேயாவது நான் சொல் ஃபாலோ பண்ணுமா. இனிமே லெத செருப்பே போடாத. சாதாரண அவா செப்பல் போடு... என்னா புரியுதா?''

''சரி டாக்டர்'', அதிர்ச்சி கலந்த ஏ கத்துடன் அம்மாவைப் பார்த்தாள் மல ஆசையின் ஒவ்வாமையால் அவள் க களிலிருந்தும் ஒரு ரசாயனம் கசிய ஆர பித்தது.



படிப்பகம்

www.padippakam.com

இரசிய நவம்பர்

# மீண்டும் ஸ்டாலின்

இந்த மாதம் 7-ஆம் தேதி நவம்பர் புரட்சி நாளன்று ரசியாவெங்கும் பல்லாயிரக்கணக்கான மக்கள் செங்கொடி ஏந்தி அணிவகுத்திருக்கிறார்கள். அவர்களுடைய கைகளிலெல்லாம் ஸ்டாலினின் படங்கள்!

ரசியாவிலேயே கம்யூனிசம் பூண்டற்றுப் போய்விட்டது என்று உலகமுதலாளித்துவம் குதூகலித்துக் கொண்டிருக்கும் வேளையில் மீண்டும் கம்பீரமாக அங்கே உயர்கிறது செங்கொடி.

அந்தப் பல்லாயிரம் தொழிலாளர்களில் ஒருவர் கையில்கூட குருச்சேவ், பிரஷ்னேவ் படங்கள் இல்லை என்பதை பார்த்தாவது இந்திய போலிகம்யூனிஸ்டுகளின் அணிகள் திருந்தட்டும்.

கிளாஸ்நாஸ்ட்டுக்கும் பெரஸ்த்ரோய்க்காவுக்கும் வரவேற்புரை வாசித்து, வாராது வந்த மாமணி என்று கோர்பச்சேவைக் கொண்டாடிய அறிஞர் பெருமக்கள் தெரிந்து கொள்ளட்டும் - கோர்பச்சேவின் படத்தைக் கவ்வுவதற்கு ஒரு நாய்கூட இல்லை ரசியாவில் என்ற உண்மையை!

மற்றவர்களுக்குப் புரியாவிட்டாலும் ஏகாதிபத்தியம் இதை தெளிவாகப் புரிந்து வைத்திருக்கிறது. கிரெம்ளினுக்குள் தன்னால் நுழைக்கப்பட்ட கிழட்டுப் போக்கிரி எல்ட்சின் செல்லாக்காசாகி விட்ட உண்மையும் ஏகாதிபத்தியங்களுக்குப் புரிந்துதான் இருக்கிறது. ஆனால் ஸ்டாலின் உயிர்த்தெழுவதைத் தான் முதலாளித்துவத்தால் புரிந்து கொள்ள முடியவில்லை, சகித்துக்கொள்ளவும் முடியவில்லை.

ஸ்டாலின் என்பவர் ஒரு தனி மனிதன் அல்ல - அவர் ஒரு வர்க்கத்தின் சித்தம். ரசியப் பாட்டாளி வர்க்கத்தினுடைய போர்க்குணத்தின் செறிவான வடிவம்.

பாசிசத்திலிருந்து உலகைக் காக்கவும், சோசலிசத்தைக் கட்டி எழுப்பவும் ரசிய மக்கள் எத்தகைய தியாகத்திற்கெல்லாம் தயாராக இருந்தார்களோ அந்த தியாகத்தின் தூண்டா விளக்கு - ஸ்டாலின்.

கம்யூனிசம் தோற்று ஒழிந்தது என்று கண்ணயரும் நேரத்தில் ''மீண்டும் ஸ்டாலினா'' என்று பேயைக்கண்டது போல திடுக்கிட்டு விழித்து பிதற்றுகிறது முதலாளித்துவம்.

பிரிட்டனின் 'பாரம்பரியமிக்க' நாளேடு என்று போற்றப்படும் டைம்ஸ், ஸ்டாலினினுடைய பேரனின் பேட்டியை வெளியிட்டு ''உலகெங்கிலுமுள்ள கம்யூனிச எதிரிகளே விழித்துக் கொள்ளுங்கள்'' என்று அபாயச்சங்கு ஊதியிருக்கிறது. (தி டைம்ஸ், ஆக-31)

ஸ்டாலினுடைய பேரனோ மாவோவின் கொள்ளுப்பேரனோ கம்யூனிஸ்டுகளாக இருக்கிறார்களா இல்லையா என்பதல்ல நம் கவலை; கம்யூனிசத்தின் வெற்றி அதனைக்கொண்டு தீர்மானிக்கப்படுவதும் இல்லை. ஆனால் ஸ்டாலினின் மகள் அமெரிக்கா சென்றதையும் மாவோவின் கொள்ளுப்பேத்தி ஆடை அலங்கார நிகழ்ச்சிக்குச் சென்றதை மிகுந்த முக்கியத்துவம் தந்து வெளியிட்டு தமது அற்பத்தனத்தைக் காட்டியவை இந்தப் பத்திரிக்கைகள்தான்.

'டைம்ஸ்' பேட்டிக்கட்டுரையின் சில பகுதிகளை மொழியாக்கம் செய்து தொகுத்துத் தருகிறோம். 'ஸ்டாலின் 2 கோடி பேரைக் கொன்றார்' போன்ற வழக்கமான அவதூறுகளும் அதற்கு அவரது பேரனின் பதிலும் இக்கட்டுரையில் உண்டு. பொய்களுக்கு ஒதுக்கும் அளவுக்கு நம்மிடம் இடம் இல்லாததாலும், அவை பலமுறை பதிலிறுக்கப்பட்ட அவதூறுகள் என்பதாலும் அவை இதிலிடம் பெறவில்லை.

ஸ்டாலினின் பேரன் ஜுகாஷ்விலி - அவர் அங்கம் வகிக்கும் கட்சி, அதன் கொள்கைகள் ஆகியவை பற்றி நம்மிடம் நேரடியான தகவல்கள் ஏதும் இல்லை. எனினும் ரசியாவில் மீண்டும் கருக்கொண்டிருக்கும் புரட்சியை அறிவிக்க இக்கட்டுரை பயன்படும்.

●○●

செஞ்சதுக்கத்தில் அவர் தன்னிந்தனியே நிற்கிறார். அவரது பாட்டனாரைப் போன்ற அதே சாம்பல் நிற முடி, உறுதியான கட்டுடல், கவர்ந்திழுக்கும் பார்வை - இவற்றுடன் தனது கட்சி மீண்டும் சோவியத் யூனியனை ஒன்றுபடுத்தி ஆட்சி செய்யும் என்ற தளராத நம்பிக்கை.

லெனின் நினைவிடத்தில் நிற்கும் காவலர் அவரிடம் மிகுந்த பணிவுடன் பேசுகிறார்; இன்னொரு காவலர் அவரிடம் ஆட்டோகிராப் கேட்கிறார். மற்ற பார்வையாளர்களின் கண்கள் விரிகின்றன. அது யார் அவரா, ஸ்டாலினா என்ற தாழ்ந்த குரலில் பேசிக் கொள்கிறார்கள்.

ஆம்! அவர் ஸ்டாலினின் பேரன். ஸ்டாலினின் மூத்தமகன் யாகோவின் முதல் மகன் - ஜுகாஷ்விலி. தனது பாட்டனாரின் கல்லறைக்கு அவர் முறையாக வருகிறார்; மலர்க் கொத்துகளை வைக்கிறார்; ராணுவ மரியாதை செய்பவர் போல அசையாமல் நிற்கிறர். ஸ்டாலினின் உருவச்சிலை பேரனைப்பார்ப்பது போலிருக்கிறது - மவுனமாக, அசையாமல், குற்றம் சாட்டுவதைப் போல.



நகர்ப்புறத்துக் குப்பைகளிலிருந்து

தனது தந்தையைப் பற்றியோ, தாத்தாவைப் பற்றியோ பழைய நினைவுகள் என்று கூறுமளவுக்கு ஜுகாஷ்விலியிடம் ஏதும் இல்லை. தனது குடும்பத்துடனோ, குழந்தைகளுடனோ நேரத்தைச் செலவிடாத, ஒதுங்கித் தனித்திருந்த மனிதர் ஸ்டாலின். அவர்களுக்கு ஏதும் சலுகை காட்டியதுமில்லை, பாசம் காட்டியதுமில்லை.

இரண்டாம் உலகப்போரின் போது ஸ்டாலினின் மூத்த மகன் யாகோவ் போர்க்களத்தில் சிறைப்பிடிக்கப்பட்டதை அறிந்தவுடனே ஹிட்லருக்கு பேரானந்தம்! போல்ஷ்விக் எதிரியின் மகன் தனது கையில். ''ஸ்டாலின்கிராடில் (செம்படையால்) சிறைப்பிடிக்கப்பட்ட நாஜி கமாண்டர் பவுலூசை விடுதலை செய், உன் மகனைத் தருகிறேன்'' என்பது ஹிட்லரின் பேரம்.



''ஒரு சாதாரணச் சிப்பாயான யாகோவிற்குப் பதிலாக ஒரு ஃபீல்டு மார்ஷலைக் கொடுப்பதா, அந்தச் சிப்பாய் யாராக இருந்தாலென்ன?'' முடியாதென்று மறுத்தார் ஸ்டா



படிப்பகம்

www.padippakam.com



ள் தேடும் இரசிய மக்கள்

லின். நாஜி சித்திரவதை முகாமில் யாகோவ் சுட்டுக் கொல்லப்பட்டார்.

தன் சொந்த தந்தை விசயத்தில் அன்று தாத்தா எடுத்த முடிவுதான் நியா

## சி நாள்:

# ீண்டும் புரட்சி

யமானது என்கிறார் ஜுகாஷ்விலி. இது மட்டுமல்ல ஸ்டாலின் செய்த அனைத்துமே சரியானவைதான் என்கிறார். இன்று ரசிய மக்களில் பெரும்பான்மையினரின் கருத்தும் அதுதான் என்கிறார். சமத்துவத்திற்கும் ஸ்டாலினிய உறுதிக்கும் ரசியா இன்று ஏங்கிக் கொண்டிருக்கிறது என்கிறார்.



நான்கு தீவிர கம்யூனிஸ்டு குழுக்களை ஐக்கியப்படுத்தி உருவாக்கியிருக்கும் "சோவியத் ஒன்றியத்திற்கான ஸ்டாலின் குழு" என்ற அமைப்பின் தலைவர்களில் ஜுகாஷ்விலியும் ஒருவர்.

இவர்கள் மூன்று முழக்கங்களை முன்வைக்கிறார்கள். அதிபராட்சியை ஒழிப்பது, மீண்டும் மக்களுக்கு அதிகாரம், களவாடப்பட்ட மக்கள் சொத்துக்களை மீட்பது.

நடைமுறையில் இந்த முழக்கங்களின் பொருள் இதுதான்: இன்றைய ஆளும் கும்பலின் சொத்துக்களைப் பறிமுதல் செய்வது, ஆலைகளையும் நிலத்தையும் மீண்டும் நாட்டுடைமையாக்குவது, மீண்டும் உள்ளூர் சோவியத்துக்களை உருவாக்கி கட்சியின் தலைமையில் ஆட்சியை நிறுவுவது.

பழைய சோவியத் ஆட்சி முறையையே மீண்டும் கொண்டுவருவதென்பது மிகவும் 'தீவிரமான புரட்சி' என்று இன்றைய ரசிய கம்யூனிஸ்டு கட்சி (திருத்தல்வாதக் கட்சி) கருதுகிறது.

இதெல்லாம் நடைமுறைக்குதவாத கொள்கை என்றும், காலம் கடந்த கொள்கை என்றும் சொன்னாலும் இதைத்தான் இன்று கோடிக்கணக்கான ரசிய மக்கள் விரும்புகிறார்கள்; அதிலும் குறிப்பாகப் பெரு நகரங்களைத் தவிர்த்த ரசியா முழுவதும் இதைத்தான் விரும்புகிறது.

ஜுகாஷ்விலி அரசியல்வாதி அல்லர். அவர் சோவியத் விண்வெளி ஆய்வுக் கூடத்தில் பொறியாளராகப் பணியாற்றி ஓய்வுபெற்றவர். "என்னுடைய நாடு அழிந்துகொண்டிருப்பதை நான் தொலைக்காட்சியின் முன் அமர்ந்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க முடியாது. ஸ்டாலினின் மரபைக் கட்டிக் காப்பது என் கடமை" என்கிறார் ஜுகார்ஷ்விலி.

"ஸ்டாலினின் அடக்குமுறை அடக்குமுறை என்று கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக அவதூறு செய்து வருபவர்கள் அவரது சாதனைகளை இருட்டடிப்பு செய்கிறார்கள்."

"அவர் நாட்டைத் தொழில்மயமாக்கினார், கூட்டுப் பண்ணைகளை உருவாக்கினார்; ரயில்வேக்களை உருவாக்கினார்; மின்சாரம், உணவு அனைத்தும் மிக மலிவாகக் கிடைத்தன; இலவசப் பள்ளிகள், இலவச மருத்துவம், மக்களுக்கு இலவச ஓய்வுநாள் சுற்றுலா மையங்கள்... அனைத்தும் அவரது சாதனைகள். அனைத்துக்கும் மேலாக அவர் பாசிசத்தை வீழ்த்தினார்."

"இன்றைய ரசியாவில் நீங்கள் காண்பதென்ன? 13 வயதுச் சிறுமிகள் விபச்சாரத்திற்கு விற்கப்படுகிறார்கள். பொதுச் சொத்துக்கள் சூறையாடப்படுகின்றன. பணம் இல்லை. ஒழுங்கு இல்லை. தங்கள் இழிந்த வாழ்நிலையைப் பற்றி மக்கள் முறையிடுகிறார்கள். கொஞ்சம் ஒப்பிட்டுப் பாருங்கள் - ஸ்டாலின் காலத்தில் நாம் எப்படி வாழ்ந்தோம், இன்று எப்படி வாழ்கிறோம் என்பதை! இன்றை ரசியாவில் பணக்காரர்கள் மட்டும்தான் வாழ்கிறார்கள்!"

சந்தைப் பொருளாதாரத்தின் விளைவாக வலுமைக்குத் தள்ளப்பட்ட கோடிக்கணக்கான ரசிய மக்கள் இவர் கூறுவதை அப்படியே ஏற்றுக் கொள்வார்கள். "ரசியா செத்துக் கொண்டிருக்கிறது" என்று ஜுகாஷ்விலி கூறுவதை கோடிக்கணக்கான மக்கள் ஏற்றுக் கொள்கிறார்கள்.

"கடந்த காலம் பொற்காலம் என்பது பொய். ஜுகாஷ்விலியின் அறைகூவலும் பொய்" என்று மாஸ்கோவிலிருக்கும் அறிவுஜீவிகள் வேண்டுமானால் இதை நிராகரிக்கலாம். ஆனால், "ரசியாவின் இந்த நிலைமைக்குக் காரணம் முதலாளித்துவம்தான்" என்ற கோபம் நாடு முழுவதும் குமுறிக் கொண்டிருக்கிறது.

இன்றைய சமூக நிலைமை மீதான வெறுப்பு இத்தனை பரவலானதாக இதுவரை இருந்ததில்லை; கடந்த காலத்திற்கான (சோசலிசத்திற்கான) ஏக்கம் இவ்வளவு வலிமைமிக்கதாக முன்னெப்போதும் இருந்ததில்லை.

ஜியார்ஜியாவில் உள்ள ஸ்டாலின் பிறந்த இடத்தை ஜியார்ஜிய அரசு பராமரிப்பதில்லை. அந்த செருப்பு தைக்கும் தொழிலாளியின் குடிசையை உள்ளூர் மக்கள்தான் பராமரித்து வருகிறார்கள். இன்னமும் ஜியார்ஜிய மக்கள் ஸ்டாலினைத் தங்கள் தேசிய நாயகனாகத்தான் கருதுகிறார்கள்.

ஜுகாஷ்விலி அடிக்கடி ஜியார்ஜியாவுக்குச் செல்கிறார். அங்கே ஸ்டாலின் சொசைட்டி என்ற அமைப்பின் தலைவர் அவர். ஜியார்ஜியா ரசியாவிலிருந்து பிரிவதை அந்த அமைப்பு கடுமையாக எதிர்த்தது. மீண்டும் சோவியத் யூனியனை ஒன்றுபடுத்துவதுதான் அந்த அமைப்பின் நோக்கம்.

ஆனால் அவ்வாறு ஒன்றுபடுத்துவது ராணுவ நடவடிக்கை மூலமோ வன்முறை மூலமோ அல்ல என்று வலியுறுத்துகிறார் ஜுகாஷ்விலி. உக்ரைன், மத்திய ஆசியா, காகஸஸ் மற்றும் பால்டிக் நாடுகளில் மீண்டும் ஒன்றுபடுவதற்கு ஆதரவாக மக்கள் கருத்து பெருகிவருகிறது என்கிறார் அவர்.

"இந்தப் பிரிவு தற்காலிகமானது. ஏற்கனவே ஸ்டாலின் இதை எதிர்பார்த்தார். குடியரசுகள் தாமாகவே முன்வந்து மீண்டும் இணையும் என்பதையும் அவர் அறிந்திருந்தார். எடுத்துக்காட்டாக, ஜியார்ஜியாவைப் பாருங்கள்! அதன் விவசாயம் அழிந்து விட்டது. விளைபொருட்களை விற்க முடியவில்லை. அதற்கு ரசியாவின் சந்தை தேவைப்படுகிறது."



படிப்பகம்

www.padippakam.com

# புரட்சிக்காக முதிர்ந்து வரும் முன்னாள் சோவியத் நாடுகள்

"டிசம்பர் '99-இல் நடைபெறவிருக்கும் தேர்தலில் கம்யூனிஸ்டுகள் ஒருவேளை பெரும்பான்மையாக வெற்றி பெற்றுவிட்டால் ரசியா மீண்டும் சோசலிச நாடாகி விடுமா?'' என்ற கேள்வியை முன்வைத்து மைக்கேல் லூகாஸ் என்பவர் 'நார்த் ஸ்டார் காம்பஸ்' எனும் பத்திரிகையில் எழுதியுள்ள கட்டுரையை கல்கத்தாவிலிருந்து வெளிவரும் பிரான்டியர் வார ஏடு இன்றைய நிலைமையைப் புரிந்து கொள்ள உதவும் என்பதால் அக்கட்டுரையின் மையக்கருத்தைத் தொகுத்துத் தருகிறோம்:

ரசியாவில் இரண்டு வகைக் கம்யூனிஸ்டு கட்சிகள் உள்ளன. குருசேவ் - பிரஷ்னேவ் வழியிலான (போலி) கம்யூனிஸ்டு கட்சிகள்; லெனின் - ஸ்டாலின் மரபை உயர்த்தும் கம்யூனிஸ்டு கட்சிகள்.

ரசியாவிலும், உக்ரேனிலும் வருகின்ற டிசம்பரில் நடைபெறும் தேர்தலில் அதிபர் பதவிக்கான வேட்பாளராக (போலி) கம்யூனிஸ்டுகள் போட்டியிடுகின்றனர். அதிபர் பதவியை ஒழிக்க வேண்டும் எனக்கூறும் 'ஸ்டாலின் குழு' பாராளுமன்றத் தொகுதிகளில் மட்டும் போட்டியிடுகிறது. யெல்சினை முறியடிப்பதற்கு செர் ஐக்கிய முன்னணி அமைத்துப் போட்டியிடலாம் என்று 'ஸ்டாலின் குழு', 'த்ருதோவ்யா ரசியா' ஆகிய குழுக்கள் (போலி) கம்யூனிஸ்டுகளுக்கு அழைப்பு விடுத்துள்ளனர். ஆனால் அவர்கள் இதுவரை பதிலளிக்கவில்லை.

ஒருவேளை அதிபர் தேர்தலில் (போலி) கம்யூனிஸ்டுகள் வெற்றி பெற்றாலும், முதலாளித்துவ நாட்டில் 'கம்யூனிஸ்டு' அதிபர் ஏதும் செய்ய இயலாது. ஆனால் இவர்கள் அப்படி நம்புகிறார்கள்.

ஐ.எம்.எஃப், உலக வங்கி, ஏகாதிபத்தியங்கள் ஆகியவற்றின் ஆதரவு பெற்ற தொழிலதிபர்கள், மாஃபியாக்கள் ஆகியோர் மூலமும் போலீசு, இராணுவம், உளவுத்துறை மூலமும் பயங்கரவாத, சீர்குலைவு நடவடிக்கைகளில் ஈடுபடுவார்கள்.

அமெரிக்காவும், நேட்டோ நாடுகளும் ரசியாவை ரத்த வெள்ளத்தில் மூழ்கடிக்குமேயன்றி சோசலிசத்துக்கு மீண்டும் செல்வதை கைகட்டி வேடிக்கை பார்க்காது.

மேலும் தற்போது எல்சினின் எடுபிடிகளாக இருக்கும் போலிகம்யூனிஸ்டு கவர்னர்கள் ஐ.எம்.எஃப் திட்டத்தைத் தான் அமல்படுத்துகிறார்கள். உக்ரைனிலோ போல்ஷ்விக் புரட்சியாளர்களை ஒடுக்குகிறார்கள்.

கடைசியாக சோவியத் ஒன்றியத்தில் நடத்தப்பட்ட வாக்கெடுப்பில் முன்னாள் சோவியத் ஒன்றியத்தின் எல்லா நாடுகளிலும் உள்ள ஆகப் பெரும்பான்மையான மக்கள் 'தனிநாடு' என்பதை நிராகரித்து மீண்டும் ஒன்றியமாக இணைவதற்கே வாக்களித்திருக்கிறார்கள். எல்சினும் தனிநாட்டுத் தலைவர்களும் வாக்கெடுப்பின் முடிவை புறக்கணித்து வேண்டுமென்றே சோவியத் ஒன்றியத்தை பிரித்தே வைத்திருக்கிறார்கள். சர்வதேசச் சட்டங்களுக்கே விரோதமான இந்தச் சதியை உலக முதலாளித்துவப் பத்திரிகைகள் திட்டமிட்டே இருட்டடிப்பு செய்கின்றன.

முதலாளி வர்க்கத்தின் கையில் அரசு இருக்கும்போது பாராளுமன்ற முறை மூலம் சோசலிசம் என்று பேசுவதும், அமைதி வழி மாற்றம் என்று பேசுவதும் பகல்கனவு.

மீண்டும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை நிறுவவும், சோவியத் ஒன்றியத்தை இணைக்கவும் நீண்ட போராட்டம் தேவை. இந்தப் புரிதலின் அடிப்படையில் 'ஸ்டாலின் குழு' முன்வைக்கும் ஐக்கிய முன்னணியை ஒரு செயல்தந்திரமாக வேண்டுமானால் ஏற்கலாம்.

இந்நிலைமைகளைக் கணக்கில் கொண்டு ''சோவியத் மக்கள் நட்புறவுக் கழகத்தின்'' முதல் பேராயத்தை அடுத்த ஆண்டு ஐரோப்பாவில் நடத்தவுள்ளோம். 1918-இல் ரசிய சோசலிசப் புரட்சியை அழிக்க ஏகாதிபத்தியப் படைகள் முயன்றபோது, நமது தாய், தந்தையர்கள் ''ரசியாவிலிருந்து வெளியேறு'' என உலகெங்கும் இயக்கமெடுத்தனர். அந்தப் பாதையை நாமும் பின்பற்றுவோம்.

டிசம்பர் '99 உடன் ஸ்டாலின் பிறந்து 120 ஆண்டுகளாகின்றன. அவர் மறைந்து 46 ஆண்டுகள் ஆகிவிட்டன. ஆனால் சோவியத் யூனியன் உடைவதற்கு நீண்ட நாள் முன்னமே ''ஸ்டாலினிய நீக்கம்'' தொடங்கிவிட்டது. ரசியாவை உருவாக்கிய அந்த மனிதனை சோவியத் கம்யூனிஸ்டு கட்சி புறக்கணித்திருக்கிறதே அந்தத் துரோகத்தைப் பற்றி இவர் என்ன சொல்கிறார்?

'கம்யூனிஸ்டு' ஆளும் கும்பல் தான் அதற்குக் காரணம் என்று குற்றம் சாட்டுகிறார் ஜுகாஷ்விலி.

''குருச்சேவ், பிரஷ்நேவ் ஆகியோரின் தலைமையில் கட்சி தனது லட்சியத்தையே கைவிட்டுவிட்டது. ஒரு புதிய ஆளும் வர்க்கம் தோன்றிவிட்டது. அது கள்ளத்தனமாகச் சொத்து சேர்த்தது, ஆடம்பரமான மாளிகைகளில் சொகுசாக வாழ்ந்தது. ஸ்டாலினின் காலத்தில் அவ்வாறு இல்லை. அவ்வாறு சொத்து சேர்ப்பவர்கள் ஒழித்துக் கட்டப்பட்டார்கள். ஸ்டாலின் மிக எளிமையாக வாழ்ந்தார். அவருடைய வீடு கூட அரசுக்குச் சொந்தமானது தான்... அவர் இறந்தபோது தனது வாரிசுகளுக்கு வீடோ, சொத்தோ எதையும் விட்டுச் செல்லவில்லை. அவரது தனிப்பட்ட உடைமைகளைக் கூட அவர் மக்களுக்கே விட்டுச் சென்றார். கம்யூனிச அமைப்பு முறையை அவர் உண்மையாகப் பற்றியொழுகினார்.''

தானும் அப்படித்தான் என்கிறார் ஜுகாஷ்விலி. மற்ற குடும்ப உறுப்பினர்கள் அரசியலில் ஆர்வம் காட்டவில்லை என்பது குறித்துப் பெரிதும் வருந்துகிறார்.

சமீபத்தில் அவர் ரசியா முழுதும் ஒரு மாத காலம் சுற்றுப்பயணம் செய்திருக்கிறார். பள்ளிகள், அரங்குகள் எங்கு சென்றாலும் கூட்டம். ஸ்டாலினை மீண்டும் நேரில் காணத் துடித்த கூட்டம். ரசியாவைக் காப்பாற்றுவதற்கு ஸ்டாலின் மீண்டும் வந்துவிட்டார் என்று அவர்கள் எண்ணினார்கள் போலும்!

''இன்று அதிகாரத்தில் இருப்பவர்கள் விசாரிக்கப் படுவார்கள். குற்றவாளிகள் தண்டிக்கப்படுவார்கள்'' என்று உணர்ச்சியற்ற குரலில் சொல்கிறார் ஜுகாஷ்விலி. அவரது ஸ்டாலின் குழு முன்வைத்திருக்கும் மூன்று முழக்கங்கள் அச்சத்தைத் தோற்றுவிக்கின்றன. பலர் சுட்டுக் கொல்லப்படலாம்.

'மக்களின் எதிரிகள்' எனப்படுவோருக்கு ஸ்டாலினியம் இரக்கம் காட்டியதில்லை. அந்தச் சொற்றொடரே இரத்தத்தை உறையச் செய்கிறது.

''ஒரு கோழியின் கழுத்தை முறிக்கச் சொன்னால் கூடத் தயங்குகின்ற மனிதன் நான். ஆனால் எல்ட்சினைப் பொறுத்தவரை அவனை நானே என் கையால் கோடரியைக் கொண்டு பிளந்தெறிவேன்'' என்று பிரகடனம் செய்கிறார் ஜுகாஷ்விலி.

● அஜித்



படிப்பகம்

www.padippakam.com



ஒன்பது பேரை பலிகொடுத்த - கே.கே. நகர் கட்டிடத் தொழிலாளிகள்

# விபத்து

கொசுக்கடிக்கு அஞ்சி
குடிசையில் படுக்காமல்
நடைபாதையில் உறங்கிய
மக்கள் மீது
வேன் ஏறியது
ஒருவர் சாவு.

இரும்புக் கம்பிகள் மீதமர்ந்து
பெங்களுருக்கு
லாரியில் பயணம் செய்த
பதினொரு தொழிலாளர்கள்
லாரி கவிழ்ந்ததால்
கம்பிகளால் குறதப்பட்டு
இறந்தனர்.

நடைபாதையில் உறங்கிக்கொண்டிருந்த
கட்டிடத் தொழிலாளிகள் மீது
கட்டிடத்துக்குக்
கல் சுமந்து வந்த
லாரி ஏறியது
ஒன்பது பேர் சாவு.

விபத்து என்றால் - அது
எதிர்பாராத சம்பவம்,
ஊகிக்க முடியாத துரதிருஷ்டம்—
என்று பொருள் சொல்கிறது
அகராதி.

அந்த வகையில்
சாலையில் ஓடவேண்டிய லாரி
நடைபாதைமீது ஓடினால்
அது விபத்து.

வீட்டில் உறங்கவேண்டிய மனிதர்கள்
தெருவில் உறங்குகிறார்களே
இதுவும் ஒருவகை
விபத்து தானோ?

'பயணிகளாய்'
பேருந்தில் செல்ல வேண்டிய
மனிதர்கள்
'கும்பலாய்'
காசு கொடுத்துக்
கழுமரம் ஏறியிருக்கிறார்களே
இதுவும் ஒருவகை
விபத்து தானோ?
காற்றுக்கு
மின்விசிறி வாங்காமல்
மரணத்தை வாங்கியிருக்கிறார்களே
இதுவும் ஒருவகை
துரதிருஷ்டம் தானோ?

• ○ •

சென்னை கே.கே. நகரில்
ஒன்பது பேர் இறந்ததற்கு
மறுநாள் மாலை - அந்தக்
கொலைக்களத்திற்குச் சென்றிருந்தோம்.

சாலையில் இரத்தத்தின்
சுவடில்லை.
சூழலில் துயரத்தின்
ஈரமில்லை.

உறைவதற்கு முன்னமே
ரத்தத்தின் ஈரத்தைக்
கார் டயர்கள்
நக்கிச் சென்றுவிட்டன.

எதிரிலுள்ள
உதயம் குளுகுளு திரையரங்கம்
மக்களது நெஞ்சின் ஈரத்தை
நக்கிக் கொண்டிருந்தது.

குளிர்பானங்கள், பழரசம்,
வேர்க்கடலை, சூப் வியாபாரம்....
அந்த நாற்சந்தியில்
ஆவி பறந்து கொண்டிருந்தது.

சாலையின் எதிர்ப்புறத்தில்
இழவு வீட்டுக்காரர்கள்
கேதம் கேட்பாரின்றி
அழுகையின்றி, அரற்றலின்றி
குத்துக்காலிட்டு அமர்ந்தபடி
இரக்கமற்ற இந்த நகரத்தை
வெறித்துக் கொண்டிருந்தனர்.



படிப்பகம்

www.padippakam.com

இந்தச் சூழ்நிலையில்
விளையாடலாமா கூடாதா
என்ற குழப்பத்தில்
அவர்களது பிள்ளைகள்
பிரமை பிடித்து நின்றிருந்தனர்.

இருண்டிருந்த வானம்
தூறத் தொடங்கியது.
உரச்சாக்கு, பாலித்தின் பைகளால்
வேயப்பட்ட பொந்துகளுக்குள்
அவர்கள்
தம்மைத் திணித்துக் கொண்டார்கள்.

கூரையைப்
புரட்டிக் கொண்டிருந்தது காற்று.
அவர்களது பார்வையோ
நடைபாதையில் நிலைத்திருந்தது.

நேற்று கண்ணீரில் நனைந்த
உறக்கமில்லாத இரவு-
இன்று
நடைபாதை நனைந்துவிட்டது.

மழை நின்றது.
அவர்கள் நடைபாதையை
உலர்த்தத் தொடங்கினார்கள்.

''ஏரி குளம் எங்கனா போங்க.
எங்கள ஏன் கழுத்தறுக்கறீங்க.
இனிமே எங்க லத்தி தான் பேசும்.
காலுக்குக் கீழே சுடுவோம்.''
— ஈரம் பிழியப்பட்ட அதிகாரம்.
போலீசு வேன்
சென்ற திசையைப்
பார்த்தபடி செய்வதறியாது நின்றார்கள்.

''என்ன செய்யப் போகிறீர்கள்''
என்று கேட்டோம்.

''இந்த தியேட்டர் கட்றதுக்கு
முன்னாடியிருந்து இங்கருக்கோம்.
சுட்டுப் போட்டா கூட
இங்கயேதான் கிடப்போம்.''

இவர்கள்
ஊரிலிருக்கும்போது விவசாயிகள்.
கலவை போடும்போது
கட்டிடத் தொழிலாளிகள்.
நடுத்தர வர்க்கத்துக்கு
நடைபாதை வாசிகள்.
போலீசுக்கு
மாமூல் சுரங்கங்கள்.
சிங்காரச் சென்னைக்கு
அசிங்கங்கள்.

''இங்க இருந்தா
வேலைக்கு கூப்டும் போவாங்க.
வாடகை வீட்டுக்குப் போனா

**வாழ்வும் சாவும்
ஊடும் பாவுமாக
நெய்யப்பட்ட வாழ்க்கையில்
பாதுகாப்பையும் விபத்தையும்
பிரிப்பது எங்கனம்?**

அங்க வந்து
யார் வேலை கொடுப்பாங்க''

வீடெடுத்துத் தங்கினால் -
வேலை கிடைக்காமல்
பட்டினிச் சாவு.
ஊருக்குத் திரும்பினால்
பஞ்சத்தில் சாவு.
உயரத்தில் கலவை போடும்போது
கால் தவறிச் சாவு.
நடைபாதையிலிருந்து புரண்டால்
சாலையில் சாவு.

வாழ்வும் சாவும்
ஊடும் பாவுமாக நெய்யப்பட்ட
வாழ்க்கையில்
பாதுகாப்பையும் விபத்தையும்
பிரிப்பது எங்ஙனம்?

''உங்கள் கோரிக்கை என்ன?''
ஆதங்கத்துடன் கேட்டோம்.
அவர்களிடம் கோரிக்கையில்லை
புகார்களும் இல்லை.

குடம் தண்ணீருக்கு
இரண்டு ரூபாய் கேட்கும் ரவுடி,
மிரட்டிப்பணம் பறிக்கும் போலீசு,
வீடு தருவதாக

**இவர்கள் ஊரிலிருக்கும் போது விவசாயிகள் கலவை போடும்போது கட்டிடத் தொழிலாளிகள். நடுத்தர வர்க்கத்துக்கு நடைபாதைவாசிகள், போலீசுக்கு மாமூல் சுரங் கங்கள். சிங்காரச் சென் னைக்கு அசிங்கங்கள்.**

ஆசை காட்டிப் பணம் பறிக்கும்
ஓட்டுப் பொறுக்கிகள்......

இதற்குமேல் யார்மீதும்
அவர்களுக்குப் புகார்களில்லை
கசப்புமில்லை.

ஆனால் மற்றவர்களோ
அவர்கள் மீது
குற்றப் பத்திரிகையே வாசித்தார்கள்.

''அரசாங்கம் இவுங்களுக்கு
வீடு கொடுத்திருக்கு சார்
அதை வாடகைக்கு விட்டுட்டு
இங்கே வந்து படுக்கிறாங்க''
என்றது யமஹாவைத்
துடைத்துக் கொண்டிருந்த ஒரு
நடுத்தர வர்க்கம்.

''அவுங்க உங்களை விட
வசதியானவங்க
மாசம் 7000 ரூபா சம்பாதிக்கிறாங்க''
என்றது
நாயை மேய்த்துக் கொண்டிருந்த
ஒரு பங்களா வர்க்கம்.

''எல்லாம் படிக்காத ஜனங்க
நம்மள மாதிரி படிச்சிருந்தா
ரோட்டில குடியிருக்கிறது
அநாகரிகம்னு புரிஞ்சிருக்கும்''
—இது அருகிலுள்ள
மருத்துவமனையில்
பணியாற்றும் மருத்துவர்.

குழந்தையும் தாயும்
குடும்பமும் தசைத்துண்டுகளாக
நசுங்கிய இடத்தில்
தெறித்த மனிதாபிமானம் இது.

● ○ ●

அவர்களில் ஒருவரை நானறிவேன்.

பத்தாண்டுகளுக்கு முன்
நான் தேநீர் அருந்தும் கடைக்கு
ஒரு பெரியவர் வருவார்.
மடியிலிருந்து பொக்கிஷம் போல
ஒரு அஞ்சலட்டையை
எடுத்துத் தருவார்.

எழுதித் தருவேன்.
கேள்வி ஒன்றுதான்
''மழை பெய்ததா?''
பிறகொரு நாள்
500 ரூபாய் மணியார்டர்
அனுப்புவார்.



படிப்பகம்

www.padippakam.com

அதைச் சிக்கனமாகச்
செலவிடும் முறைகளை - விவரமாக
விளக்குவார்.
ஒன்றரை அங்குல இடத்தில்
சிக்கனமாக
அதை எழுத முடியாமல்
தவிப்பேன்.

நாயரின் தேநீர்க்கடை
அவர் வந்த முகவரி.
சேலத்தின் வறண்டதொரு
கிராமம்தான் அவர் சொந்த முகவரி.

சென்னை மண்ணில் அவர்
சிந்திய வியர்வையில்
யார் யாருக்கோ
கட்டிடங்கள் வளர்ந்தன.

அவருடைய மண்ணில் மட்டும்
பயிர் வளர்வில்லை.

மீண்டும் விவசாயியாகாமலேயே
அவர் இறந்திருப்பாரோ?

எத்தனைக் கனவுகளை
உயிருடன் விழுங்கியிருக்கின்றன
சென்னையின் மாளிகைகள்?

எத்தனை கனவுகள்
புரண்டு கொண்டிருக்கின்றன
இந்த நடைபாதையில்?

அன்று லாரிச் சக்கரத்தில்
நசுங்கிய கனவு
கதிரின் மணமா,
மகளின் திருமணமா?

பெரியவரின் கனவு
பேத்தியைக் கட்டிக் கொடுப்பது
பேத்திக்கோ
பீச் பாக்கனும், ரஜினி பாக்கனும்.

"என்னமோ சொன்னாப்ல இருக்கு.
நமக்கே குந்த இடமில்லை
வயசுப்புள்ளய கூட்டியாந்து
எங்க ராத்தங்க வைக்க"
சிரிப்பார் பெரியவர்.

பத்தாண்டு முன்னேற்றத்தில்
பேத்தியும் வந்திருப்பாள்
கல் சுமக்க.

அன்று பெரியவரும்
அடிபட்டுச் செத்திருப்பாரோ!
அவர் பெயர் மறந்துவிட்டது
முகம் மறந்துவிட்டது - அந்தக்
கண்கள் மட்டுமே
நினைவில் எழும்பி
கண்கலங்க வைத்தது.



***கட்டிடத் தொழிலாளர்களின் பாதையோர பொந்துகள்***

அரசாங்க வீட்டை
வாடகைக்கு விட்டவர்கள்
6000 ரூபாய் சம்பாதிப்பவர்கள்
நாகரிகம் தெரியாதவர்கள்
என்று குற்றப்பத்திரிகை வாசிப்போர்

நெடுஞ்சாலையின் விளிம்பில்
மரணத்துடன் விளையாடும்
அவர்களது
குழந்தைகளைக் கண்டு
ஒரு கணமேனும்
பதறியிருப்பார்களா?

ஓடிவந்து கால்களில் மோதும்
ஒரு குழந்தையையேனும்
தொட்டுப்
புன்னகைத்திருப்பார்களா?

இல்லையெனில்
இதுவும் தற்செயலா?
இதுவும் ஒருவகை விபத்தா?

● ○ ●

நடைபாதைக் குடியிருப்புகள்
நெடுஞ்சாலைப் படுக்கையறைகள்...

அகராதியில் ஏறுமுன்,
நாகரிகம்
அப்புறப்படுத்தத் துடிக்கும்
இச்சொற்றொடர்களும் கூட
விபத்துகள் தானோ?

சைதாப்பேட்டை பிணம்
ஒரு மணிநேரத்தில்
அப்புறப்படுத்தப்பட்டு விட்டது
போலீசின் சுறுசுறுப்பைப்
பாராட்டுகிறது தினமலர்.

டயானாவின் பிணம்
அப்புறப்படுத்தப்படாமல்
தினசரிகளில் முதல்பக்கத்தில்
நாட்கணக்கில்
நாறிக் கொண்டிருந்ததே
அதுவும் தற்செயல்தானோ?

புகைப்படக்காரர் துரத்தினாரா
ஓட்டுனர் குடித்திருந்தாரா
மிகையான வேகமா,
சதியா....
எத்தனைக் கேள்விகள்!

அதிகாரிகள் குடியிருப்பு
ஆசிரியர் குடியிருப்பு
அரசு ஊழியர் குடியிருப்பு...
கட்டித்தந்த தொழிலாளர்க்கு
ஒரு குடியிருப்பு இருந்திருந்தால்...

பேருந்தில் செல்லுமளவு
பெங்களூர் சென்றவர்களுக்கு
'வசதி' இருந்திருந்தால்...

கட்டை வண்டிகள்
உந்து வண்டிகளான பின்னரும்
அவற்றில்
மாடுகளுக்குப் பதிலாகப்
பூட்டப்பட்ட ஓட்டுனர்கள்
மனிதர்களாக நடத்தப்பட்டிருந்தால்...

வேலைக்கும் உணவுக்கும்
ஓய்வுக்கும் ஊதியத்துக்கும்
உத்திரவாதமிருந்திருந்தால்.....

இவையெல்லாம் இவர்களுக்கு
இல்லாமல் போனது
ஊகிக்க முடியாத துரதிருஷ்டமல்ல.

அடுக்குமாடி, மாளிகைகள்
ஊகிக்க முடியாத
அதிருஷ்டங்களுமல்ல

நெடுஞ்சாலைக்கும்
அடுக்குமாடிகளுக்குமிடையில்
கிடுக்கிப்பிடியில்
நடைபாதை சிக்கியது
விபத்துமல்ல.

● மருதையன்



படிப்பகம்

www.padippakam.com

## சிறுகதை:

# அபின்

● சிவசுப்பிரமணிய ஜெயசேகர், மருத்துவர்

ஏனங்குடிக்குப் புதிதாக மருத்துவனாக வந்தபோது வீட்டின் மொட்டை மாடியிலிருந்து சாலையை வேடிக்கை பார்ப்பது எனக்கு வழக்கம்.

மாட்டின் வாலை முறுக்கிவிட்டு அதன் பின்னே நடப்பவர்கள்; வெள்ளை வெளேரென்ற ஆட்டுக் குட்டியை நெஞ்சோடு அணைத்துக் கொண்டு நடப்பவர்கள்; தெருவில் யாரையாவது பார்த்து விட்டால் தலையைக் குனிந்து செல்லும் இளம் பெண்கள்; என்னைப் பார்த்தால் நிறுத்தி வணக்கம் செலுத்திவிட்டுப் போகும் பால்காரர்கள்; புது டாக்டர் எப்படி இருக்கிறார் என ஆவலுடன் என் வீட்டை நோட்டமிடுபவர்கள்...

அப்போதுதான் முதல் முறையாக அப்பாசைக் கவனித்தேன். காற்றில் மிதப்பது போல மெதுவாக மண்ணெண்ணெய் வண்டியை மிதித்துக் கொண்டு செல்வார். அவரது வலது காலை அழுக்கான சேலைத் துணியால் சுற்றியிருந்தார்.

அரசு மருத்துவமனையில் வெளி நோயாளிகள் பிரிவில் நான் இருந்த போது அதே கட்டுடன் அப்பாஸ் ஒரு நாள் என்னைச் சந்தித்தார்.

"கால்ல என்னங்க?" என்றேன்.

"கால்ல புண்ணுங்க சார்" என்றவாறே தரையில் உட்கார்ந்து மெல்ல தனது துணிக்கட்டை அவிழ்க்க ஆரம்பித்தார்.

இரண்டங்குல அளவிற்குப் பெரிய புண் நடு உள்ளங்காலில் இருந்தது. ஆழமான அந்தப் புண்ணின் உள்பகுதி கறுத்து இருந்தது. டார்ச் விளக்குடன் நான் குனிந்து போது புண்ணிலிருந்து ஒரு வித நாற்றம் பரவியதை உணர முடிந்தது. இத்தனைப் பெரிய புண்ணுடன் எப்படி இவர் மண்ணெண்ணெய் வண்டியை மிதிக்கிறார் என வருத்தமாக இருந்தது.

"புண்ல வலி இல்லீங்களா?" என்றேன்.

"அதெல்லாம் ஒண்ணுமில்லேங்க" என்றவாறு தனது இருகைகளாலும் புண்ணை அழுத்தி எனக்குக் காட்டினார்.

"அப்பாஸ் அண்ணனுக்கு நாலஞ்சு வருஷமா சக்கரை வியாதி இருக்கு சார். அதான் புண்ணு ஆற மாட்டேங்குது. நாங்களும் என்னன்னவோ மருந்து கொடுத்துப் பார்த்துட்டோம்" என்றார் மருத்துவமனை ஊழியர் ராதாகிருஷ்ணன்.

அப்பாஸ் அண்ணன் என்று அவர் அப்பாசை மரியாதையாக விளித்தது எனக்கு வியப்பாக இருந்தது. வியப்பிற்கு விளக்கம் உடனே கிடைத்தது.

"சார் உங்களுக்கு ஏதுனா மண்ணெண்ணை வேணுமின்னா அண்ணங்கிட்ட சொல்லுங்க, வீட்ல வந்து கொடுக்கச் சொல்றேன்" என்றார்.

அதற்குள் அப்பாஸ் "இந்தப் புண் ஆறுமா சார்?" என்றார்; அவரது பார்வையில் நம்பிக்கையின்மை தென்பட்டது.

"ஆற வைக்கலாங்க. ஆனா தினம் நீங்க இன்சுலின் ஊசி போட்டுக்கணும்; அப்புறம் நீங்க மண்ணெண்ணெய் வண்டி மிதிக்கக் கூடாது. உங்க தொழிலை கொஞ்சம் மாத்திக்கணும். அப்போதுதான் சீக்கிரம் ஆறும்," என்றேன்.

"ஊசி இங்கேயே போட்டுக்கலாமா?"

"இல்லீங்க இதமாதிரி கிராமப்புறத்து ஆஸ்பத்திரிக்கெல்லாம் இன்சுலின் தரமாட்டாங்க. நீங்கதான் வாங்கிட்டு வரணும்" என்றேன்.

எனது பதிலை எதிர்பார்த்தது போல் மீண்டும் காலை துணியால் சுற்ற ஆரம்பித்தார். நான் அவரைத் தடுத்தவாறே "வேணாங்க அந்த மாதிரி அழுக்குத் துணியால சுத்தாதீங்க. தினமும் காலைல வந்து இங்க கட்டிட்டுப் போங்க" என்றேன்.

தலையாட்டிய அப்பாஸ் அண்ணனை ஊழியர் அன்புடன் இழுத்துச் சென்றார். அன்று அப்பாசிடம் வாங்கும் மண்ணெண்ணெய்க்கு அவர் காசு கொடுப்பாரா என்பது சந்தேகம்தான்...

● ○ ●

எனினும் சில நாட்கள் தொடர்ந்து கட்டு கட்டி வந்ததில் புண் ஆறுவதைப் பார்க்க அப்பாசிற்கு என் மேல் நம்பிக்கை ஏற்பட்டிருக்க வேண்டும். எப்படியோ ஒரு நாள் இன்சுலின் ஊசியுடன் வந்தார். எனக்கு மகிழ்ச்சியாக இருந்தது. எப்படியாயினும் ஒரு ஏழைத் தொழிலாளியின் நோய் குணமானால் சரிஎன்பது போல் "இன்சுலின் நீங்களே வாங்கிட்டீங்களா பரவாயில்லை. ஆனா ஊசி 40 ரூபாய்க்கு மேல் இருக்குமே."

"ஆமாங்க ஆனா புண்ணு இப்போ ஆறி வருதுங்க. நீங்க சொன்ன மாதிரி ஊசி போட்டுக்கிட்டா சீக்கிரமே நல்லா யிடுமில்ல."

அப்பாஸ் ஊசி போட்டுக் கொண்டு கட்டும் அறைக்கு நகர்ந்ததும் ராதாகிருஷ்ணன் என் அருகில் வந்து கிசுகிசுப்பாக "சார் வடக்குத் தெரு போயிருக்கீங்கல்ல. மு.கா. வீடுன்னு சொல்லுவாங்கல்ல," என்றார். நான் புரியாது விழித்தேன்.

"சார் அந்த தெருவுல வீட்டு முன்பக்கம், காம்பௌண்டு சுவரு எல்லாத்திலேயும் கறுப்பு கலர்ல டைல்ஸ் பதிச்சிருப்பாங்கல்ல சார். அவர் இவருக்கு அண்ணன் சார்."

"ரெண்டு பேருக்கும் ஒரே அம்மா. ரெண்டு அப்பா சார்" என்றார்.

இதைக் கேள்விப்பட்டதும் எனக்கு கஷ்டமாக இருந்தது. ஒரே தாயின் வயிற்றில் பிறந்தவர்கள். ஒருவர் தனது வீட்டின் சுற்றுச் சுவர்களைக் கூட ராஜஸ்தானத்து டைல்ஸ்களால் அழகுபடுத்துகிறார். இன்னொருவர் ஆறாத புண்ணுடன் கூட வண்டியோட்டிப் பிழைக்கிறார். ஏன் இப்படி?

எல்லோரும் ஒரே தட்டில் உணவு உண்ணும் சகோதரத்துவம் எங்கே போனது? நான் சந்தேகத்தை எழுப்பிய உடன் ராதா "அதெல்லாம் சும்மா சார்! சும்மானாச்சுக்கும் கல்யாணம்னா எல்லாம் அப்படி செய்வாங்க. அவ்வளவு தான்; ஏனங்குடியில் எவ்வளவு முசுலீம்கள் ஏழைகளா இருக்காங்க. எல்லாம் சொல்லுவாங்க சார். ஆனா நம்பள மாதிரிதான்" என்று என்னையும் தன்னோடு சேர்த்துக் கொண்டார்.

● ○ ●

ஓரிரு மாதங்கள் கழித்து அப்பாஸ் தன் மனைவியோடு மருத்துவமனைக்கு வந்திருந்தார். "ரொம்ப நன்றிங்க சார். புண்ணு இப்போ நல்லா ஆறிடுச்சு சார்;" அப்பாஸின் கண்களில் ஈரம். "நீங்க எந்தம்பி மாதிரி, ஆறு மாசமாக இந்த புண்ணை வச்சிகிட்டு வண்டி ஓட்றதுக்கு சிரமப்பட்டார். நீங்க நல்லா இருக்கணும்" என்றார் அப்பாசின் மனைவி.

தொடர்ந்து அப்பாசின் மனைவி "இன்சுலின் ஊசி போதுமா? இல்ல, இன்னும் போடணுங்களா" என்றார்.

"அவருக்கு மாத்திரையில இரத்தத்தில் சக்கரை குறையிரது இல்ல அதனால ஊசிய தொடர்ந்து போடுறதுதான் நல்லது" என்றேன்.

"ரொம்ப கஷ்டமாக இருக்குது தம்பி; ஊசி ரொம்ப வெலையாவுது; நீங்



படிப்பகம்

www.padippakam.com

கதான் எப்படியாவது அரசாங்கத்துல சொல்லி ஊசி வாங்கி போட்டு வுடுங்க'' என்றவாறு கையெடுத்துக் கும்பிட்டார்.

நான் அரசாங்கத்தின் பிரதிநிதி அல்ல; கையாலாகாத ஒரு அரசாங்க ஊழியன் என அவர்களுக்கு எப்படிப் புரிய வைப்பது?

●○●

அன்று இரவு ஜான் முகமதுவைப் பார்க்க அவரது வீட்டிற்குச் செல்ல வேண்டியிருந்தது. ஜான் முகமது என்னைப் பொறுத்தவரையில் ஒரு அற்புதமான மனிதர். சற்றும் களங்கமில்லாத சிரிப்பு அவர் தாடிக்குப் பின்னிருந்து வந்து கொண்டேயிருக்கும். என்னை மதிப்பவர். என்மேல் பிரியம் உள்ளவர். ஐந்து வேளை தொழுகை செய்யும் அவர் நாத்திகனான என்னுடன் கை கோர்த்துக் கொள்வார். என் தந்யையின் வயதையொத்த ஒருவருடன் சமமாக கைகோர்த்துப் பேசுவது எனக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

அவர் வீட்டின் எதிரிலிருக்கும் சந்தில் அப்பாஸ் திரும்புவுதை தற்செயலாக கவனித்தேன்.

''என்ன மண்ணெண்ணெய்க்கார அப்பாஸ் இங்க போறாரு'' என்றேன் அவரிடம்.

''உங்களுக்குத் தெரியாதா, அப்பாஸ் வீடு அங்கதான் இருக்கு'' என்றார் ஜான் முகமது.

அந்த இருளில் சந்திற்கு அப்பால் இருந்த அப்பாசின் வீடு எனக்குப் புலப்படவில்லை.

''அப்பாசின் அண்ணன் வீடு வடக்குத் தெருவில இருக்குன்னாங்களே?'' என்றேன்.

''ஆமா பாகப் பிரிவினையிலே அவங்க கொஞ்சம் மோசடி செஞ்சுட்டாங்க.''

''நீங்க இருந்துமா இப்பிடி செஞ்சுட்டாங்க'' என்றேன்.

''இல்ல, நான் ஏனங்குடி ஜமாத்துல்ல. அது கரைப்பாக்கம் ஆதலையூர் ஜமாத்'' என்றார் ஜான் முகமது.

''எல்லோரும் சகோதரர்ன்னு சொல்றீங்க ஆனா ஜமாத்துக்கு ஜமாத் இப்படி வேறுபாடா?''

புன்னகையுடன் ''என்ன செய்யிறது, காலம் மாறிப் போச்சு. தப்புப் பண்றவங்க எல்லா இடத்துலயும் இருக்காங்க. நாங்கூட அவன் அண்ணன்கிட்ட சொல்லிப் பார்த்தேன். கேக்கலை, சரி நம்ம வீட்டுக்கு எதிரில இருக்கிற சந்துல அந்த பழைய வீடு சும்மா கெடந்துச்சு. அதான் இங்க கொண்டு வச்சுருக்கேன்'' என்றார். அவரின் பணிவு என்னை நெகிழ வைத்தது.

''அப்பாசுக்கு தினம் இன்சுலின் போடணும், பாவம் ஊசி வாங்க காசு இல்ல போலிருக்கு. நீங்க உங்க ஜமாத்துல சொல்லி கொஞ்சம் ஊசி வாங்கி கொடுக்க முடியுமா?'' என்றேன்.

''ஜமாத் என்னங்க, ஜமாத் இதுக்கு, நானே வாங்கி தர்றேன்'' என்றார். சொன்னபடியே ஊசியும் வாங்கிக் கொடுத்தனுப்பினார். பலமுறை ஏழை முஸ்லீம் நோயாளிகளுக்கு மருத்துவ உதவி தேவைப்படும்போதெல்லாம் அவரை நாடியிருக்கிறேன். மனம் கோணாமல் அவரும் உதவியிருக்கிறார். ஆனால் எத்தனைக் காலம்தான் அடுத்தவர் தயவில் வாழ முடியும்? அப்பாஸ் ஊசி போட வருவது மெல்ல மெல்ல நின்று போயிற்று.

அதிகமான வேலைப் பளுவின் காரணமாகவும், மனிதர்களை அறைக்குள் மட்டுமே சந்திக்கும் வாழ்க்கை முறையின் காரணமாகவும் நானும் அப்பாசை மறந்து போனேன்.

●○●

ஓரிரு வருடங்கள் கழிந்திருக்கலாம். ஒரு நாள் மருத்துவமனையின் வெளி நோயாளிகள் பிரிவில் இருந்தபோது வாசலில் திடீரென ஒரே கூட்டம். கூச்சல். மருத்துவமனை ஊழியர்கள் கட, கடவென வாசல் பக்கம் ஓடினார்கள். கூட்டத்தை விலக்கியவாறு ஒரு சிலர் 'வழியவிடுங்க' என்றவாறு ஒரு பெண்ணை இரத்தம் ஒழுக தூக்கி வந்தனர். நிறம் மங்கிய அப்பெண்ணின் துப்பட்டா முழுவதும் ரத்தம் நிறைந்திருந்தது. அருகில் வந்ததும் தெரிந்தது அந்தப் பெண் அப்பாசின் மனைவி என்று.

மருத்துவமனை வராண்டாவில் படுக்கச் செய்து ''என்னவாயிற்று'' எனக் கேட்டேன். ''நம்ம ரெண்டாம் நம்பர் பஸ்ல அடிபட்டுட்டாங்க சார்'' என்றார் ஒருவர். புடவையை சற்று விலக்கி கால்களைப் பார்த்தேன். வலது கால் முழுக்க சிதைந்து போயிருந்தது. கூட்டத்திலிருந்து பலர் 'உச்' கொட்டினார்கள். ஏதும் செய்ய இயலாத நிலையில் அவளைர உடனடியாக நாகப்பட்டினம் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்துவிட்டு நாற்காலியில் வந்து அமர்ந்தேன். மருத்துவமனை வளாகத்தில் இருந்து கூட்டம் கலைந்து கூச்சல் ஓய்ந்து அமைதி நிலவியது.

''எப்படி ஆச்சுங்க ஆக்சிடெண்ட்?'' என்றேன் ராதாவிடம். அதற்குள் கடைத்தெருவிற்குப் போய் நிறைய தகவல்கள் சேகரித்து வந்திருந்தார்.

''அப்பாசுக்கு ரொம்ப முடியாம போய் நாகப்பட்டணம் கவர்மெண்ட் ஆஸ்பத்திரில சேத்துட்டாங்களாம். இது





படிப்பகம்

www.padippakam.com

அவருக்கு சாப்பாடு எடுத்துக்கிட்டு போயிருக்கு. ஏறுறத்துக்குள்ளே பஸ்ஸை எடுத்துட்டானாம் அந்த டிரைவர். ரொம்ப மோசம் சார். எப்பவுமே ஓவர் ஸ்பீடு. பஸ்ஸ எடுத்த வேகத்துக்கு இந்தம்மா கீழே விழுந்து கால் பின் சக்கரத்துல மாட்டிக்கிச்சு." நேரில் பார்த்தவர் போல் இதைச் சொன்னார்.

"அப்பாசுக்கு என்னவாம்" என்றேன் மெதுவாக.

"ரொம்ப மோசமா இருக்காராம். சார். அன்னிக்கு ஒரு நாள் நானே பார்த்தேன். மூஞ்சி, கை, காலெல்லாம் வீங்கி கிடந்தது. பிழைக்க மாட்டார் சார். கஷ்டம்! ஆனா பாவம் சார் ரெண்டும் சின்ன சின்ன பிள்ளைங்க. அதுங்களை காப்பாத்த வேண்டியது இந்த அம்மாதான் அதுக்குள்ள இவங்களுக்கு இப்டி ஆயிருச்சே" என்றார்.

சமூகத்தின் அவலம் ஒரு சிலருக்கு வெறும் செய்தியாகவே உள்ளது. இந்தச் சமூகத்தின் மீது மக்களை கோபம் கொள்ளாமலிருக்கச் செய்வது எது என யோசிக்கச் சொன்னது. யோசிக்க யோசிக்க தலைவலி அதிகமாக மருத்துவமனையிலிருந்து வீட்டிற்குச் சென்றேன்.

என் மனைவி எனது முகவாட்டத்தைப் பார்த்ததும் முகம் மாறினாள். மருத்துவமனையில் நடைபெறும் சோகங்களை அங்கேயே மறந்துவிட வேண்டும் என்பது அவளது கட்சி. வாழ்க்கையில் வசதியான வீட்டில் பிறந்து செல்லப் பெண்ணாக வளர்ந்து வாழ்பவளுக்கு வாழ்வின் துன்பங்களும் துயரங்களும் தெரிந்திருக்க நியாயமில்லையோ? வருத்தத்திலேயே படுத்து உறங்கிப் போனேன்.

● ○ ●

பத்துப் பதினைந்து நாட்களுக்குப் பிறகு மருத்துவமனையில் உட்கார்ந்து ஏதோ புத்தகம் படித்துக் கொண்டிருந்தேன். ஐப்பசி மாதமாக இருக்க வேண்டும். இப்போதெல்லாம் தமிழ் மாதங்கள் எங்கே தெரிகிறது. ஆனால் வெளியே மழை மட்டும் ஐப்பசி மாதத்தை நினைவில் வைத்துக் கொண்டு கொட்டு, கொட்டென்று கொட்டிக் கொண்டிருந்தது. மழையைப் பார்த்தபோது எனக்கும், நோயாளிகளுக்கும் இடையில் திரை விரித்தது போல இருந்தது. எனக்கு இது போன்றவையே ஓய்வு நாட்கள். அப்போது அந்த மழையிலும் குடை பிடித்துக் கொண்டு ஒருவர் வருவது தெரிந்தது. ஜான் முகமதுவின் வீட்டு வாசலில் அடிக்கடி பார்த்த முகமாக தெரிந்தது. "என்ன விஷயம்?" என்றேன். அவசரமாக வரச்சொல்லி ஜான்முகமதுதான் சொல்லி அனுப்பியிருந்தார்.

வாசலில் ஆட்டுக் குட்டிகளுடன் உட்கார்ந்து மழையை ரசித்துக் கொண்டிருந்தார் ஜான் முகமது. என்னைக் கண்டதும் பரபரப்பானார். "என்னது நடந்தே வந்துட்டீங்க. சொல்லியிருந்தா நான் ஆட்டோ அனுப்பியிருப்பேன்ல" என்று அன்புடன் கடிந்து கொண்டார்.

காப்பி கொடுத்தவாறே "நம்ம அப்பாசிற்கு ரொம்ப சீரியசா இருக்கு. நீங்க கொஞ்சம் வந்து பாக்க முடியுமா? அதுக்குத்தான் கூப்பிட்டு அனுப்பிச்சேன்" என்றார்.

"ஏன்? என்னவாச்சு? அவரோட பெண்டாட்டி கூட பஸ்ஸில அடிபட்டாங்களே? அவங்க எப்படி இருக்காங்க?"

"சட்டென்று அப்பாஸ் முகத்தில் ஒரு புன்சிரிப்பு பரவியது. ஆயிரம் அர்த்தங்களைச் சொல்லக் கூடியது அந்தச் சிரிப்பு. மெல்ல வாயைத் திறந்து அரபியிலோ, உருதிலோ ஏதோ கூறினார். வார்த்தைகள் தெளிவாக வந்து விழுந்தன. அதுதான் அப்பாஸ் உச்சரித்த கடைசி வார்த்தைகளாக இருக்கும்.

"அப்பாசுக்கு உடம்பு முடியாம இருந்து நாகப்பட்டினம் ஆஸ்பத்திரில சேத்து இருந்துச்சு. இடையே இந்த அம்மா வேற பஸ்ஸில அடிப்பட்டு அங்கேயே சேர்த்துருந்தாங்க. பாக்கிறதுக்கு ஆளில்ல, பணமும் இல்ல. அதனால ரெண்டு பேரையும் இங்கு கொண்டு வந்துட்டாங்க. பிள்ளைங்க ரெண்டு பேரும் சின்ன பசங்க அதுலயும் பெரிய பொண்ணு வயசுக்கு வந்துருச்சி. அதுதான் ஆத்தாவுக்கும் அப்பனுக்கும் கஞ்சி வைச்சு கொடுக்குது; இடையில ஒரு வாரமா பெய்யிற மழையில அவங்க குடியிருக்கிற வீடு பாதி இடிஞ்சி விழுந்துடுச்சி; ரொம்ப பாவமா இருக்கு சார்."

அப்பாசின் வாழ்க்கையில் நடைபெற்ற சம்பவங்களைக் கோர்வையாக நினைவுபடுத்திப் பார்க்கும்போது எனக்கு வாழ்க்கை மீதே வெறுப்பு உண்டாயிற்று. மெல்ல எழுந்து ஒரே குடையின் கீழ் இருவரும் அப்பாசின் வீட்டை நோக்கி நடக்கலானோம்.

இப்போதுதான் அப்பாசின் வீட்டை முதன் முதலாகப் பார்க்கிறேன் வீட்டினுள் நுழைந்து பார்ப்பதற்கு கதவுகளும், ஜன்னல்களும், தேவையற்றதுஎன்பது போல முன் சுவர் இடிந்து பார்வைக்கு வழிவிட்டிருந்தது. கிழிந்து கையால் தைக்கப்பட்டிருந்த ஒரு சாக்கின் உதவியால் வீடு இரண்டாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அந்த மறைவுக்குப் பின்னாலிருந்து அப்பாசின் வயதுக்கு வந்த பெண்ணின் முகம் எட்டிப் பார்த்தது.

எந்த பிரக்ஞையும் இல்லாமல் குப்பை போன்று அப்பாஸ் படுத்திருந்தார்; படுக்க வைக்கப்பட்டிருந்தார். முகம் வெள்ளை வெளேரென வெளிறிவிட்டிருந்தது. கை, கால்கள் முகம் முழுவதும் அளவுக்கு அதிகமாக வீங்கியிருந்தது. அப்பாசின் அருகில் அமர்ந்து "அப்பாஸ்! அப்பாஸ்!" என தட்டி எழுப்ப முயற்சி செய்தேன்.

மிகவும் பிரயத்தனப்பட்டு கண்களைத் திறக்க முயற்சி செய்தார். கண்களின் ரப்பைகள் மிகவும் வீங்கியிருந்தன. அப்பாஸ் கண்களைத் திறக்கச் சிரமப்பட்டார். கடைசியில் பிறை போன்று மெல்லிய கீற்றாக கண்களைத் திறந்தவர் என்னை அடையாளம் கண்டு கொண்டது போலத் தோன்றிற்று. நான் நாடித் துடிப்பைப் பார்க்க கை வைத்தேன். நாடியினைத் தொட்டு அறிய முடியாத அளவிற்கு கை வீங்கி இருந்தது. நான் மெல்ல எழுந்தேன்.

"டயபடிக் நெப்ரோபசி வந்து ரீனல் பெய்லியர் ஆயிடுச்சு. சிறுநீரகம் முழுவதும் வலுவிழந்து பழுதடைந்துவிட்டது. என்னைவிட மரணம் அவருக்கு நெருக்கமாக உள்ளது. இனி ஏதும் செய்வதற்கில்லை" ஜான்முகதுவிடம் தனியே தெரிவித்தேன்.

"சரி போகலாம் வாங்க" என்றார் அவர். அப்பாசிடம் சொல்லிக் கொள்வதற்காக அவரை மீண்டும் எழுப்பினேன். இந்த முறை சற்று உடனேயே கண்களைத் திறந்தார்.

"அப்பாஸ் நான் போயிட்டு வர்றேன்; கவலைப்படாதீங்க நல்லாயிடும்" என்று பொய் சொல்லி வைத்தேன்.

சட்டென்று அப்பாஸ் முகத்தில் ஒரு புன்சிரிப்பு பரவியது. ஆயிரம் அர்த்தங்களைச் சொல்லக் கூடியது அந்தச் சிரிப்பு. மெல்ல வாயைத் திறந்து அரபியிலோ, உருதிலோ ஏதோ கூறினார். வார்த்தைகள் தெளிவாக வந்து விழுந்தன. அதுதான் அப்பாஸ் உச்சரித்த



படிப்பகம்

www.padippakam.com

கடைசி வார்த்தைகளாக இருக்கும். எனக்கு அப்பாஸ் என்ன சொன்னார் என அறிய ஆவலாக இருந்தது.

ஜான் முகமதுவின் வீட்டிற்குத் திரும்பியதுமே அப்பாஸ் கூறியது என்ன என அவரிடம் கேட்டேன்.

"இன்னா லில்லாஹி லஇன்னா இலைஹி ராஜிஹுன்; தவக்கல்லத்து அலல்லாஹ்; அல்ஹம்மது இபில்லாஹ்! " என்றார்.

"அப்படியென்றால்?"

"நாம் அல்லாவுக்கே உரியவர்கள். அவனிடமே திரும்பிச் செல்ல இருக்கிறோம். இப்போதும் அந்த அல்லாவின் மீது நம்பிக்கை கொண்டேன். எல்லாப் புகழும் அல்லாவுக்கே" என்பதாகக் கூறினார். எனக்கு அவரிடம் விடைபெற மனமில்லை.

மெல்ல எழுந்து தெருவில் நடக்கலானேன். அவருக்கும் என் மனதின் கேள்விகள் புரிந்திருக்க வேண்டும். மௌனமாக ஆட்டுக் குட்டிகளுடன் அமர்ந்து விட்டார். எனக்குள் மீண்டும் மீண்டும் அதே கேள்விகள்.

இத்தனைக் கஷ்டத்திலும் அப்பாசுக்கு ஏன் கோபம் வரவில்லை?

வசதியான மகனுடன் சேர்ந்து கொண்டு பெற்ற தாய் மறந்த போதும், வளமற்ற சகோதரன் வண்டியிழுத்துப் பிழைத்தபோதும் வருத்தமுறாத சகோதரனை நினைத்த போதும், வாழ வழியற்று விரட்டும் சமூகத்தினை நினைத்த போதும், இறுதி நேரத்தில்கூட ஆறுதல் தராத உறவுகளை நினைத்த போதும், அடிமேல் அடிஅடித்த விதியின் மீதும், அல்லாவின் மீதும், அவர் கூறிய சகோதரத்துவத்தின் மீதும், அதைப் பின்பற்றுவதாகக் கூறிக்கொள்ளும் தன் மதத்தின் மீதும் ஏன் கோபம் வரவில்லை. எப்படி அவருக்கு இந்த நிலையிலும் அல்லாவுக்கு நன்றி சொல்ல முடிந்தது?

யோசித்தவாறு ஏனங்குடியின் நடுத்தெருப் பள்ளி வாசலைக் கடந்த போது அந்த மழையிலும் பகல் தொழுகைக்கான அழைப்பு விடுக்கப்பட்டது.

இது நஞ்சல்லவா? இந்த நஞ்சு அபின் அல்லவா? இது கிறங்க வைக்கும், மயங்க வைக்கும், ஏங்க வைக்கும் நஞ்சல்லவா?

இதைச் சொன்ன கம்யூனிசத் தத்துவத்தையா தோற்றுப் போனதாகக் கூறுகிறார்கள்? உண்மை எப்படித் தோற்கும்?

மழையின் இரைச்சல் கூடியது. பாங்கோசை அதில் நனைந்து அடங்கியது. ●

# ● வாசகர் கடிதம் ●

★ "மண்ணுக்கேற்ற மார்க்சியமா, மரபுவழி மார்க்சியமா" என்ற கட்டுரை சிறப்பாக இருந்தது. கட்டுரையை தொடராக வெளியிட்டு இன்னும் அதிக விசயங்களை சொல்லியிருக்கலாம். அப்படி தொடர்வதற்கான வசதி இருந்தால் நல்லது என்று நினைக்கின்றேன்.

— முத்து, விக்கிரமசிங்கபுரம்.

★ சென்ற இதழில் 'தலிப்பு' பற்றிய தங்கள் விமர்சன உரை படித்தேன். நானும் ஆனந்த விகடனில் தொடர்ச்சியாய் வாசித்தேன். எனக்குள் நிறைய கேள்விகள். அதற்கெல்லாம் ஆழமான விரிவான விமர்சனக் கட்டுரை மூலம் தெளிவுபடுத்தி விட்டீர்கள். உங்கள் உரையின் ஒரு பத்தியைக் கருவாகக் கொண்டு என் நண்பர்களுக்காக எழுதியுள்ளேன்.

முகமூடி
நம் முகங்களின் மீது
எத்தனை முகமூடிகள்?
சாதிய முகமூடி கலைகிறபோது
இரத்த உறவுகள் பதறும்
அந்தஸ்து முகமூடி கலைகிறபோது
'மாருதி' கனவு கலைக்கப்படும்.

மதமுகமூடி கலைகிறபோது
மகுதிகள் நடுக்கத்தில் உளறும்;
கலிகாலம் முற்றிப்போனதாய்,
சங்கரமடம் குதிக்கும்.
உலகம் அழியப் போவதாய்,
சர்ச்சுகள் மிரட்டும்.

முகமூடிகளை காதலித்த நாம்
உண்மை முகத்திற்காய்
கவலை கொள்ளவில்லை.

முகமூடிகளை களைவதில்தான்
நம் சுதந்திரத்தின்
சூட்சுமம் இருக்கிறது.
என் 'மனித முகம்'
காணும் முயற்சியில்
நான் இருக்கிறேன்.
நீங்கள்?

— இரா. முனியசாமி, மாணவர், மதுரை.

★ நேர்வழி பெற்றவர்கள் மீது சாந்தி உண்டாவதாக! சென்ற இதழில் "சிறுபான்மையினருக்கு எதிரான ஆர்.எஸ்.எஸ்.-இன் பொய்யும் புரட்டும்" தொடர் கட்டுரை ஆரம்பித்திருக்கிறீர்கள். வாழ்த்துக்கள்! அதில் "எனவே அனைத்து மதங்களும் பெண்களை போகப் பொருளாக வைப்பதற்கு விதித்திருக்கும் பூ, பொட்டு, பர்தா போன்றவைகளை ஒழிக்க வேண்டும்", என்று எழுதியிருக்கிறீர்கள்.

பர்தா பற்றிய உங்கள் கருத்துடன் நாங்கள் முரண்படுகிறோம். பர்தா என்பதற்கு திரை என்று பொருள். அதைத் தமிழ்ப்படுத்தி போட்டிருந்தால் "பர்தா என்பது அழகுக் கலையும் அல்ல, போகப் பொருளும் அல்ல" என்பதை நீங்களே விளங்கியிருக்கக் கூடும். கணவன் மட்டுமே சொந்தம் கொண்டாடத்தக்க உடலழகை மறைக்க வேண்டிய திரை ஒரு போதும் போகப் பொருளாக அமையாது.

இஸ்லாம் என்பது ஒரு இனமோ, மதமோ அல்ல. அது வாழ்க்கைத் திட்டம் பற்றிய ஒரு கொள்கை. பிறப்பால் மட்டுமே ஒருவன் கம்யூனிஸ்டாக மாற முடியாதோ, அதேபோல இஸ்லாமிய கொள்கையை ஏற்று நடைமுறைப்படுத்தியவன் மட்டுமே முஸ்லீம். தமிழில் கட்டுப்பட்டவன் என்று பொருள். முஸ்லீமுக்குப் பிறந்தவன் குடிகாரன் கொலைகாரன் என்றால் அவனும் முஸ்லீமா?

இனிவரும் காலங்களில் அனைத்து மதங்களையும் எதிர்க்கிறோம் என்ற பெயரில் இஸ்லாத்தை உள்ளடக்காதீர்கள். இஸ்லாம் நடைமுறைக்கான ஒரு அனுபவபூர்வ மார்க்கம். அது விஞ்ஞான உண்மைகளுடன் ஒரு போதும் முரண்பட்டதில்லை.

சேலைதான் போகப் பொருள் என்பதை மீண்டும் வலியுறுத்துகிறேன். வேகமாகச் செல்லும் ஆட்டோக்களில் பெண்களின் சேலை முந்தானை பறப்பதை பஸ் நிறுத்தத்தி லிருந்து பார்க்கலாம். இரண்டு சக்கர வாகனங்களின் பின்பகுதியில் அமர்ந்திருக்கும் பெண்களை பின் தொடர்ந்து வருபவர்கள் 'ஹெட் லைட்' ஒளியின் துணை கொண்டு பார்க்கலாம். பஸ் ஜன்னல் கம்பிகளின் மேல் கை வைத்திருக்கும் பெண்களையும் பார்த்திருப்பீர்கள். இதுபோல இன்னும் ஏராளம் உண்டு.

போகப் பொருளாக உள்ளதில் தலையாயது தாவணி, சேலைதான் என்பதை மீண்டும் வலியுறுத்துகிறேன். பர்தா என்பது ஒரு கருப்பு ஆடை மட்டுமல்ல. அதையும் ஒழுங்காக போடவில்லையென்றாலும் அது பர்தா (திரை) இல்லை. பர்தா பற்றி தெளிவாக அறிந்து கொள்ள இஸ்லாமிய அறிஞர்களின் தமிழ், ஆங்கில நூல்களைப் பார்க்கவும். மேலும் விபரங்களுக்கு, கீழ்க்கண்ட இணையத் தளத்தை (வெப்சைட்) பார்க்கவும்.

http://soundvision.com/news/hjb.non muslim.shtml

— ஹாஜா மொகைதீன், திருச்சி.

● ஆசிரியர் குறிப்பு:

தாவணியை ஊடுருவிப் பார்க்கும் கண்கள் பர்தாவை என்ன சாக்குத் துணியைப் போர்த்தினாலும் ஊடுருவிப் பார்க்கும். பிரச்சினை ஆண்களின் கண்ணிலா, பெண் அணியும் திரையிலா என்பதே கேள்வி. இசுலாமியப் பிற்போக்குத்தனங்கள், பழமைவாதம் பற்றி நாம் பல கோணங்களில் எழுதியுள்ளோம். பழமைவாதிகள் யாரும் அதற்கு நேர்மையாகப் பதிலளித்ததில்லை.

இஸ்லாமைப் பற்றி அறிய இன்டெர்நெட் முகவரியெல்லாம் தந்துள்ளார் இவ்வாசகர். அதைக் காட்டிலும் இங்குள்ள ஏழை முஸ்லீம்களும், பெரும் பணக்கார முஸ்லீம்களும் மதத்திற்கு தங்கள் அன்றாட வாழ்வில் என்ன முக்கியத்துவம் அளித்திருக்கிறார்கள் என்பதை அறிவது நல்லது. அத்தகைய அனுபவங்களை வாசகர்கள் எழுதலாம். ●



படிப்பகம்

www.padippakam.com

தொடர் கட்டுரை - 2

## சிறுபான்மையினருக்கு எதிரான ஆர்.எஸ்.எஸ்.-இன் பொய்யும் புரட்டும்

# வந்தே மாதரமும் கோவில் உண்டியலும்

*"சுதந்திரப் போராட்டக் காலத்தில் தேசபக்தர்களுக்கும், தூக்குக் கயிற்றில் தொங்கிய தியாகிகளுக்கும் உயிர் கொடுத்த மந்திரச்சொல் 'வந்தே மாதரம்'. தன்னிகரல்லா பாரதத்தாயின் மீது பக்தியையும், அன்பையும் தாண்டி எழுச்சியைத் தோற்றுவிக்கும் 'வந்தே மாதர' தேசிய கீதத்தை கிறித்தவர்களும், முஸ்லீம்களும் பாட மறுக்கிறார்களே ஏன்?"*

—ஆர்.எஸ்.எஸ்.இன் நீண்ட கால அவதூறுகளில் இதுவும் ஒன்று. மேலும் பா.ஜ.க ஆளும் மாநிலங்களில் உள்ள பள்ளிகள் மற்றும் அரசு அலுவலகங்களில் வந்தே மாதரத்தைக் கட்டாயமாகப் பாடும் நடைமுறையை அவர்கள் ஏற்கனவே ஆரம்பித்து விட்டார்கள். வந்தே மாதரத்தைப் பாட மறுக்கும் சிறுபான்மையினரைத் தேசத் துரோகிகள் என்று பெரும்பான்மை மக்கள் எளிதில் ஏற்கும் வண்ணம் பிரச்சாரமும் செய்து வருகிறார்கள். ஆகையால் வந்தேமாதரத்தையும் நாட்டுப்பற்றையும் இணைத்து இந்து மதவெறியர்கள் போட்டிருக்கும் இந்தப் பொய் முடிச்சை நாம் அவிழ்க்க வேண்டும்.

### நாட்டுப் பற்று ஜெபத்திலா, சிறையிலா?

ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராடியவர்களின் பெருமை, அவர்கள் ஒவ்வொரு நாளும் வந்தே மாதரத்தை உச்சாடனம் செய்தார்களா என்பதில் இல்லை; தடியடி, சிறை, தூக்கு இன்னபிற கொடுமைகளை ஏற்றுக் கொண்டு தளராமல் போராடியதில்தான் இருக்கிறது அவர்களது பெருமை. அதைத்தான் நாட்டுப்பற்று எனக் கூற முடியும். அதேசமயம் வெள்ளையர்கள் இருக்கும்வரை 'ஷாகா' சென்று கபடி விளையாடிய ஸ்வயம் சேவகக் குஞ்சுகள், ஒவ்வொரு நாளும் 'வந்தே மாதரம்' பாரத் மாதாகி ஜெய்' இரண்டையும் ஜெபம் செய்தார்களே ஒழிய, சுதந்திரப் போராட்டத்திற்காகத் தமது சுட்டு விரலைக் கூட அசைக்க வில்லை. சிறைக் கம்பிகளைக் கூட கண்டிராத கோழைகளும், துரோகிகளுமான இந்து மதவெறியர்கள், வந்தே மாதரத்தின் ஊடாக நாட்டுப்பற்றைப் பற்றிப் பேசுவதற்கு என்ன அருகதை இருக்கிறது?

பாரதமாதா கிடக்கட்டும், பாரதம் என்று இன்று அறியப்படும் இந்தியாவே உருவாயிராத காலம்தான் 19 - ஆம் நூற்றாண்டு. பல்வேறு வழிமுறைகளில் ஆட்சியதிகாரத்தை வெள்ளையர்கள் கைப்பற்றிக் கொண்டிருந்த காலம் அது. அதனால் அதிகாரமிழந்தவர்கள் அவர்களை எதிர்ப்பதும், அதிகாரம் பெற்றவர்கள் ஆதரிப்பதும் இடத்துக்கிடம் மாறுபட்டது. உதாரணத்திற்கு மராத்திய சிவாஜிக்குப் பின், பேஷ்வாக்களின் ஆட்சியில் தக்காணம் முழுவதையும் பார்ப்பன மேல்சாதி நிலப்பிரபுக்களும், வியாபாரிகளும் ஆண்டு அனுபவித்தனர். ஆங்கிலேயரின் வரவு பேஷ்வா ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வந்தது. தமது சமூக மேலாண்மை பறிபோனதைக் கண்ட மராத்திய சித்பவனப் பார்ப்பனர்கள், வெள்ளையர்களை எதிர்க்கத் துவங்கிய சூழ்நிலை இதுதான். திலகர், கோகலே, சாவர்க்கர் போன்ற சித்பவனப் பார்ப்பனர்கள் பிரிட்டிஷ் எதிர்ப்பாளர்களாக உருவான விதமும் அப்படித்தான்.

### ஆங்கிலப் பிதாவிடம் 'வங்கமாதா' காதல்!

மராத்திய நிலைமை இப்படியிருக்க வங்கத்தின் நிலைமை நேரெதிராக இருந்தது. மொகலாயர் ஆட்சிக்குப்பின்னால் வங்கத்தை ஆண்ட முசுலீம் நவாப்புகள், ஜமீன்தார்கள் ஆட்சியில் - பார்ப்பன மேல்சாதியினர் தமது அதிகாரத்தை இழந்து தவித்தனர். நவாப்புகளை முறியடித்த ஆங்கிலேயர்களை அவர்கள் நெஞ்சார வாழ்த்தி வரவேற்றனர். இந்தச் சூழ்நிலையை வைத்து சென்ற நூற்றாண்டின் இறுதியில் பங்கிம் சந்திர சட்டர்ஜி என்ற பார்ப்பனர் 'ஆனந்த மடம்' என்ற நாவலை எழுதினார். முசுலீம் அரசர்களை எதிர்த்து இந்துச் சாமியார்கள் போராடுவதைக் கூறும் இக்கதையில் தான் 'வந்தே மாதரம்' (தாய்க்கு வணக்கம்) என்ற பாடல் வருகிறது. காளி, துர்க்கை, சரஸ்வதி, லட்சுமி என்று தாயை விளிக்கும் 'வந்தே மாதரம்' இப்படித்தான் தோன்றியது.

"நம்முடைய நவாபின் ராஜ்யபரிபாலனத்தைப் பாரும். மதம் போய்விட்டது; சமூகம் போய்விட்டது; மானம் போய்விட்டது; குலம் போய்விட்டது; இப்போது பிராணனும் போய்க் கொண்டிருக்கிறது..." இவை 'ஆனந்த மடம்' நாவலில் வரும் வசனங்கள். இதில் யாருடைய மதம் - சமூகம் - மானம் - குலம் - பிராணன் போய்விட்டது என்பதை வாசகர்கள் புரிந்து கொள்ளலாம். அதனால்தான் முசுலீம் அரசர்களிடமிருந்து வங்கத்து மாதாவை விடுதலை செய்த 'ஆங்கிலப் பிதாவை' அன்றைய வங்கத்துப் பார்ப்பன மேல் சாதியினர் மனதார வாழ்த்தினர். வந்தே மாதரத்தின் தோற்றத்திலேயே நாட்டுப்பற்றுக்கு இடமில்லை!

அதன் பின்னரே வங்கத்து வந்தே மாதரம் ஆங்கிலப் பிதாவை எதிர்ப்பதற்காக பாரதமாதாவாக மறுபிறவி எடுத்தது. இந்த பாரதமாதா பஜனையை விடுதலைப் போராட்டத்தில் திணித்தது காங்கிரசு கும்பலின் கைங்கர்யமாகும். இந்திய அளவில் இந்து மதமும், பாரதமாதாவும் உருவாக்கப்பட்டு வந்த நிகழ்ச்சிப் போக்கும், காங்கிரசின் பார்ப்பன மேல் சாதித் தலைவர்களும் அவர்களின் பார்ப்பனிய இந்துத்துவக் கருத்தும் 'வந்தே மாதரத்தை'ப் பயன்படுத்திக் கொள்ள ஏதுவாக இருந்தன.

### பஜனை நாட்டுப்பற்று எங்கேயுமில்லை!

இந்த இடத்தில் வாசகர்கள் கொஞ்சம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். பிரிட்டன், போர்ச்சுகல், ஸ்பெயின், பிரான்சு, இத்தாலி, ஜெர்மனி, ஜப்பான் போன்ற ஏகாதிபத்தியங்களின் ஆதிக்கத்தின் கீழ் பல ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகள் இருந்திருக்கின்றன. ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டங்களின் மூலம் விடுதலையும் அடைந்திருக்கின்றன.

அந்நாட்டைச் சேர்ந்த மக்கள் கிறித்துவம், இசுலாம், பவுத்தம் என்ற பலவிதமான மதநம்பிக்கை கொண்டவர்களாகவே இருந்திருக்கின்றனர். லிபியாவின் ஓமர் முக்தார் தனிப்பட்ட முறையில் ஆழ்ந்த இசுலாமிய மதப்பற்று கொண்டவர்; துருக்கியின் கமால் பாஷாவோ மதச் சார்பற்றவர்.

சீனாவை ஆக்கிரமித்த ஜப்பானும், அடிமைப்பட்ட சீனாவும் பவுத்தமத நம்பிக்கை கொண்ட நாடுகள்தான். அமெரிக்க - ஐரோப்பிய ஏகாதிபத்திய நாடுகளின் மதமும், அடிமைப்படுத்தப்பட்ட லத்தீன் அமெரிக்க நாடுகளின் மதமும் கிறித்தவம்தான்.



படிப்பகம்

www.padippakam.com

அடிமைப்படுத்தப்பட்ட நாடுகளின் மக்கள் தம்நாட்டைத் தாய்நாடென்றோ தந்தையர் நாடென்றோதான் அழைத்தார்கள். ஆனால் யாரும் கன்னி மேரியைப் போலவோ, ஏசுவைப் போலவோ, புத்தரைப் போலவோ ஒரு படம் வரைந்து வைத்து சூடம், சாம்பிராணி காட்டி, இந்தப் படத்துக்கு பஜனை பாடுபவன்தான் உண்மையான நாட்டுப் பற்று கொண்டவன் என்று கூறவில்லை.

ஒரு மதத்தினர் மட்டுமே வாழும் நாடுகளில் கூட நடக்காத இந்தப் பித்தலாட்டம், பல மதத்தினர் வாழும் இந்தியாவில் நடந்தது.

**ரவிவர்மாவின் லட்சுமி**
**காங்கிரசின் பாரத மாதா**

கோயில்களில் அம்மணமாக நிற்கும் பெண் கடவுள்களை மாதிரியாகக் கொண்டு, அந்தப் பெண் உருவங்களுக்கு பார்ப்பன, உயர்சாதி மாமிகளின் பாணியில் சேலை கட்டி ''இதுதான் லட்சுமி, சரஸ்வதி, பார்வதி'' என்று வரைந்து தள்ளினார் திருவிதாங்கூர் மன்னர் பரம்பரையைச் சேர்ந்த ஓவியர் ரவிவர்மா இப்படி 'மாதா'க்களை உருவாக்கிய மன்னர் பரம்பரைதான் கடைசிவரை வெள்ளையனின் விசுவாச அடிமையாக இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

முதுகில் நாலு கை முளைத்த லட்சுமிதான் பாரதமாதா; இந்துப் பெண் தெய்வத்தை வருணிக்கும் பாடல்தான் 'விடுதலைக் கீதம்' என்று சொன்னால் அது பிற மதத்தினரை வெறுப்படையச் செய்யாதா?

இப்படித்தான் விடுதலைப் போராட்டத்திலிருந்து மதத்தின் பெயரால் முசுலீம் மக்களைத் தனிமைப்படுத்தும் போக்கை காங்கிரசுக் கும்பல் ஆரம்பித்து வைத்தது. உருவ வழிபாடில்லாத, ஓரிறைக் கோட்பாட்டில் நம்பிக்கை கொண்ட கிறித்தவ, இசுலாமிய மதங்களைச் சேர்ந்த மக்கள் வந்தே மாதரம் பாடுவதன் மூலம் இந்துத் தெய்வங்களை வணங்க வேண்டும் என்பது இந்துமத வெறியர்களின் குரூரமான விருப்பம். பாட மறுக்கும் போது தேசவிரோதிகள் என்று பிரச்சாரம் செய்வது அவர்களது பாசிச நோக்கம் நிறைவேற்றுவதற்கான வாய்ப்பு.

**'பாரத மாதாவை'**
**விற்பவர்கள் யார்?**

ஒரு நாடு என்பது அங்கு வாழும் மக்களை மட்டும்தான் குறிக்கும். நாட்டுப்பற்று என்பது அம்மக்களின் நலனில் அக்கறை கொண்டிருப்பதை மட்டும் குறிக்கும். மக்களையும், அவர்கள் நலனையும் பற்றிக் கவலைப்படாத இந்து மதவெறியர்கள்தான் நாட்டை தெய்வம், படம், பூசை என்று சடங்கு முறையாக்கும் ''தேசபக்தி''க்குச் சொந்தக்காரர்களாக இருக்கிறார்கள். ஆகையால் நாட்டை தெய்வமாக்குவதை அதுவும் பார்ப்பனத் தெய்வமாக மாற்றுவதை அனைவரும் எதிர்க்க வேண்டும்.

ஆகாசவாணியின் விடிகாலை ஒலிபரப்பில் கீறல் விழுந்த ரிக்கார்டாக ஒலித்துவந்த வந்தே மாதரத்தை, பிரேக் டான்சின் வலிப்புக்கேற்ப பாப்பிசை 'வண்ட்டே மாட்றம்' ஆக சோனி நிறுவனம் உலகெங்கும் வெளியிட்டிருக்கிறது. இன்னொருபுறம் மேல்நிலை வல்லரசுகளுக்காக நாட்டையே காட்டிக்கொடுத்து விற்கும் தரகனாக பா.ஜ.க அரசு செயல்பட்டு வருகிறது. இப்படி அரசியலிலும்

> ''ஒரு நாடு என்பது அங்கு வாழும் மக்களை மட்டும்தான் குறிக்கும். நாட்டுப்பற்று என்பது அம்மக்களின் நலனில் அக்கறை கொண்டிருப்பதை மட்டும் குறிக்கும். மக்களையும், அவர்கள் நலனையும் பற்றிக் கவலைப்படாத இந்துமத வெறியர்கள்தான் நாட்டை தெய்வம், படம், பூசை என்று சடங்கு முறையாக்கும் 'தேசபக்தி'க்குச் சொந்தகாரர்களாக இருக்கிறார்கள்.''

பண்பாட்டிலும் பொருளாதாரத்திலும் ''பாரத மாதா''வை விற்பவர்கள் முசுலீம்களோ, கிறித்தவர்களோ அல்ல!

★☆★

**ஆலயக் கொள்ளையில்**
**பங்கு கேட்கும் இந்து முன்னணி**

*''மசூதி - சர்ச் போன்றவற்றின் சொத்துக்கள் கிறித்தவ முசுலீம் மதத்தினர் வசமே உள்ளது. ஆனால் இந்துக் கோவில்களின் சொத்துக்களை மட்டும் அரசு வைத்திருக்கிறது. கோவிலுக்காக பக்தர்கள் செலுத்தும் வருவாயை அரசின் அனைத்துத்திட்டங்களுக்கும் செலவழிக்கிறார்கள். வெளிநாட்டுப் பணத்தின் உதவியால் மசூதிகளும், சர்ச்சுகளும் புதிது புதிதாகத் தோன்றும் போது, இந்துக்களின் கோவில்கள் மட்டும் பூசைக்குக் கூட வழியில்லாமல் தவிக்கிறது. எனவே கோவில் சொத்துக்களை மீண்டும் இந்துக்களிடமே ஒப்படைக்க வேண்டும். இந்துக் கோவில்கள், மடங்கள், ஆசிரமங்கள் அனைத்திற்கும் வருமான வரி விலக்கு அளிக்கப்பட வேண்டும்.''*

**—இந்து முன்னணியின் மேடைகளில் இராம. கோபாலன் தவறாமல் முன்வைக்கும் ஒரு முழக்கம்.**

ஈரேழு பதினாலு உலகங்களைப் படைத்த கடவுளுக்கு, மனிதன் விளைநிலங்களைப் பட்டா போட்டுத் தருவதும், அதைவைத்து கடவுள் கஞ்சி குடிப்பதும் எத்தகைய வேடிக்கை! பக்தர்கள் சிந்திக்கட்டும். அப்படி கடவுளர்களுக்கு எழுதி வைக்கப்பட்ட சொத்தில் மதப்பாகுபாடு இருப்பது பற்றித்தான் இந்து முன்னணி முறையிடுகிறது.

**சொத்துக்களுக்கு**
**மதங்களில்லை**

மதங்களுக்குரிய சொத்துக்களை அந்தந்த மதத்தைச் சார்ந்த ஆட்சியாளர்கள் மட்டுமல்ல, ஏனைய மதங்களைச் சார்ந்தவர்களும் அளித்திருக்கின்றனர். மசூதிகள், தர்ஹாக்களின் சொத்துக்கள் நவாப்புகள், குறுநில இந்து மன்னர்களால் கொடுக்கப்பட்டன. கிறித்தவ நிறுவனங்களுக்குரிய சொத்துக்கள், இந்து மன்னர்கள் மற்றும் ஆங்கிலேயர்களால் தரப்பட்டவை. இந்துக் கோவில்களுக்கு நகையும், நிலமும் இந்து, முஸ்லீம் மன்னர்களால் அளிக்கப்பட்டன. விளைநிலங்களில் கணிசமான அளவும், பல ஆயிரக்கணக்கான கிராமங்களின் வருவாயும் — அதாவது கோடிக்கணக்கான மக்களின் உழைப்பும் — பல்வேறு மன்னர்களால் பெரும் கோவில்களுக்கு கொடுக்கப்பட்டன. இந்து மதவெறியர்களால், இசுலாமிய மதவெறியராகச் சித்திரிக்கப்படும் மொகலாய மன்னரான ஔரங்கசீப், பலநூறு இந்துக் கோவில்களுக்கும், பார்ப்பனர்களுக்கும் மானியம் அளித்ததைப் புள்ளி விவரங்களுடன் வரலாறு தெரிவிக்கிறது.

**கோவில் கொள்ளை**
**நிறுத்தப்பட்ட வரலாறு**

இந்திய உழைக்கும் மக்களின் உழைப்பில் உருவான கோவில் சொத்துக்களை அறங்காவலர் என்ற பெயரில் பார்ப்பன மேல்சாதியினர்தான் பல நூறு ஆண்டுகளாக அனுபவித்து வந்தனர். தமிழ்நாட்டைப் பொறுத்தவரை கொள்ளையடிக்கப்படும் கோவில் சொத்துக்களைப் பாதுகாக்க, 1930-களில் நீதிக் கட்சி ஆட்சியின் போது அரசு சார்பிலான இந்து அறநிலயத்துறை உருவாக்கப்பட்டது. அப்போதுதான் பல கோவில்


படிப்பகம்

www.padippakam.com

களின் வருவாய் எவ்வளவு அதிகமென்பதும், இதுநாள் வரை அவை கொள்ளை போன கதையும் வெளிஉலகிற்குத் தெரியவந்தது.

அதுவும் தமிழ்நாடு, மற்றும் கேரளாவில் மட்டும்தான் அரசு அறநிலயத் துறை ஆரம்பிக்கப்பட்டு கோவில் சொத்துக்கள் பாதுகாக்கப்பட்டதே ஒழிய, ஏனைய மாநிலங்களில் இன்றளவும் கொள்ளை தொடருகிறது. இங்கும் கூட அறநிலயத்துறை அதிகாரிகளுடன் கூடவே பரம்பரை அறங்காலவர்கள் என்ற பெயரில் முன்னாள் மன்னர்கள், ஜமீன்தார்கள், மடாதிபதிகள், பார்ப்பன மேல் சாதியினர் முந்தைய கொள்ளையை முடிந்தவரை தொடரத்தான் செய்கின்றனர்.

மேலும் கோவில் சொத்துக்களுக்கு நிகராக சங்கர மடங்கள், திருவாடுதுறை, தருமபுரம், திருப்பனந்தாள், மதுரை, குன்றக்குடி போன்ற ஆதீனங்களுக்கும் ஏராளமான சொத்துக்கள் உள்ளன. இம் மடங்களுக்கு காசி முதல் கன்னியாகுமரி வரை நூற்றுக்கணக்கான கிளை மடங்களும், பல்லாயிரம் ஏக்கர் விளை நிலங்களும், பல நகரங்களில் கட்டிடங்களும் சொந்தமாக உள்ளன. பார்ப்பன மேல்சாதியினர் அனுபவித்து வரும் இச்சொத்துக்களை இன்றுவரை அரசு எடுக்கவில்லை என்பது முக்கியம். நில உச்சவரம்பு சட்டத்தின் கீழ் இம்மடங்கள் மட்டும் விலக்குப் பெற்றுள்ளன. 'உழுபவனுக்கே நிலம் சொந்தம்' என்ற இந்திய விவசாயிகளின் உயிராதாரமான போராட்டம் இத்தகைய மத நிறுவனங்களுக்கு எதிராகவும் நடத்த வேண்டியிருக்கிறது.

### மக்கள் பணம் வீணடிப்பது யார்?

அரசாங்கம் இந்துக் கோவில்களின் வருவாயை எடுத்து பொது நலத்திட்டங்களுக்கு செலவழிக்கிறது என்பதற்கு எவ்வித ஆதாரமும் இல்லை; உண்மையும் இல்லை. ஆனால் எதிர்காலத்தில் அப்படித்தான் செலவழிக்கப்பட வேண்டும் என்கிறோம். மாறாக தேர்த்திருவிழா, மகாமகம், கும்பமேளா, குடமுழுக்கு போன்ற விழாக்களுக்கும் காசி, பத்ரிநாத் போன்ற யாத்திரைகளுக்கும், இப்போது இந்து முன்னணியினரின் விநாயகர் ஊர்வலத்துக்கும் அரசாங்கம்தான் பொதுப்பணத்தை அள்ளி வீசுகிறது; பாதுகாப்பு, சுகாதாரம், விபத்துகளுக்கான நட்ட ஈடு என்ற பெயரில் மக்களின் வரிப்பணம் கோடிக்கணக்கில் கொட்டப்படுவதைத் தடை செய்வதுதான் சரியானது.

### பக்தியில் பிழைப்புவாதம்

பல கோவில்களில் பூசைக்கே வழியில்லாமல் போனதற்கு பக்தர்களின் புறக்கணிப்புத்தான் காரணமே ஒழிய அரசாங்கம் அல்ல. திருப்பதி, சபரிமலை, பழனி, திருச்செந்தூர் போன்ற பணக்கார சாமிகளுக்கு அள்ளி வழங்கும் பக்தர்கள், வௌவால் குடியிருக்கும் பல கோவில்களை எட்டிப்பார்ப்பதில்லை. இறைவழிபாட்டிலும் பிழைப்புவாதம் வந்து விட்டதற்கு அரசாங்கமோ, சிறுபான்மை மக்களோ என்ன செய்ய முடியும்? மேலும் கோவில் நிலங்கள், கடைகளுக்குரிய குத்தகைவாடகை பாக்கியை வைத்திருப்பவர்கள் பட்டை போட்ட இந்து பக்தர்கள்தான், நாத்திகம் பேசுபவர்கள் அல்ல என்று அமைச்சர் தமிழ்க்குடிமகனே தெளிவு படுத்தியிருக்கிறார்.

> ''சமீபகாலமாக அறநிலையத் துறையின் பூசாரிகள் - கோவில் ஊழியர்கள், தங்களை அரசு ஊழியரராக்கவும், ஊதிய உயர்வுக்காகவும் போராடி வருகிறார்கள். போராட்டத்தில் இறைவனையே பட்டினி போடவும் துணிந்து விட்டார்கள் அர்ச்சகர்கள். அறநிலையத் துறையை ஒழித்து, தனியார் இந்துக்களிடம்தான் கோவில்களை ஒப்படைக்க வேண்டும் என்று அவர்களிடம் இந்து முன்னணி தெரிவிக்கட்டுமே! கோவிலையே இடித்து விடுவார்கள்.''

இன்னும் சமீபகாலமாக அறநிலையத் துறையின் பூசாரிகள் - கோவில் ஊழியர்கள், தங்களை அரசு ஊழியராக்கவும், ஊதிய உயர்வுக்காகவும் போராடி வருகிறார்கள். வேலை நிறுத்தம் செய்து இறைவனையே பட்டினி போடவும் துணிந்து விட்டார்கள் அர்ச்சகர்கள். அறநிலயத்துறையை ஒழித்து, தனியார் இந்துக்களிடம் தான் கோவில்களை ஒப்படைக்க வேண்டும் என்று அவர்களிடம் இந்து முன்னணி தெரிவிக்கட்டுமே! கோவிலையே இடித்து விடுவார்கள்.

மசூதி, சர்ச் இவற்றின் சொத்து மட்டும் அம்மதங்களைச் சேர்ந்தவர்களிடம் இருக்கலாமா என்ற கேள்விக்கு ''கூடாது'' என்பதுதான் நமது பதில். அங்கும் ஒரு பிரிவு மேட்டுக்குடியினர்தான் சொத்துக்களைச் சுகபோகமாக அனுபவித்து வருகின்றனர். எனவே எம்மதமாக இருந்தாலும், அவற்றின் சொத்துக்களைப் பறிமுதல் செய்து மக்கள் உடமை ஆக்க வேண்டும்; இறைவனை சொந்தக் காலில் நிற்கச் செய்ய வேண்டும் என்கிறோம்.

### மதக் கம்பெனிகள் கோரும் வரிவிலக்கு

பிரேமானந்தா, சாயிபாபா, சந்திரா சுவாமி, தீரேந்திர பிரம்மச்சாரி, கல்கி, சிவசங்கர் பாபா, மேல் மருவத்தூர், ஆனந்த மார்க்கம், அமிர்தானந்தமாயி, சின்மயானந்தா, சித்பவானந்தா ரமண, மகரிஷி, யோகிராம் சூரத் குமார், ராமகிருஷ்ணாமிஷன், விவேகானந்த கேந்திரா, சங்கர மடங்கள், சைவ ஆதீனங்கள் இன்னபிற இந்து மதக் கம்பெனிகள் அனைத்திற்கும் வருமானவரிவிலக்கு வேண்டுமென இந்து முன்னணி கோருகிறது. ஏற்கனவே இக்கம்பெனிகளுக்கு முறையான வரியோ, சோதனையோ கிடையாது; விலக்கு மட்டும் உண்டு. ஹவாலா, அரசியல் தரகு, கல்வி - மருத்துவ வியாபாரம், கற்பழிப்புக்கள், கொலைகள் போன்ற தொழில்களைச் சேமமாக நடத்திவரும் இவர்கள் அனைவருக்கும் வரிபோடுமளவுக்கு வருமானமோ, சொத்துக்களோ இருக்கக் கூடாது என்கிறோம்.

தமது வாழ்க்கைத் தொழிலிலிருந்து ஓரளவிற்கேனும் சுரண்டுபவர்களைத் தெரிந்து கொள்ளும் மக்கள், மத நிறுவனங்கள் கொள்ளையிடுவதை மட்டும் நேரிடையாக உணருவதில்லை. அன்றைய புராதன மதங்கள் அனைத்தும் இன்றைய பன்னாட்டு நிறுவனங்களைப் போன்று வேர் விட்டிருப்பதும் அதனால்தான். ஆக மதம், மடங்கள், அறக்கட்டளைகள், ஆசிரமங்கள் அனைத்தும் கொள்ளையிடுவதற்கான முகமூடிகள் தான்.

நில உச்சவரம்பு, வருமானவரி, சொத்துவரி, கேளிக்கை வரி ஆகியவை மதமல்லாத நிறுவனங்களுக்கும், தனி நபர்களுக்கும் பொருந்தும். இதிலிருந்து ஏமாற்றுவதற்காக பலர் சொத்துக்களை கடவுள் பெயரில் மாற்றி கணக்கு காட்டாமல் அனுபவித்து வருகிறார்கள். எனவே மேற்கண்ட வரிகள் எதுவும் மத நிறுவனங்களுக்குப் பொருந்தாது என்று உறுதியாக அறிவித்தால் என்ன நடக்கும்?

ரிலையன்ஸ் முருகன், டாடா கணபதி, போஃர்டு துர்க்கை, டி.வி.எஸ். பார்த்தசாரதி, ஸ்பிக் அனுமான் என்று எல்லாக் கம்பெனிகளும் கடவுள் பெயரில் அறக்கட்டளை உருவாக்கி ஜாம் ஜாம் என்று கொள்ளையடிப்பார்கள்.

● தொடரும்



படிப்பகம்

www.padippakam.com

## ● குப்பையைக் கிளறாதீங்க! ●



■ மாநகராட்சி விளக்கு
மலடான ஒரு ராத்திரியில்
கருப்பை அள்ளி வந்த
குப்பைகளில் ஒருத்தி
கும்பிடறேன் சாமி!

■ வளை காப்பு போடும்போதே
வரப்போகும் குழந்தைக்காக
புதுசு புதுசா பொருள் வாங்குவீங்க
வயத்துப் புள்ள புரளும் போதும் - நாங்க
அடுத்த நாளு குப்பை பொறுக்க
கிழிஞ்ச கோணி தச்சிகிட்டிருப்போங்க.

■ ஏடெடுத்துப் படிக்கச் சொல்லி
பிள்ளைகளை ஏசுவது உங்க வழக்கம்
ஏடு ஏடாய்ப் பொறுக்கச் சொல்லி
விரட்டுவது எங்கள் குல வழக்கம்.

■ வீடுதங்கா பிள்ளைகளை
தெருப் பொறுக்க லாயக்கென்று
திட்டுவது நீங்கள்
தெருத்தெருவாய்ப் பொறுக்கறதே
வீட்டுக்கு லாயக்கென்று - பிள்ளைகளை
விரட்டுறது நாங்கள்

■ கதவு தாண்டி பொறுக்க வந்தா
திருட்டு பட்டம் கட்டுறீங்க
காவலுக்கு ஆள வச்சு கதகதப்பு ரூமுக்குள்ள
கையை நீட்டி லஞ்சம் வாங்குறீங்க
பொறுக்கித் திங்கிறீங்க.

■ நீங்க தூக்கிப்போடும் கப்புக்காக
ஏக்கமுடன் நிக்கும் எங்களை
பாக்க வச்சி திங்குறீங்க! பார்த்தாலும் திட்டுறீங்க

■ குனிஞ்சு நிமிர்ந்து நாங்க பொறுக்கையில
எங்க இளமைய பொறுக்குறீங்க

■ வெளியே கிடக்கும் குப்பைகளை
அள்ளிப்போக கோணி உண்டு எங்களிடம்
உங்கள் மனசின் உள்ளிருக்கும் குப்பைகளை
அள்ளிப்போக ஐயோ!
கோணி இல்லை எங்களிடம்.

● துரை. சண்முகம்.

ஆசிரியரும் வெளியிடுபவரும்: வி. வல்லபேசன், 3 செகந்நாதபுரம், நான்காவது தெரு, சேத்துப்பட்டு, சென்னை - 600 031.
அச்சிடுபவர்: எழில் பிரிண்ட்ஸ், 110, இரண்டாவது மாடி, 63, ஆற்காடு சாலை, சென்னை - 600 024.
புதிய கலாச்சாரத்தில் வெளியாகும் படைப்புகள் அனைத்தும் சமுதாயத்தில் காணப்படும் உண்மைகளே!

PUTHIYA KALACHARAM
(TAMIL MONTHLY)
REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPER
FOR ... 1997 · Regd. No. IN/Chief PMG-25 / 99
www.padippakam.com

# புயல் மையம்

தேர்தல் காலங்களில்
சூறாவளிச் சுற்றுப் பயணம்

சூறாவளி ஓய்ந்தபின்
வாக்காளர்களின்
பிணங்களின் மீதும்
வாக்குறுதி வழங்க
இன்னொரு பயணம்.

உங்கள்
ஒரு சொட்டுக் கண்ணீர்கூட
வெள்ள அபாயத்தை
அதிகரிக்கக் கூடும்

உங்களால் சாவதைவிடவும்
உங்களால் வாழ்வது கொடிது.

விதைக்க அகழ்ந்த மண்ணையும்
வேரிலேயே பொத்திவைத்து
வியர்வையில் குளிர்விக்கும்
எங்கள் மேல்
எப்படி வந்தது இயற்கையின் சீற்றம்?

மாங்குரோவ் காடுகளை
நீங்கள் மேய்ந்தபோது
அறியவில்லை நாங்கள் -

உங்கள் வங்கிக் கணக்கில்
வலுவாக மையம் கொண்டிருக்கும்
மூலதனம்
வங்காள விரிகுடாவிலிருந்து
எங்களைக் காவு கொள்ளும் என்பதை.

காற்றுக்கு
உயிர்களை சுவாசிக்கவும்
தண்ணீருக்கு
இரத்தத்தைக் குடிக்கவும்
பயிற்றுவித்தது யார் -
நீங்கள்தானே!

புலி எர்ப்பு விசைகூடப்
பொதுவாக இல்லாத
நாடு இது -
விளங்கிக் கொண்டோம்.


தண்ணீர் வடிய வடிய
ஊற்றெடுக்கும் பிணங்களின்
விழிகளில் இருக்கிறது
எங்கள் வெள்ளை அறிக்கை.

எங்கள் சாவுக்கு
என்ன விடை?

தூரத்திலிருந்து பார்ப்பவர்கள்
முணுமுணுக்கிறார்கள் -
''உலகம் அழியப் போகிறது''

உண்மைதான்.
உங்கள் உலகம் அழியத்தான் போகிறது.

● துரை சண்முகம்



படிப்பகம்